பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI


அறிமுகவிலை
20/=

புதுமை : 01 | 22 ஒக்டோபர் 2016 | விதி : 19

## மீண்டும்
# வெட்டுக்கொத்து
## திகிலில் யாழ்ப்பாணம்



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




கால் போன வலியை விட இயக்கத்திற்கு பாரமாகிப் போனேன் என்ற நினைப்புத்தான் ஆஸ்பத்திரியில் முதலில் வந்தது. அது இயக்கத்தின் ஆஸ்பத்திரி, இயக்க ஆட்கள் தான் டொக்டர்களாகவும் உதவியாளர்களாகவும் இருந்தார்கள். படுக்கும் போதும் எழும்பி உட்காரும் போதும் ஏதோ ஒன்று என்னில் குறைந்தது போல உணர்வு இருந்து கொண்டேயிருந்தது. ஓரளவுக்கு வலியெல்லாம் குறைந்த ஓர் இரவில் நான் தேம்பித் தேம்பி அழுதேன். திடீரென்று எல்லோராலும் கைவிடப்பட்ட ஒரு அனாதையைப் போலானதாக உணர்ந்தேன்.

ஆனால் இயக்கம் என்னைப் பாரமாக நினைக்கவில்லை. ஆஸ்பத்திரியில் கைகளையும் கால்களையும் இழந்தவர்கள், இடுப்பிற்கு கீழே இயங்காதவர்கள் என்று நிறைய பேருக்கு சிகிச்சை நடந்தது. அவர்கள் எவரையும் இயக்கம் பாரமாக நினைக்கவில்லை. அவர்கள் என் தோள்களின் இடுக்குகளில் ஊன்று கோல்களை வைத்து பின்னேரப் பொழுதுகளில் ஆஸ்பத்திரி வளாகத்தில் நடை பழகினார்கள். ஒண்டுக்குப் போவதென்றாலும் துணைக்கு ஆட்களை அனுப்பினார்கள்.

காயம் முழுவதுமாகக் குணமாகியிருந்தது. முழங்காலுக்கு கீழேயே துண்டாகியிருப்பதால் செயற்கைக் கால் பொருத்துவதில் சிக்கல் இல்லை யென்றும் கொஞ்சம் நாள் செல்லட்டும் என்றும் ஆஸ்பத்திரியில் சொன்னார்கள். நான் முகாமுக்கு வந்தேன்.

செயற்கைக் கால் பொருத்தப்பட்ட பிறகும் என்னால் ஊன்று கோல் இன்றி நடந்து விட முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ஊன்று கோலைக் கைவிட்டு நடந்து பழக வேண்டியிருந்தது. அப்படி முயற்சித்த போது முழங்காலில் வலி பீறிட்டுக் கிளம்பியது. நடக்கும் பொழுது உடல் சமநிலை குலைந்திருந்தது. பொருத்திய காலைத் தூக்கி ஓர் அடி முன்னால் வைப்பதற்குள் உயிர் போய் வந்தது. நித்திரையால் எழுகின்ற சமயங்களில் கால் இல்லை என்ற நினைப்பு இருப்பதில்லை. சட்டென்று எழுந்து இரண்டு மூன்று தடவை விழுந்திருக்கிறேன். அழுகை முட்டிக் கொண்டு வரும். திடீரென்று நடந்தே தீருவது என்றொரு வன்மம் வரும். ஊன்று கோல்களைத் தூர எறிந்து விட்டு முழங்கால் வலிக்க வலிக்க நடப்பேன்.

ஆறாவது மாதம் ஜீன்சும் சப்பாத்தும் அணிந்து நடந்ததால் எனக்குக் கால் இல்லை என்று எவருக்கும் தெரியாதபடிக்கு நடக்கத் தொடங்கினேன்.

என்னை அரசியற் துறைப் பிரிவில் இணைத்திருந்தார்கள். எந்தச் சண்டைப் படிப்பை வெறுத்து ஒதுக்கியிருந்தேனோ அதற்குத் தேவையான புத்த கங்களை வெளியிடுகிற பிரிவில் முதலில் பணியாற்றச் சொன்னார்கள். போதாதென்று அரசியற் படிப்பென்ற ஒன்றும் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டது.

அரசியல் வகுப்பின் முதல் நாள் "யுத்தம் என்றால் என்ன? அரசியல் என்றால் என்ன ?" என்றொரு கேள்வியை படிப்பிக்க வந்தவர் என்னைப் பார்த்துக் கேட்டார். நான் எழுந்து நின்று யோசித்தேன், பிறகு யுத்தம் என்றால் அடிபடுறது, அரசியல் என்றால் அடிபாட்டை நிப்பாட்டிப் போட்டு பேச்சு வார்த்தைக்குப் போறது" என்று சொன்னேன்.

பதிலுக்கு அவர் இப்படிச் சொன்னார், "யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல். அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்"

அந்தக் கணத்தில் அளம்பிலில் என் காலுக்கு குண்டெறிந்த ஆமிக்காரன் மேலே எனக்கு ஆத்திரம் பத்திக் கொண்டு வந்தது."உன்னாலை தானடா இந்தக் கோதாரியெல்லாம்" என்று நான் பற்களை நறுமினேன். பக்கத்தில் இருந்தவன் என்னை வினோதமாக பார்த்தான்.

இயக்கம் தனது உட்சுற்றுத் தேவைக்காக உலக யுத்தங்கள், விடுதலைப் போர்கள் தொடர்பான புத்தகங்களையும் படங்களையும் வெளியிட்டுக் கொண்டிருந்தது இங்கிலிஸில் தருவிக்கப் படுகின்ற இந்தப் புத்தகங்களையும் சினிமாப் படங்களையும் மொழி பெயர்த்துத் தருவதற்கு சம்பளத்திற்கு ஆட்கள் இருந்தார்கள். அவர்களில் நேரு ஐயாவும் ஒருவர். அவர் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர். அவருக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வயதிருக்கும். தான் ஜே ஆரோடு படித்ததாக ஒருதடவை அவர் சொல்லியிருந்தார். கொழும்பில் ஒரு பள்ளிக் கூடத்தில் ஆசிரியராகப் படிப்பித்திருந்ததாகவும் எண்பத்து மூன்றோ எழுபத்து ஏழோ ஏதோ கலவரத்தில் ஓடி வந்த பிறகு போகவே இல்லையென்றும் சொல்லியிருந்தார்.

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வள்ளிபுனத்தில் நேரு ஐயா இருந்தார். அவரிடம் மொழிபெயர்க்க வேண்டிய புத்தகங்களைக் கொண்டு போய் கொடுப்பது தான் எனது வேலையாக இருந்தது. அவர் மேலோட்டமாக ஒரு புரட்டுப் புரட்டி விட்டு "இத்தனையாம் திகதி வந்து எடுத்துக் கொண்டு போம்" என்பார்.

புல்ஸ்காப் தாள்களில் குண்டு குண்டான நடுங்கிய எழுத்துக்களில் அவரது மொழிபெயர்ப்பு இருக்கும். ஒவ்வொரு தாளின் மேலும் உ ,சிவமயம் என்று மறைக்காமல் எழுதியிருப்பார். ஒரு போதும் சொன்ன திகதியை தவறியதில்லை அவர்.

நேரு ஐயா நல்ல மனிதர். ஆனால் அவரிடம் கெட்ட குணமொன்று இருந்தது.

அவர் எப்பொழுது பார்த்தாலும் இயக்கத்தை நொட்டையும், நொள்ளையும் சொல்லிக் கொண்டிருந்தார் அதிலும் அவரது எல்லா முறைப்பாடுகளையும் நானே நடவடிக்கையெடுத்து தீர்ப்பவன் என்பது போல நடந்து கொண்டது அதை விடக்கெட்ட குணமாக இருந்தது. அவரின் குற்றச்சாட்டுகளில் "பள்ளிக் கூடங்களுக்குப் போய் ஏன் பிள்ளையளின்ர படிப்பைக்கெடுத்து பிரச்சாரம் செய்யிறியள்?" என்பது முதலிடத்தில் இருந்தது.

அது ஜெயசிக்குறு சண்டைக்காலம். ஆமி கிளிநொச்சி வழியில் மாங்குளத்திற்கும், புதுக்குடியிருப்பு வழியில் ஒட்டு சுட்டானிற்கும் வந்து 'காம்ப்' அடித்திருந்தான். யாழ்ப்பாணத்திற்குப் பாதை திறக்கவென்று புறப்பட்ட ஆமி கடைசியில் எந்த பஸ்ஸுக்கு டிக்கட் கிடைக்கிறதோ அங்கேயே போகலாம் என்ற மாதிரியான நினைப்பில் நிலை கொண்டிருந்தான். இங்காலே சனங்கள் நிலை கொள்ளாமல் இருந்தார்கள்.

இயக்கம் அறம்புறமாக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டிருந்தது. பதுங்குகுழி வெட்டவென இளைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். பள்ளிக்கூடங்களிலும், டியூசன்களிலும் பிரசாரங்கள் ஒவ்வொரு நாளும் நடந்தன. படிப்பதற்காக போர் செய்வோம் என்று பிரச்சாரங்களில் சொன்னார்கள். முடிவில் பத்துபன்னிரண்டு பேரென்று ஒரேயடி யாகக்கிளம்பி இயக்கத்துக்குப் போனார்கள். வீட்டுக்குப் போய் பள்ளிக்கூட யூனிபோமைக் கழற்றி வைத்து விட்டு இயக்கத்திற்குப் போகும்படி பள்ளி அதிபர்கள் அழாக் குறையாக பிறேயர்களில் அறிவித்தார்கள்.

சந்தைகளில், கோயில்களில் திடீர் திடீர் என்று நடக்கும் தெருக்கூத்துகள், செய்வோம் அல்லது செத்து மடிவோம் என்று முடிந்தன. இது ஒரு நெருக்கடி நிலைக்காலம் என்று எங்களுக்கு அரசியல் படிப்பித்தவர் சொன்னார். இதையே நான் நேரு ஐயாவிற்கும் சொன்னேன் "ஐயா, இது ஒரு நெருக்கடி காலம்"

இத்தனை களோபரத்திற்குள்ளும் இயக்கத்தின் ரேடியோ நாள் தவறாமல் ஒலித்துக்கொண்டிருந்தது. ஓர் இரவு நேரம் செய்தியைக் கோகுலன் வாசித்துக் கொண்டிருந்த போது அருகில் குண்டு விழும் சத்தங்கள் கேட்டன. கொஞ்ச நேர அமைதிக்கு பிறகு கோகுலன் மீண்டும் செய்தியை விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார். ஈழநாதம் ஒவ்வொரு நாளும் வந்தது. சில நேரங்களில் விசேட பதிப்புகளும் பின்னேரங்களில் வந்தன. இயக்கம் தன் மொழிபெயர்ப்பு வேலைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது. நேரு ஐயாவும் குண்டு குண்டான நடுங்கிய எழுத்தில் எழுதிக் கொண்டிருந்தார்.

**(வலிகள் இன்னும்...)**

## தோற்றுப்போனவளின் நாட்குறிப்பேடு

இரவுகளின் கனதியை நனைக்கும்
கண்ணீர்த்துகளொன்றின் வாசனை
நாளைய இரவுகளிலும் வரக்கூடும்.

நீ எனும் நிஜம்
இன்றுபோல் என்றும் போலிகளை
சுமக்கக்கூடும்.

இந்த புன்னகைக்கான முகமூடிகள்
விடிதலில் தொடங்கி
இருள்கையில் துவைக்கப்படும்.

பெண் எனும் பெரும் சோகம்
ஆடை அணிகையில்
சாலை கடக்கையில்
சேலை இடைகளில்
பார்வை நிலைகளில் -
பரிகாசம்.
இதுவும் கடந்துபோகும் என்பது
அத்தனை எளிதல்ல இதற்கு.

நான் என்பது
என் உரிமை
என் வன்மை
என் எண்ணம்
என் செயல்
என்றெல்லாம் பொருளில்லை
இங்கு நான் என்பது
இறந்துபோன ஒரு ஜீவநதி.

கற்பனைகலைந்த நாளின்
வெளிறிய ஈரம்
அதன் முடிவொன்றில்
வெடித்துவிடக்கூடும்.
விரக்திக்கோடு கலந்த
மற்றுமொரு விடியல்
காத்திருக்கும்
மீண்டும்
அதே புன்னகையின்
முகமூடிக்காய்!

கி.பிறைநிலா





# முதுநகரத்தின் காதை

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

பரிபூரணனை இப்பொழுது பலரும் மறந்திருக்கக்கூடும். அல்லது பலருக்கும் இந்தப் பெயருக்குரியவரைப்பற்றி இன்று தெரியாது. ஆனால், 1985 ஆம் ஆண்டு, கொழும்பில் தாக்குதலொன்றை நடத்துவதற்கு முயன்ற வேளை வெடித்த குண்டில் சாவடைந்தவரே இந்தப் பரிபுரணன் என்ற அமுதன். இந்தப் பரிபுரணனுடைய பெயரிலே 1986, 87, 88 களில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் அமுதன் சோப் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்டது. அந்தச் சோப்பைப் பயன்படுத்தியது பலருக்கு நினைவிருக்கலாம். அது இயக்கங்கள் சவுக்காரம், சாப்பிராணி, மெழுகுதிரி, ஜாம், கயிறு என உற்பத்திப் புரட்சிகளைச் செய்த காலம். இயக்கமென்றால், துவக்கும் தாக்குதலும்தான் என்று விளங்கியிருக்கும் இன்றைய பலருக்கு இயக்கங்களிடம் இப்படியுமொரு பக்கமிருந்தது என்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இயக்கத்தில் சேருவதற்கு முதல், இயக்கப்பேப்பர் விக்கிறது, நோட்டீஸ் குடுக்கிறது தொடக்கம் சவுக்காரம் விக்கிறது, சாம்பிராணி செய்யிறது, அப்பளம் போடுவது, ஜாம் தயாரிப்பது, கயிறு திரிக்கிறது என நிறைய முன்பயிற்சி வேலைகளும் விளையாட்டுகள் இருந்தன. இது போன்றவற்றையும் செய்தால்தான் இயக்கத்தில் உறுப்பினர் என்ற அடையாளம் உறுதிப்படுத்தப்படும். இப்படியெல்லாம் ஒரு காலமிருந்தது. போகட்டும். பழைய பெருங்காயப்பானை கறிக்குதவாதல்லவா. நாங்கள் அப்பாலே நகர்வோம்.

## வெடிகுண்டும் தலையிடியும்

பரிபுரணனுடைய ஊர் ஊர்காவல்துறை. கொழும்பில் வெடித்த குண்டில் பலியானது ஊர்காவல்துறையைச் சேர்ந்த பெடியன் என்றவுடன், அந்த ஊர் ஒரு தடவை மெய்யாகவே கலங்கித்தான் போனது. அதுவரையும் சத்தம் சலாரில்லாமல், அமைதியான முறையில், கத்தோலிக்க ஆயர்களையும், மதகுருக்களையும், கன்னியாஸ்திரிகளையும், கடற்தொழிலிலும், கடை வியாபாரத்திலும் கொடிகட்டிப் பறந்தவர்களையும் அதிகமாகத் தந்திருந்த ஊரில், இப்பிடியொரு வெடிகுண்டுப் பேர்வழி பிறந்திருக்கிறானா இருந்திருக்கிறானா, என்று சனங்கள் கலங்கித்தான் போனார்கள். சிலருக்கு இது வியப்பையும் ஊட்டியது. அதிலும் கொழும்பிலே வர்த்தகத்தில் ஊர்காவற்றுறைக் கரம்பன் ஆட்களுக்கு இதுவொரு பெரிய தலையிடியாகியது.

## ஆயர்களின் பிறப்பிடம்

ஊர்காவற்றுறை என்றால், அநேகமாக இரண்டு விசயங்கள் நினைவுக்கு வரும். ஒன்று ஊர்காவற்றுறையிலிருந்து தான் அதிகமான கத்தோலிக்க ஆயர்கள் யாழ்ப்பாண மறைமாவட்டத்துக்கு தெரிவாகியிருக்கிறார்கள். மற்றது ஊர்காவற்றுறையிலிருக்கும் கடற்கோட்டை. யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் கத்தோலிக்க ஆயர்களாக இருந்தவர்களில் அநேகமானவர்கள் ஊர்காவல்துறையைச் சேர்ந்தவர்களே. வடக்கிலே ஊர்காவற்றுறை கத்தோலிக்கச் செல்வாக்கிற்குரிய பிரதேசங்களில் ஒன்றாகவும் உள்ளது. இங்கே இருக்கின்ற பெரும்பாலான தேவாலயங்கள் நூற்றாண்டுகளைக் கடந்தவை. இதற்குக்காரணம், யாழ்ப்பாணக்குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்பு, யாழ்ப்பாணத்தின் தீவுகளையே ஐரோப்பியர்கள் கைப்பற்றினார்கள். அப்படிக் கைப்பற்றியவர்கள், தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் தேவாலயங்களையும் கோட்டைகளையும் கட்டினர். முடிந்த அளவுக்குச் சனங்களையும் மத மாற்றத்துக்குட்படுத்தினார்கள். இது இன்றைய வரலாற்றை நினைவுபடுத்தக் கூடும். இப்படி தேவாலயங்களைக் கட்டியவர்கள், மதக்கல்விக்கான ஏற்பாடுகளையும் செய்தனர். அதில் ஒரு மையம் ஊர்காவற்றுறையிலும் அமைக்கப்பட்டது. அது பின்னாளில் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் தலைமைப்பதவிகளில் செல்வாக்குச் செலுத்த உதவியது.

மறுவளத்தில் ஐரோப்பியர்களால் கட்டப்பட்ட, ஹீமன் கில் கோட்டை பூதத்தம்பி கோட்டை எனவும் சொல்லப் படுவதுண்டு. இந்தக் கோட்டை போர்த்துக்கீசர் காலத்தையது எனக் கூறப்பட்டாலும் இதை முழுமைப்படுத்தியது ஒல்லாந்தர்களே. பிறகு பிரித்தானியருக்குக் கைமாறி, இப்பொழுது இலங்கைப் படைகளிடம் உள்ளது. யாழ்ப்பாணத்திலிருக்கும் கோட்டைகளில் மிக அழகான கோட்டை இது. இப்போது சுற்றுலாப் பயணிகளின் கவனம் இதிலுண்டு. அந்நியர்களால் கட்டப்பட்ட கோட்டையில் அழகு தெரிகிறதா? என்று யாரும் கேட்கலாம். இது அரசியல் ரீதியான உணர்வின் பாற்பட்ட கேள்வி. இந்த உலகமே அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும்தானே வடிவமைக்கப்பட்டுள்ளது! அதற்குள் எப்படியோ அழகியல் ரீதியான உணர்வும் பொதிந்துள்ளது.

## சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஹீமன் கில்

ஹீமன் கில். ஒரு காலத்தில் அரசியல் ரீதியாக, அரசியல் பொருளாதார நோக்கங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கலாம். ஏன் இப்போது கூட அப்படியான நோக்குடன் தான் படையினரிடம் உள்ளது என்று யாரும் வாதிடலாம். வாதமே வேண்டாம். அது உண்மைதான். ஆனாலும் ஊர்காவற்றுறையின் சிறப்பு அடையாளமாகவும் அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் இன்று ஹீமன் கில் மாறியுள்ளது என்பதையும் புறக்கணிக்க முடியாது. உலகெங்கும் இப்படி அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட பல மையங்கள் பின்னர் காட்சிப்பொருட்களாக மாறிவிடுவதுண்டு. அதிலொன்றாகத்தான் ஹீமன் கில்லும் உள்ளது.

வடக்கில் ஐரோப்பியரால் அமைக்கப்பட்ட பல கோட்டைகளையும் விட வரலாற்று முக்கியத்துவமும் சிறப்புமுடையது ஹீமன் கில். முக்கியமாக இது ஒரு கடற்கோட்டை. மற்றவை அநேகமாக கடற்கரையோரமாக நிலத்தில் இருப்பவை. இது கடலால் சூழப்பட்டிருப்பது. தவிர, இது அமைந்திருப்பது, கடற்போக்குவரத்தின் முக்கியமான ஒரு மையத்தில். இதனால்தான், இந்தக் கோட்டை இன்னும் அதன் முக்கியத்துவத்தை இழக்காமலிருக்கிறது. உதாரணமாக ஏனைய பல கோட்டைகள் அன்று உருவாக்கப்பட்ட பாதுகாப்பு, நிர்வாக அதிகாரம் போன்ற முக்கியத்துவத்தை இழந்து விட்டன. குறிப்பாக யாழ்ப்பாணக் கோட்டை இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த முக்கியத்துடன் இன்றில்லை. அது இப்போது ஒரு காட்சிப்பொருள். அவ்வளவுதான். ஆனால் ஊர்காவற்றுறைக் கோட்டை அப்படியல்ல. அது வடமேற்குக்கடலின் முக்கியமான கடற்போக்குவரத்து, கடற்கண்காணிப்பு மையமாகவே இன்னும் தொழிற்படுகிறது. ஊர்காவற்றுறையையும் காரைநகரினையும் பிரிக்கும் ஆழமான கடலின் மத்தியில் இருக்கும் இந்தக் கோட்டை, பன்னாட்டு கடற்பாதையில் இருந்து பாக்கு நீரிணையூடாக யாழ்ப்பாண பரவைக்கடலில் நுழையும் வழியைக் கண்காணிக்கிறது.

இதற்கு வடக்கில் பயணித்தால், கோடிக்கரைக்கோ நாகபட்டணத்துக்கோ போய், அங்கிருந்து கிழக்காக, பத்தாவது அகலக் கோட்டை பின்பற்றி தென்கிழக்காசியாவுக்கும், சீனாவுக்கும் போகலாம். நேர் வடக்கில் இந்தியாவின் கிழக்கு கரையோரமாக எந்த துறைமுகத்திற்கும் போக முடியும். மேற்குத் திசையில் தொண்டி, அதிராம் பட்டணத்திற்கும் தென் கிழக்கில் யாழ்ப்பாணத்திற்கும் போகலாம்.

## கோட்டையே சிறை

ஒல்லாந்தரால் சிறப்பாகப் பேணி பாதுகாக்கப்பட்ட இந்தக்கோட்டையை 1795 இல் பிரிட்டிஷ்காரர் கைப்பற்றிய பிற்பாடு சிறைக்கூடமாகவும், மருத்துவ நிலையமாகவும் பாவித்தனர். இதேவேளை கடலில் கப்பல் மூலம் போவோர் வருவோருக்கு நுழைவுச்சீட்டு இக்கோட்டையில் வைத்து வழங்கப்பட்டது. நாட்டிற்கு கப்பல் மூலம் வரும் பகையை இக் கோட்டை காத்து நின்றதாகவும் வரலாற்றுக் குறிப்புகளுண்டு. இங்கு வைத்துக் கப்பல்கள் ஆராய்ந்து சோதனை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அத்துடன், இந்தியாவில் இருந்து குடியேறுபவர்களை பொதுச் சுகாதாரப் பரிசோதனைகளுக்கு என்று தனிமைப்படுத்தும் நிலையமாகவும் இந்தக் கோட்டை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பின்னர் சில காலம் இது தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்தது. பிரிட்டிஷ் காலத்தில் சிறைக்கூடமாக பயன்படுத்தப்பட்ட இந்தக் கோட்டையில், ஆயுள் தண்டனை கைதிகள் சிறைப்படுத்தப்பட்டிருந்திருக்கிறார்கள். அப்பொழுது, ஊர்காவற்றுறை முக்கிய கடற்படைத்தளமாக இருந்ததுடன், பிரதான சுங்கப் பரிசோதனை நிலையமாகவும் விளங்கியது.

இப்படியெல்லாம் பல வகையிலும் இருக்கும் இதன் முக்கியத்துவச் சிறப்பு, மறுவளமாக இன்னும் (நூற்றாண்டுகளாக) தமிழர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் நிலையும் உண்டு. இந்தக் கோட்டையை மையமாக வைத்து செங்கை ஆழியான் கடற்கோட்டை என்ற வரலாற்றுப் புதினத்தை எழுதியிருக்கிறார்.

## வணிக, போர் மையம்

ஊர்காவற்றுறையைப் பற்றி ஏராளமான வரலாற்றுத்தகவல்கள் உண்டு. யாழ்ப்பாணத்துக்கும் பிற இடங்களுக்குமான வணிகத்தொடர்புகளுக்கும் யாழ்ப்பாணம் மற்றும் இலங்கைத்தீவின் மீதான படையெடுப்புக்கும், ஊர்காவற்றுறை ஒரு முக்கியமான மையமாக வரலாற்றில் இருந்திருக்கிறது. 12 ஆம் நூற்றாண்டில் ஊர்காவற்றுறையின் கேந்திர, வணிக முக்கியத்துவங்களை, இரு தமிழ்க் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இரண்டாம் இராஜாதிராஜசோழனது (1163-1178) திருவாலங்காட்டுக் கல்வெட்டு, சோழர்களுக்கும் பராக்கிரம பாகுவிற்குமிடையில் நடைபெற்ற மோதலில் படைத்தளங்களுள் ஒன்றாக ஊர்காவற்றுறை இருந்ததைக் குறிப்பிடுகிறது. “தற்பொழுது நயினாதீவுக் கோயிலில் வைக்கப்பட்டுள்ள, முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ், சமஸ்கிருதக் கல்வெட்டு, ஊர்காவற்றுறையில் பன்னாட்டு வணிகம் ஊக்குவிக்கப்பட்டதைத் தெரியப்படுத்துகின்றது” என்கிறார் இந்திரபாலா. அரேபிய நாடுகளில் இருந்து குதிரைகளை ஊர்காவற்றுறையில் இறக்கியதாகவும் தகவல்கள் உண்டு.

ஊர்காவற்றுறையென்று இன்று அழைக்கப்பட்டாலும் மக்களிடம் ஊறாத்துறை என்றே பேச்சு வழக்கில் உள்ளது. “12 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டுக்களில் ‘ஊராத்துறை’ என்றுதான் அழைக்கப்பட்டிருக்கிறது” என்று குறிப்பிடுகிறார் கலாநிதி க. இந்திரபாலா.

## மாட்டுக்காலை என்கிற பருத்தியடைப்பு

இதுபோக, ஊர்காவற்றுறையில் மாட்டுக்காலை அல்லது பருத்தியடைப்பு என்றொரு இடமுண்டு. இங்கேதான் அந்தக் காலத்தில் படையினருடைய உணவுத்தேவைக்காகக் கொண்டு வரப்பட்ட மாடுகள் இறக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டிருக்கின்றன. பருத்தியடைப்புக்கு மேற்கிலுள்ள முகத்துவாரத்தில் - முனையில் மாடுகளைக் கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்கள். இதெல்லாம் ‘டிங்கிப்’ படகுகளும் பாய்மரக்கப்பல்களும் கொடிகட்டிப் பறந்த காலத்துச் சம்பவங்கள்.

பாய்க்கப்பல் போய், நீராவிக்கப்பல் வந்த காலத்தில், பாக்குநீரிணையின் ஆழம் போதாததால் ஊர்காவற்றுறை பன்நாட்டு முக்கியத்துவத்தை இழந்தது. இருப்பினும், இந்தியாவின் கிழக்குக் கரையுடன் வணிகம் அண்மைக்காலம் வரைதொடர்ந்தது. யாழ்ப்பாணப் பரவைக்கடலின் சங்கு, வங்காளம் வரை சென்றதையும், விசாகப்பட்டினத்து வடக்கன் மாடு இங்கு வந்ததையும் ஊர்காவற்றுறையில் இன்றும் காணப்படும் சங்குக் கழிவுக்கு வியல்களாலும் இடிந்து போனகால்நடைத் தொற்று நோய்த் தடுப்புக் கட்டடங்களாலும் அறிந்து கொள்ளலாம். ஊர்காவற்றுறையில்

(06 ஆம் பக்கம் பார்க்க...)



கணபதி சர்வானந்தா

# செல்போன் : சில்மிஷமும் சீரழிவும்

## வடக்கில் திரைமறைவு விபரீதங்கள்

அவளின் போனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அப்போது அவள் ரியூசன் வகுப்பிலே படித்துக் கொண்டிருந்தாள்.

கவனிக்கவில்லை. அது அவள் போனில் மிஸ்ட் கோல் ஆக பதிவாகியது. மாலை வீடு வந்ததும் சற்று ஓய்வாக இருந்த சமயத்தில் அந்த மிஸ்ட் கோலை அழுத்தி அழைப்பினை ஏற்படுத்தியிருந்தாள். அடுத்த முனையில் பேசியது ஒரு ஆண் குரல். அவள் தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள். சற்று நேரத்தில் போன் அலறியது. அவள் எடுக்கவில்லை. அதே இலக்கத்திலிருந்து பல தடவை போன் வந்தபோது அவள் பதற்ற மடைந்திருந்தாள். அவளையறியாமலே தொடர்பை பெற்றுக் கொண்டாள். அடுத்த முனையிலிருந்து அதே ஆண் குரல். அவன் இயல்பாகவும் சரளமாகவும், நகைச் சுவையாகவும் பேசினான். அவளது வீட்டு வாயிற் கதவு திறக்கப்படும் போதுதான் அவளுக்கு தான் 32 நிமிடங்கள் அந்த அழைப்பிலிருந்தது தெரியவந்தது.



“அம்மா வந்திட்டா? கட் பண்ணலாமா?” அவள் அவசர அவசரமாகக் கேட்டாள். “அப்போ, அடுத்த தடவை போன் செய்யும் போது நான் உங்களை எப்படிக் கூப்பிடலாம்?” என்று அவன் கேட்க, “உஷா என்று கூப்பிடுங்க” என்று அழைப்பைத் துண்டித்துக் கொண்டாள். இன்னும் கொஞ்ச நேரம் அந்த அழைப்பில் இருந்திருக்கலாம் போல் தோன்றியது அவளுக்கு. அம்மா சற்றுத் தாமதமாக வந்திருக்கலாம் என் அவள் எண்ணினாள். பேசியவன் கொழும்பில் ஒரு சொப்ற் வெயர் எஞ்ஜினியராகக் கடமையாற்றுகின்ற தமிழ் இளைஞன்.

அதற்குப் பின்னர் அப்பப்போ ஏற்படுத்தப்பட்ட அழைப்புகளும் அதனூடாக நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்களும் மானசீகமாக அவளை அவனுடன் நெருங்கச் செய்திருந்தன. இப்படியாகக் கடந்துவிட்ட ஆறு மாதங்களில் தொலைபேசி அழைப்பினூடாக, பல வருடங்கள் பரிச்சயமானதைப் போல அவர்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டது. இந்த ஆறுமாதத்திற்குள் அவர்கள் நேரடியாக சில நொடிகள் தன்னும் சந்தித்துக் கொள்ளவில்லை என்பது தான் உண்மை.

### முதல் சந்திப்பு

திடீரென அவன் ஒருநாள் அழைத்தான். இரு தினங்களில் யாழ்ப்பாணம் வருவதாகச் சொன்னான். சொன்னபடி அந்த நாள், மாலை நேரம் நல்லூர் கோவில் வீதியில் றியோ ஐஸ்கிறீம் கடையில் சந்தித்துக் கொண்டனர். தாம் அணிந்திருந்த ஆடைகளை வைத்து அடையாளம் கண்டு கொண்டனர். அவன் பார்க்க ‘ஸ்மாட்’ ஆக இருந்தான். அவளைக் கேட்காமலே ஐஸ்கிறீம் ஓடர் செய்தான்.

அவள் கேட்கவில்லை. தானாகவே பல விபரங்களைச் சொன்னான். அவளின் மௌனம் பல வழிகளிலும் அவனுக்குச் சாதகமாக இருந்தது. பல விபரங்களை அவன் சொன்னான்.

பதிலுக்கு அவளும் சொன்னாள். “கார் வரை போய்ப்பேசலாம்” என அழைத்தான். அவள் தயங்கினாள். அவன் விடவில்லை. காரினுள் உட்காந்திருந்து பேசினான். அவளை கேட்காமலே கார் பருத்தித்துறை வீதியில் நகரத் தொடங்கியது.

### கட்டிலானது கார்

அவனைத் திரும்பி ஒரு முறை முழுமையாகப் பார்க்கவேண்டும்போல இருந்தாலும் அவள் அவனைப் பார்க்கவில்லை. கதவுக் கண்ணாடியினூடாகக் காரின் வேகத்திற்கு எதிராக ஓடும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பேசிக்கொண்டே வந்தான். கோப்பாய், புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி தாண்டி வல்லை வெளியைக் கடந்த நேரம் அவள் மௌனம் சற்றுக் கலைந்தது. “வீட்டை தேடுவினம்” அவள் சொன்னாள். “பிரன்ட் ஒராளோடை” நிக்கிறன். வந்திடுவன் எண்டு அம்மாக்குக் கோலெடுத்துச் “சொல்லுங்கோ” அவன் ஆலோசனை சொன்னான். கார் நெல்லியடி ரவுணைக் கடந்து வல்லிபுரக் கோவில் பக்கம் சென்று கொண்டிருந்தது. காரின் முன் கண்ணாடியில் மழைத்துளிகள் மெல்ல படர ஆரம்பித்தன.

சிறிது நேரத்தில், கண்ணாடியின்மேல் படர்கின்ற மழைத்துளிகளின் நெருக்கங்கள் அதிகமாகின. மழை பெய்யத் தொடங்கியிருந்தது. கார் வல்லிபுரக் கோவிலை ஒட்டிய பகுதியில் நின்றது. கார் ஸ்ரியோவில் ஓடிய மெல்லிய இசையை சற்று அதிகரித்துக் கொண்டான் அவன். தானிருந்த இருக்கையை மெல்ல பின்னோக்கிச் சாய்த்தான். கார்க் கண்ணாடியில் விழும் மழைத்துளிகளை அவள் கண்கள் எண்ணிக் கொண்டிருந்தன. “உம்மடை சீற்றையும் கொஞ்சம் சரிக்கலாம். கொம்போட்டாக இருக்கும்” என்றான். காரின் சீற் மெல்ல கட்டிலாய் மாறியது.

### தொலைந்த கனவு

சற்று நேரத்தில் அவன் கைகள் நீளத் தொடங்கின. ஒரிருதடவை அவள் நாகரீகமாக அதை எதிர்த்தாள். அனைத்தும் அவளுக்குப் புதுமையாக இருந்தது.

கமெரா மூலம் காட்சி ஒன்றினைச் ‘சூம்’ பண்ணிப் பார்ப்பதைப்போல அவனது தடித்துக் கறுத்த மீசைகள் புல்லுக்காடாய் அவள் கண்களுக்குத் தெரிந்தன. அவன் அத்தனை நெருக்கமானான். இமையோரம் படர்ந்து கிடந்த நீர்த்துளிகளை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

சற்று நேரத்தில் மானசீகமாகத் தான் தோற்றுப் போய்விட்டதாக எண்ணும் போது தான் வேறு உலகொன்றிற்கு மாற்றப்பட்டதை உறுதிப்படுத்திக் கொண்டாள். தான் இதுவரை இறுகப் பற்றிக் கொண்ட சிலவற்றை மீண்டும் தேடி எடுக்க முடியாதவாறு தொலைத்துவிட்டதை எண்ணிய போது நல்லூர் கோபுரத்தின் நுனியைக் கண்டாள் அவள். “வீட்டை போய் போன் பண்ணுங்கோ” அவளை இறக்கி விட்டுக் கார் வேகமாகப் பறந்தது.

அவர்கள் தொடர்புகள் சிறுகச் சிறுகத் தேய்ந்து இன்று அந்த சம்பவம் கனவாய்ப் போய்விட்டதனால் அவளது குடும்பம் கலவரப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அண்மையில் யாழ். மண்ணில் நடந்த உண்மைச் சம்பவமது. பெண் பிள்ளைகளைப்பெற்றவர்கள், வளர்க்கத்தெரியாமல் அவர்களை வளர்த்துவிட்டு, மூலை முடுக்குகளில் தலையை முட்டி மோதித் தேம்பித் தேம்பி அழக் கூடாது என்பதற்காகவே மேலே சொல்லப்பட்ட சம்பவ விபரிப்பு. மாறாக, நடந்த ஈனத்தை எழுதிப் பரபரப்பாக்குவதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். இதுபோன்ற சம்பவங்களினூடாக இனியும் எவரேனும் நாசமாகக் கூடாது என்ற நல்லெண்ணத்தால் மட்டுமே அந்தச் சம்பவம் இங்கு பகிரப் பட்டது. அவ்வளவுதான்.

### செல்போன் பாதுகாப்பா? ஆபத்தா?

தங்கள் பெண் பாதுகாப்பாக பிரச்சினையில்லாமல் வெளியே போய் வர வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் தானே அந்த பெண்ணுக்கு செல்போன் வாங்கிக் கொடுத்தார்கள் அந்தப் பெற்றோர். அந்த போனில் ஒரு மிஸ்ட் கோல் ஏற்படுத்திய பாரதூரமான விளைவு எத்தகையது என்று பார்த்தீர்களா?.

பிள்ளைகள் ஆசைப்படுகிறார்கள் என்பதற்காக வாங்கிக் கொடுக்கிறீர்கள். வாங்கிக் கொடுக்கின்ற பொருள் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுகிறீர்களா? மற்றவைகளுக்கு இல்லாவிட்டாலும் மொபைல் தொலைபேசியை அவதானிக்க வேண்டும். அதுவும் ஸ்மாட் போனுக்கு அவதானிப்பு மிகவும் அவசியம். அதனூடாக என்னவெல்லாம் செய்யலாம் என்ற அது பற்றிய அடிப்படை அறிவும் பெற்றோர்களாகிய உங்களுக்கு கட்டாயமானதொன்று என்பது எனது அறிவுரை.

### போனில் அழிக்க முடியாத தடயங்கள்

உங்கள் பிள்ளைகள் அவர்களது மொபைல் தொலைபேசியிலிருந்து தங்கள் சொந்தங்களுக்கும், உறவுகளுக்கும், நட்புகளுக்கும் ஏற்படுத்துகின்ற அழைப்புகளும், அனுப்புகின்ற குறுஞ்செய்திகளும்

(18 ஆம் பக்கம் பார்க்க...)

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## நீதி கிடைக்காத நிமலராஜன்

**ஊ**டகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு ஒக்டோபர் 19 ஆம் திகதியோடு 16 வருடங்கள் கடந்து போயிற்று. வழமையைப்போல இந்த வருடமும் அஞ்சலி செலுத்தி, "குற்றவாளிகளை அரசு கண்டுபிடிக்க வேண்டும்" என்ற கோங்களோடு நிமலராஜனை நினைவேந்தியிருந்தோம். இதைவிட வேறு என்ன செய்யமுடியும்? அடுத்த வருடமும் இப்படித்தான் நிமலராஜனுக்கான நினைவேந்தல் இருக்கப்போகிறது. அப்போதும் கொலையாளிகள் யாரென்றே தெரியாமல் நிமலராஜனின் கொலைவழக்கு தொடர்ந்துகொண்டே இருக்கும்.

வடக்கில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில், துப்பாக்கிமுனைகளைக்கண்டு பயப்படாமல் மக்களுக்காகக் களத்தில் நின்று செய்திகளைத் தந்த ஒரு மகத்தான ஊடகவியலாளர் நிமலராஜன். முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு பிரதேசத்தில், அரசுக்கு எதிரான செய்திகளை, படையினரின் அராஜகங்களைத் துணிச்சலோடு வெளிப்படுத்திய ஊடகவியலாளனை யார் கொன்றிருப்பார்கள் என்பது பரகசியமான ஒன்றுதான்.

நிமலராஜனைத் துளையிட்ட அம்புகள் எவரென்று தெரியாவிட்டாலும் அந்த அம்புகள் எந்தத் திசையில் இருந்து வந்தன என்றும், அவற்றை ஏவிய எஜமானர்கள் யார் என்றும் எல்லோருக்கும் தெரிந்தவிடயம்தான். ஆனால் இன்னமும் தங்கமலை இரகசியம் போல நிமலராஜனின் கொலை வழக்கு சந்தேக நபர்கள் இனங்காணப்படாத நிலையிலேயே இருக்கிறது. நிமலராஜன் கொலை தொடர்பான விசாரணைகள் நடக்கின்றனவா இல்லையா என்பது கூடத் தெரியவில்லை.

ஆனால், தென்னிலங்கை ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் கொலைகளுக்குப் பின்னால் உள்ள சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள். அந்தக் கொலைகள் பற்றிய விசாரணைகள் அசுரவேகத்தில் நடைபெற்றன. பல பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டன. காலம் கடந்த பின்னரும் கூட பல்வேறு கோணங்களிலான விசாரணைகள் குற்றவாளிகளை இனங்காட்டின. ஆனால் பாவம் நிமலராஜன் தமிழ் ஊடகவியலாளனாகப் பிறந்துவிட்டான். அதனால் அவனைக் கொலை செய்தவர்களை ஒருபோதும் அரசு நெருங்கப்போவதில்லை. லசந்தவுக்கும் பிரகீத்துக்கும் கிடைத்த நீதி நிமலராஜனுக்குக் கிடைக்கப்போவதில்லை என்பது மட்டுமே நிதர்சனம்.


●●●

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

ஊடகத் துறையில்
பணிபுரிய ஆர்வமா?

சமூக, கலை, இலக்கிய, அரசியல் விடயங்களில் ஈடுபாடும், தேடலும், எழுத முடியும் என்ற தன்னம்பிக்கையும் உடைய இளையோருக்கு புதுவிதியில் பணியாற்ற வாய்ப்பு. ஆர்வமுள்ளோர் எமது மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கவும்.

puthuvithi@gmail.com



# கறையத் தொடரும் நல்லாட்சி சாயம்

**தெகிடியான்**

"16 வருடங்கள் இராணுவ அதிகாரிகள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கோடு தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினேன். முதலில் என்னிடம் இரண்டு வாரங்கள் என்றார்கள். பிறகு ஒரு மாதம் என்றார்கள். அதன் பிறகு மூன்று மாதங்கள் என்றார்கள். இப்போது 16 மாதங்கள் கடந்து விட்டன. குற்றம் செய்திருந்தால் வழக்கு தொடரப்பட வேண்டும். இல்லாவிட்டால் விடுதலை செய்யப்பட வேண்டும். குற்றம் செய்திருந்தால் பிணையில் விடுதலை செய்து வழக்கை கொண்டு நடத்த வேண்டும். நாட்டு மக்களுக்கு ஒரு உரிமை உண்டு. நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுப்பது, சுயாதீன ஆணைக்குழுக்களில் தலையிடுவது, நீதி மன்றங்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுப்பது எனது நோக்கமல்ல. நாட்டின் சுதந்திரம் ஜனநாயகத்தை பாதுகாத்து அனைத்து மக்களுக்கான பொறுப்பை நிலை நாட்டுவது மாத்திரம் எனது பொறுப்பாகும்" இப்படி ஜனநாயகத்தின் உறுதிப்பாடு பற்றி வெளுத்து வாங்கியிருக்கிறார் நல்லாட்சி நாயகன் மைத்திரிபால சிறிசேன. அத்துடன் படையதிகாரிகள் நீதிமன்றங்களுக்கு அழைக்கப்பட்டமைக்கும் தனது அதிருப்தியை அவர் வெளிக்காட்டியிருக்கிறார்.

மனித உரிமை, சுய கௌரவம், சுதந்திரம் என்பன 16 மாதங்களாக மறியலில் வைக்கப் பட்டிருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு மாத்திரமே இருப்பது போலவும், அவர்களே இலங்கைத் திருநாட்டின் ஜனநாயகத்தின் பிள்ளைகள் போன்றும் ஜனாதிபதி கூறிச் சென்றிருக்கிறார். நல்லாட்சிக்காலத்தில், சுதந்திரம், மனித உரிமை சட்டத்தின் ஆட்சி என்பன கொடிகட்டிப் பறக்கின்றன என்று காட்டுவதற்காக மைத்திரி இப்படிச் சொல்லியிருக்கலாம் என நினைப்பதை விட முட்டாள்தனம் வேறென்றுமில்லை.

தென்னிலங்கை அரசியல் வரலாறு, மதவாத பீடங்களினாலும், இராணுவ வெற்றிகளாலுமே காலாதிகாலமாக கட்டமைக்கப்பட்டு வந்தது. இவற்றை உதறித் தள்ளிவிட்டு அரசியல் முன்னெடுப்புகள் எதையும் தென்னிலங்கையில் முன்னெடுக்கமுடியாது என்பது கடந்த கால அரசியலை மேலோட்டமாக நோக்கும்போதே புரிந்துவிடும். இத்தகைய பின்னணியில் அரசியல் மூலதனமான இராணுவத்தைச் சார்ந்தோரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிய ஒருவர், தொடர்ந்தும் அரசியலில் உச்ச நட்சத்திரமாக பிரகாசிப்பது பற்றி கனவு கூட காணமுடியாது. அந்தளவுக்கு படைவாதம் பேரினத்தார் மத்தியில் வேரூன்றிவிட்ட விடயம்.

மறுபக்கத்தில் சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் மனித உரிமைகள், ஜனநாயகம் ஆகிய விடயங்களில் இலங்கையின் கழுத்தை இறுக அழுத்துகின்றன. இதனைச் சமாளிக்க சர்வதேச ராஜதந்திர அரசியலில் கைதேர்ந்தவர்களான மங்கள சமரவீர வெளி நாட்டு அமைச்சராகவும், அத்துறையில் கரைகண்ட ரணில் பிரதமராகவும் ஆட்சிக்கதிரைகளை அலங்கரிக்கின்றனர். இந்த நிலையிலேயே சர்வதேசத்திற்கு உத்தரவாதங்களை அள்ளி வீசி தமது ஆட்சியை கொண்டிழுக்கின்றனர் இப்போதைய அதிகார பீடத்தினர்.

ஆனால் மறுபக்கத்தில் இந்த உத்தரவாதங்கள் தென்னிலங்கையில் தமது அரசியல் இருப்புக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த கூடாது என்பதிலும் இவர்கள் தெளிவாகவே இருக்கின்றனர். அதனையே ஜனாதிபதியின் இப்போதைய உரைகளும், சர்வதேச விசாரணை பற்றிய கடந்த கால உரைகளும் சுட்டுகின்றன. அதாவது "சர்வதேச விசாரணை வேண்டாம் உள்ளக விசாரணை நடத்துகின்றோம்" என வெளி நாடுகளுக்கு படம் காட்டும் மைத்திரி அரசு, "உள்ளக விசாரணையில் படையினரை நீதி மன்றத்திற்கு அழைப்பதற்கு நாங்கள் எப்போதுமே தடையாக இருப்போம்" என்று தென்னிலங்கைக்கு இன்னொரு முகத்தைக் காட்ட முனைகின்றது.

இலங்கையில் இறுதிப்போரின் போது, அரங்கேறிய மனித உரிமை மீறலுக்கான சர்வதேச விசாரணைக் குரல்கள் சர்வதேச அளவில் ஓங்கியொலித்திருந்தன. அதற்கு நல்லாட்சி அரசாங்கமும், முன்னைய மஹிந்த அரசைப்போல் முகத்திற்கு நேரே பகைக்காமல், பல உத்தரவாதங்களை அள்ளிவழங்கியதுடன் "தாங்கள் நீதியை நிலை நாட்டப் பாடுபடுகின்றோம்" என்ற விம்பங்களையும் உருவாக்கியிருந்தது. காணாமல் போக செய்யப்பட்டோருக்கான அலுவலக அமைப்பை உருவாக்க, நாடாளுமன்றத்தில் பெறப்பட்ட அங்கீகாரம், தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் என்பன சர்வதேச அரங்கில் இலங்கையின் சமாளிப்பு அஸ்திரங்களாக பயன்படுத்தப் பட்டன.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

(03 ஆம் பக்கதொடர்ச்சி...)



# முதுநகரத்தின் காதை

இறக்கப்பட்ட சரக்கு, மாட்டு வண்டித் தொடர்களில் அனுராதபுரம், கண்டிவரை சென்றதை, எனது பாட்டனார் கூறக் கேட்டிருக்கின்றேன்.

### மாறாத கேந்திர முக்கியத்துவம்

காலனித்துவம் போய்த் தேசியங்கள் வந்த காலத்தில், ஊர்காவற்றுறையின் வணிகம் நின்று போனாலும், கேந்திர முக்கியத்துவம் போய்விடவில்லை. வணிகத்தையும் கடற்பாதைகளையும் பராமரிக்கவும், பாதுகாக்கவும் தேவைப் பட்ட கேந்திர அமைவிடம் அவற்றைத் தடுக்கவும் தேவைப்பட்டது. வடபுலத் திற்கான இலங்கைக் கடற்படையின் தலைமையகம், கடற்கோட்டைக்கு மிகவும் அண்மித்த நிலப்பகுதியான காரைநகர், நீலங்காட்டில் அமைந்தது. இக்காரணத்தினாலேயே, "1971 ஆம் ஆண்டு J.V.P. கிளர்ச்சியின் போது, கைதான ரோகண விஜேவீரவும் சகாக்களும் பாதுகாப்புக் கருதிக்கடற்கோட்டையிலேயே சிலகாலம் சிறைவைக்கப்பட்டனர் என்கி றார் வரலாற்றாய்வாளர் பொ. இரகுபதி.

### சிதைந்த ஊருண்டிக் கோட்டை

இதைவிட ஊருண்டிக்கோட்டை (Uruendi Fort) என்றொரு பழைய கோட்டையும் இங்கே உண்டு.

முதலில் மக்கள் இருந்த ஊருண்டித் துறைமுகத்தை மையமாகக் கொண்டு, இந்தப்பகுதி இருந்தது. செம்மண் கலந்த பூமியாகவும், மக்கள் செறிந்து காணப்பட் டமையாலும், இங்கே இந்தக் கோட்டை யினைப் போர்த்துக்கீசர் அமைத்தனர். இது பழங்கோட்டை என்ற பெயரில் சிதைந்த நிலையில் இப்போதுள்ளது. நயினாதீவில் கட்டப்பட்டிருந்த நாகம்மை ஆலயத் தினை இடித்து, 1620ற்கும் 1624க்கும் இடைப்பட்ட காலத்தில் அதன் கற்க ளைக் கொண்டு, ஊர்காவற்றுறை சங்கு மால் அருகில் இக்கோட்டை கட்டப்பட் டது. 1950 களில் கோட்டையின் கூரை நல்ல நிலையில் இருந்திருக்கிறது.

ஊர்காவற்றுறையில் இன்னும் முக்கிய மாக இருப்பது காரைநகருக்கும் ஊர்கா வற்றுறைக்குமிடையிலான போக்குவரத் துக்குப் பயன்படும் துறைமுகமாகும். இது யாழ்ப்பாண அரசர் காலத்தில் மட்டுமல்ல போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் பிரித்தானியர் ஆட்சிக் காலங்களில் வர்த்தகத்திலும் கடற்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பெரும் பங்களிப்புச் செய்திருந்தது. பரப்பளவில் சிறியதாக இருந்தாலும் இத் துறைமுகம், இயற்கைத் துறைமுகத்துக் குரிய பண்புகளைக் கொண்டுள்ளது.



சிறிய கப்பல்களின் போக்குவரத்துக்கும் அவை தங்கி இங்கு நிற்பதற்கும் ஏற்றது. இலங்கைத் தீவின் வரலாற்றிலும் யாழ்ப் பாண இராச்சியத்திலதும் வடநீர் பரப் பைப் பாதுகாக்கும் பொறுப்பை இத்து றைமுகம் செய்திருக்கிறது. போர்த்துக் கீசர் இந்தத் துறைமுகத்தை Fortaleza எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது இரண்டு உள்ளக ரீதியான பகுதியைக் கொண்டுள்ளது. இத்துறைமுகமும் 1658 ஆம் ஆண்டளவில் இடம்பெற்ற யாழ்ப்பாணத்தின் மீதான முற்றுகை காலத்தில் டச்சுக்காரரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை வடக்கிலே ஐரோப்பி யர்களால் பொருளாதாரப் பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. குறிப்பாக புகையிலைச் செய்கை அதிலொன்று. இதை அவர்கள் ஊர்காவற்றுறை ஊடாகவே செய்திருக்கின்றனர். இதனால் தீவுப்பகுதியில் புகையிலைச் செய்கை முக்கியமான பயிர்ச்செய்கையாக மாறியது. இன்னும் அதனுடைய செல்வாக்கு தீவுகளில் உண்டு.

இப்படியெல்லாம் ஏராளம் வளங்க ளையும் சிறப்புகளையும் கொண்டுள்ள, ஊர்காவற்றுறையின் கடந்த நூற்றாண்டும் செழிப்பானதே. பொன்மணி என்ற ஈழத் திரைப்படத்தின் திரைக்கதையை எழுதிய காவலூர் ராஜதுரை, எழுத்தாளர் காவலூர் ஜெகநாகதன், இன்றைய தமிழ் ஒளி (டான் தொலைக்காட்சி) குகநாதன், காவல் நகரோன் என்ற சுபாரத்தினம் மாஸ்ரர், கவிஞர் ஊர்வசி எல்லோரும் ஊர்காவற்றுறையின் முகங்களே. ஏராள மான அண்ணாவிமார்களும், நாட்டுக் கூத்துக் கலைஞர்களும், ஊர்காவற்றுறையை இசையாலும் கலையாலும் அழகாக்கி வளமாக்கிய காலமொன்றிருந்தது. தீவுக ளுக்கெல்லாம் தலைநகரமாக இருந்த ஊர்காவற்றுறையிலிருந்து கொழும்புக்கு மீன் லொறிகளும் வெங்காயம், புகையிலை, மிளகாய் ஏற்றிய வண்டிகளும் ஓடிய கால நாட்களில் ராஜா சினிமாவில் கூட்டம் அலைமோதும். "கொத்துரொட் டிக்கடைகள் அறிமுகமாகிய 1970 களில் ஊர்காவற்றுறைக் கடலிலும் நகரிலும் வானத்து நட்சத்திரங்களே ஒளிர்ந்தன" என்று ஒரு நண்பர் எழுதியிருந்தார். அந்தளவுக்குக் கையில் காசுப் புழக்கமும் வாழ்க்கையில் செழிப்பும் அங்கிருந்தது.

யுத்தம் வந்த கையோடு எல்லாம் போய் விட்டன. இப்பொழுது ஊர்காவற் றுறை தனியான ஒரு பிரதேச செயலர் பிரிவாக, தனியான பிரதேச சபைப் பிரிவாக இருந்தாலும் பழைய செழிப்பு மீண்டும் வரவில்லை. பொதுவாகச் சொன் னால், ஊர் இன்னும் துளிர்க்கத் தொடங்க வில்லை என்றே சொல்ல வேணும். பெரிய வீடுகளும் விசாலமான வளவுகளுமாகக் கொடிகட்டிப்பறந்த கரம்பனில் காடும் புதருமே கொடியாகப் படர்ந்திருக்கிறது. இதைக் காணும்போது மனசுக்குள்ளே ஆயிரம் கோடி முட்கள் தைக்கின்றன.

சோழர், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர், சிங்களவர் என்ற பிறத்தி யாரே ஆசைகொண்டு ஆள முனைந்த ஊர்காவற்றுறையில் இன்று சொந்த ஊர் மக்களே இல்லாதிருப்பது துயரமன்றி வேறென்ன?



# அந்தக் காலத்துச் சேட்டைகள் 10

உமா சந்தோஷ்

## 'மைனர் மயிலன்'

டொக்டர் வந்தாப் பிறகு டொக்டரோடை இங்கிலிஸிலைதான் கதைச்சான் மைனர். தங்மணிக்குத்தான் ஒண்டும் விளங்கேல்லை. டொக்டர் மைனற்றை கையிலை துண்டொண்டை எழுதிக் குடுத்தார். டொக்டர் போகும் வரைக்கும் தங்கமணி வாய் திறக்கேல்லை. போனாப் பிறகுதான் துண்டைப் பற்றிக் கேட்டாள். "அது வெளியிலை வாங்க வேண்டிய மருந்து. காசு தான் கனக்க வரும் எண்டு சொன்னவர்" மைனர் சொன்னான். "பாமஸி துறக்க இன்னும் நேரங்கிடக்கு. மருந்து வாங்கப் போகேக்கை சாப்பிடவும் ஏதாகிலும் வாங்க வேணும்" தங்கமணி சொன்னாள்.

மருந்துத் துண்டோடை பெரியகடைப் பக்கம் வந்தவன், நேரை கொழும்பான் சாமான் அனுப்புற கடைக்குப் போனான். முன்னம் ஒருக்கால் மைனர் கொழும்பா னோடை அந்தக் கடைக்கு வந்தவெண் டபடியால் அங்க நிண்ட மனேச்சருக்குத் தன்னை மைனர் அறிமுகப்படுத்தத் தேவைப்படேல்லை. மைனர் கேட்ட மாதிரி கொழும்பானுக்கு லைனைப் போட்டுக் குடுத்தான் மனேச்சர். மெனிக்கா விசயத்தை தனக்கு வந்து சொன்னதாக் கொழும்பான் சொன்னான். மைனரோடை கதைச்சப் பிறகு, கொழும்பான் மனேச்ச ரிட்டை ரெலிபோனைக் குடுக்கச் சொன் னான். கொழும்பான் மனேச்சரிட்டைச் சொல்ல, "கடனாத்தான் குடுக்கட்டாம் எண்டு ஆயிரம் ரூபாவோடை வவுச்சரை யும் நீட்டினான் மனேச்சர். கிடைச்சது போதும் எண்டு கையெழுத்துப் போட்டுக் காசை வாங்கிக் கொண்டு மலாயன் கபே யிலை போய், தனக்கும், தங்கமணிக்கும், ஆளுக்கு ஒவ்வொரு வடையும், இவ் விரண்டு தோசையும் கட்டிக் கொண்டு, பக்கத்து, பாமஸிப் பக்கம் போனான்.

அந்த மருந்து அங்கை இல்லை. பிறகு சிங்கப்பூர் பாமஸியிலைதான் கிடந்தது. வாங்கிக் கொண்டு வாட்டுக்கு வந்தான் மைனர். மதியம் பன்னிரண்டைத் தாண்டிப் போட்டுது. ஊரிலையிருந்து அரிய குட்டியரை வருத்தம் பாக்க சொந்த பந்த மெல்லாம் வந்து கட்டிலைச் சுற்றி நிண்டதைக் கண்டு மைனர் கெலிச்சுப் போனான். எல்லாற்றை கையிலையும் கடுதாசிப் பையன். தங்கமணி ஒவ்வொண்டா வாங்கி அடுக்கினாள்.

அதிலை செல்லம்மா மச்சாள் கொண்டு வந்த உமல் கொஞ்சம் கனத்திது. அதை வாங்கிப் பக்குவமா வைச்சாள் தங்கமணி. அவை போனப் பிறகுதான் தெரிஞ்சுது அவ இடியப்பத்துக்குக் கொண்டுவந்த சொதிப் போத்திலின்ரையும், குழம்புப் போத்திலின்ரையும் பாரத்திலை தான் உமல் கனத்ததெண்டு. மாறி, மாறி ஆஸ்பத்திரியிலை நிண்டதிலை தங்கமணி களைச்சுப் போனாள். "சின்னக் கடையிலா மீன் வாங்கிக் கொண்டு போகவேணும்" எண்டு சொல்லிக் கொண்டே, வீட்டுக்கு வெளிக்கிட்ட தங்கமணியிட்டை மலாயன் கடையிலை கட்டின பார்சலையும் கொண்டு போகச் சென்னான் மைனர்.

தங்கமணி போனப்பிறகு செல்லம்மா மச்சாளின்ரை உமலையும் தூக்கிக் கொண்டு 'கன்ரீன்' பக்கம் போக வெளிக் கிட்டான் மயிலன். அந்த நேரம் "மோனே! செல்லம்மா சாப்பாடு எனக்கெண்டு சமைச்சுக் கொண்டு வந்தவளாம். எடு சாப்பிடுவம்" எண்டு அரிய குட்டியர் கூப்பிட்டார். "டயபற்றிக்குக் கண்ட, கண்ட. சாப்பாடெல்லாம் சாப்பிட வேண்டாம் எண்டு டொக்டர் சொன்னவர். ஆஸ்பத்தி ரியிலை தாறதைச் சாப்பிட்டால் காணும். இரண்டு மூண்டு நாளைக்கு வாயைக் கட்டுறது கஸ்டமாக் கிடக்கு என்ன?" வாயை நறுமினான் மைனர். "விசரனோடை கதைக்கேலாது" அரிய குட்டியர் அடங்கிப் போனார்.

உமலையும் தூக்கிக் கொண்டு நேரே ஸ்ரெல்லா வின்ரை வார்ட்டுக்குப் போனான் மைனர். வீட்டுக்குப் போக றெடியாகிக் கொண்ட வளை வலுக்கட்டா யமா கதைச்சுக் கன்ரீனுக்குக் கூட்டிக் கொண்டு போனான். செல்லம்மா மச்சாள் கொண்டு வந்த உமலிலை கிடந்த இடியப்பம், சொதி, குழம்பு எல்லாத்தையும் தானும் தின்டு ஸ்ரெல்லாக்கும் குடுத்தான்.

"கனநாளைக்குப் பிறகு நல்ல வீட்டுச் சாப்பாடு ஒண்டை சாப்பிட்டனான். நாங்கள் சமைச்சுச் சாப்பிடுறதையும் விட ஆரும் சமைச்சுத் தந்தால் சாப்பிட நல்லா இருக்கும் என்ன?" ஸ்ரெல்லா வாய் திறந்து சொன்னாள்.

"அப்ப வரமாட்டெண்டு 'பஸ்'பண்ணி னீர். உமக்குப் பிடிக்கும் எண்டு எனக்குத் தெரிஞ்ச படியால் தானே கூப்பிட்டனான்" மைனர் ஒரு அடி அடிச்சான். ஓடர் பண்ணின பிளேன்ரியையும் இரசிச்சுக் குடிச்சாள் ஸ்ரெல்லா. குழம்பின்ரை உறைப்புக்கு நல்ல கொம்பினேஷனா இருந்தது. அந்தப் பிளேன்ரி.

"அங்கிள் எப்பிடி இருக்கிறார்? ஒருக்கா வந்து பாத்திட்டுப் போவம்" ஸ்ரேல்லாவும் மைனரும் அரிய குட்டியற்றை வார்ட்டுக்குப் போக வெளிக்கிட்டினம்.

(சேட்டைகள் தொடரும்...)



சிறுகதை

# ஆண்மை

**எஸ்.பொன்னுத்துரை**

ஈசிசேரில் விழுந்த சந்திர சேகரம் கோழி உறக்கத்தை வாலாயம் பண்ணி, அதனைச் சுகிக்கின்றார். யாழ் தேவியிலே பகற் பயணம். அகோர வெயில். காட்டு வெக்கை. இத்தனைக்கும் மேலாகச் சிவசம்பு சாப்பாட்டுக்கடைச் சோற்றைக் கொறித்தார். மனசார ஒரு மயக்கம், சாய்வு நாற்காலியிற் தாம் தூங்குவதான நினைப்பே அவருக்கு யாரோ உடம்பைப் பிடித்து விட்டது போன்ற சுகத்தைக் கொடுத்தது.

வள்ளிசாக மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், அவருடைய குடும்பம் தாயடி வீட்டிலே வந்திருக்கிறது. பெத்துப் பெருகிய குடும்பம். அவருடைய மனைவி சரஸ்வதி மூலம் பிள்ளைகளையும் பெட்டைக்குஞ்சுகளாகவே பீச்சி விட்டாள். அரிய விரதங்கள் பிடித்து, இருக்காத தவம் எல்லாம் கிடந்து, கண்ட கண்ட தெய்வங்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டது வீண் போக வில்லை. சோட்டைத் தீர்க்க ஆறாம் காலாகப் பொடியன் பிறந்தான். சந்தான விருத்தியில் அவனே மங்களமாக அமைந்தான்.

பயணக் களைப்பைப் பாராட்டாமல் சரஸ்வதியும் புத்திரிகளும் வீட்டைத் துப்பரவு செய்யும் உழவாரத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சந்திரசேகரத்தை சயனநங்கை முற்றாகச் சரித்துவிடவுமில்லை. இமைகளைப் பிளந்து காங்கை ஏறுவதான கூச்சத்தில், அவருடைய கண்களின் இமைக் கதவுகள் சற்றே அகலும். இமைகளின் ஈயக் குண்டுகளைச் சுமக்க இயலாது என்கிற வாக்கில் மீண்டும் மூடிக் கொள்ளும். இமைகள் இலேசாகத் தோன்றுகின்றன. முற்றத்தில் மாமரங்கள் செழுங்கிளைகள் பரப்பியிருக்கின்றன. அவை வெக்கையை உறிஞ்சுவதினாலேதான் இத்தகைய இதம் விடிந்திருக்கிறது என்பதை அனுமானிக்க முடிகிறது. மாமரங்களுக்கப்பால் கேற் தெரிகிறது. அதிலே கறள் மண்டிக் கிடக்கிறது.

கேற்றிலே நிலை குத்திய விழிகளைப் பிரித்தெடுத்து, இடப்பக்கமாகவே மேய விடுகிறார். மதிலில் பாசி சடைத்து நுதம்பி வழிகின்றது. சுவரின் வெடிப்பிலே ஆலங்கன்று ஒன்று வேர் விட்டு, கொழுத்து வளர்கின்றது. உதை உப்பிடியே வளர விட்டால் சுவருக்கு மோசம் தரும் ஐயரின் வளவைச் சுற்று மதில் வளவு என்றுதான் சொல்வார்கள். அந்த எல்லையைப் பற்றியும் அறிக்கையைப் பற்றியும் கவலையில்லை. வலப்பக்கமும் கொல்லையும் வேலியும். வலப்புற வேலியிலே ஊரும் அவருடைய பார்வை தரிக்கின்றது. அந்த வேலி கறையான் தின்று இறந்து கிடக்கின்றது. கோழி ஒன்றும் அதன் குஞ்சுகளும் ஒரே சுரத் தொனியைச் சாதகஞ் செய்து கொண்டு, வேலியிலுள்ள கறையான்களை மேய்கின்றன. பூரணத்திற்கு வேலியைப் பற்றி என்ன கவலை? சோட்டைக்குத்தானும் அவளுக்கு ஒரு பெட்டைக்குஞ்சு பிறக்கவில்லை. சீமாட்டிக்கு எல்லாம் கடுவன்கள்.

வேலியையும் தாண்டி சேகரத்தாரின் மனம் அலை மோதுகிறது. முப்புரமும் எரிக்க முனையும் முக்கண்ணனாகச் சாம்பசிவத்தார் காட்சியளிக்கிறார். சொற்கள் அனற் குழம்பை அள்ளிச் சொரிகின்றன.

"உந்த வேலியைப் பிரிச்செறிஞ்சு போட்டு மதில்தான் கட்ட வேணும். உவளவை கோயில் கிணத்திலை போய்த் தண்ணி அள்ளட்டுமன். ம்! பக்கத்திலை பாவங்கள் ஏழை பாளையள் வந்து தண்ணி அள்ளட்டும், போகட்டும் வரட்டும் என்று ஒரு பொட்டு விட்டால், தட்டுவாணியள் மாப்பிள்ளையல்லோ கொள்ளப் பாக்கிறாளவை"

பொட்டு மேவப்பட்டு, பனையுயரத்தை எட்ட முனைந்த புதுவேலி சாம்பசிவத்தாரின் வைராக்கியத்தைப் பறை கொட்டியது. பூரணத்தைப் பார்க்க முடியாது. தூண்டிற் புழுவின் ஆக்கினையைத் தமதாக்கிச் சந்திரசேகரம் சாம்பினான்.

அழகு என்ற சொல்லின் அர்த்தப் பொலிவு முழுவதையும் தனதாக்கி, எழில் பிழிந்தவள் பூரணம். இடையை இறுக்கிச் சுருக்கும் பாவாடையோடும், குரும்பை மார்பை அமுக்கி விறைத்த சட்டையோடும், சருவக்குடம் சுமந்து, அவள் தன் வீட்டிற்கும் அயல் வீட்டுக் கிணற்றுக்கும் நடைபயில, அந்த நடைபயிலும் நர்த்தனைக் கால்களிலே தன் உள்ளத்தை வெள்ளிப் பாதசரமாகத் தொங்க விட்டு விழிமொழிக் கொஞ்சல் முற்ற முற்ற, கிணற்றடி கமுக மரவட்டில் காதற்கூடி தங்கள் கனிந்து தொங்கத் தொடங்கின. கமுக மரம் சமத்தான தபாற்காரன்தான். ஆனால் காற்றும் காகமும் செய்ததிருக் கூத்தால் பூரணத்தின் கடிதமொன்று சாம்பசிவத்தின் கைகளிலே கிட்டியது. உறவு பிளவுற்றது. வேலி பனையுயரத்தை எட்ட முனைகிறது.

வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது என்று சொல்வார்கள். தாய்வழியில், பூரணம் சந்திரசேகரத்தின் மனைவியாக வாழத்தக்க உறவு முறை. ஆசையின் தொங்கு தாவல்கள், பூரணத்தை அடைவதற்குத் தாயின் ஆதரவைத் திரட்டும் நள்ளல். இரவுச் சாப்பாட்டின் போது இதைப் பற்றி சேகரம் மெதுவாகப் பிரஸ்தாபிக்கிறான். சித்திரைப் புழுக்கத்திற்காக விறாந்தையில் விசிறியுடன் இருந்த சாம்பசிவத்தாரின் செவிகளிலே அந்த உரையாடலின் சில நறுக்குகள் விழுந்து விடுகின்றன. காலம் அப்பிய சாம்பற் புழுதியை உதிர்த்துக் கொண்டு, கோபம் அம்மணமான அக்கினி உடம்பைக் காட்டலாயிற்று.

"உங்கை என்ன கத்தையைக் கதையள்? இப்பவே தாய்க்கும் மோனுக்கும் சொல்லிப்போட்டன். அந்த எடுப்பை மறந்து போடுங்கோ. நாளை பசிவமொன்டு கனவிலும் நிலையானதைப் புங்கோ. உனக்குக் கன்னிக் கால் நடுங்கிறதிலும் பார்க்க நான் பாடையிலைப் போக ஓமெண்டுவன்"

அதிலே தொனித்த உறுதி சேகரத்தின் தாய்க்குத் தெரியும். மகனுடைய ஆசையின் பக்கம் தன்னால் சாய முடியாது என்ற நிதர்சனத்தின் உறைப்பு.

"உங்களுக்குத்தான் ஆண்டவன் கண்டறியாத தொண்டையைப் படைச்சிருக்கிறான். இப்ப என்ன நடந்து போச்சு எண்டு துள்ளுறியள்? இவன் வாயுழையப் புசத்துறான் எண்டு கேட்டுக் கொண்டிருந்தால், நான் என்ன சுகத்தைக் கண்டன்? மத்தளம் போல இரண்டு பக்கமும் அடிபடுறன்" என்று சலித்து, மூக்குச் சிந்தி, முன்றானைக்கும் வேலையைக் கொடுத்தாள் தாய்.

தொடர்ந்து புகுந்த மௌனம் நீண்டது.

"டேய் சந்திரன்! ஏண்டா, இப்படி எங்களைக் கொல்லுறாய்? உன் விருப்பப் பட்டி ஆட, எனக்கும் உன் கோத்தைக்கும் முதலிலை ஏதேன் நஞ்சைத்தாவன்? கண்டறியாத பலகாரத்தைக் கண்டவனைப் போல, இடியப்பக் காரியின்ரை வாடிப் போன நோடாலத்தை, நினைச்சு இந்தப் பேயன் உருகுகிறான்" என்று விவகாரத்திற்குச் சாம்பசிவத்தார் புதிய வேகம் கொடுத்தார்.

அடுக்களையிலிருந்து எவ்வித சள சண்டியும் எழும்பவில்லை. இளகிய இரும்பும், கருமத்தில் மனம் குத்திய கொல்லனும்! குரலின் சுருதியைத் தாழ்த்தி, அதிலே பாசத்தைக் குழைத்து, "தம்பி! நீ ஒருத்தன் நல்லா வாழ வேண்டுமெண்டுதானே இவ்வளவு பாடுபட்டம்? உனக்கு ஒரு கெடுதல் வந்து அண்ட விட்டிடுவமே? கலியாணம் எண்டால் சின்னச் சோறு கறி ஆக்கிற அலுவலிலை. அதைப் பெரியவங்களின்ரை பொறுப்பிலை விட்டிடு.. சோதினை பாஸ் பண்ணினாப் போலை போதுமே? நல்ல உத்தியோகம் ஒண்டிலை உன்னைக் கொழுவிவிட வேணும் எண்டு நான் ஓடித் திரியிறன். நீ என்னடா எண்டா குறுக்கால தெறிக்கப் பார்க்கிறாய் இனிமேல், ஒண்டு சொல்லிப் போட்டன். அந்தப் பலகாரக்காரியளின்ரை கதை இந்த வீட்டிலை எடுக்கப்படாது" எனப் பேசி முடித்தார்.

பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்ததுடன் சாம்பசிவத்தார் நின்று விடவில்லை. ஓடி அலைந்து பிற்கதவுகளில் நுழைந்து பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து இழுக்க வேண்டிய கயிறுகளை இழுத்து மகன் சந்திரசேகரத்தை நல்லதொரு உத்தியோகத்திலே மாட்டிக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். அதற்குப் பின்னர் தான் சாம்பசிவத்தார் நிம்மதியாகத் தூங்கினார் என்று கூடச் சொல்லலாம்.

தூங்குவதான பாவனையில் பழைய சம்பவங்களை அசை போட்டுக் கொண்டு கிடக்கிறார் சந்திரசேகர்.

"சரசக்கா! எப்பிடிப் பாடுகள், உடம்பு கொஞ்சம் இளைச்சுக் கிடக்குது" இது பூரணத்தின் குரல்.

அவளின்ரை குரல் அப்பிடித்தான் கிடக்குது? ஒரு உடைவோ ஒரு காசைப்போ? பக்கத்து வீட்டாரைப் பற்றிய நினைவின்றி இயந்திர வாழ்க்கை உருளும் கொழும்பில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு அயல் வீட்டுப் பிரிவு புதுமைச் சுவையை ஊட்டுகிறது.

"வாருங்கோ பூரணமக்கா! பழக்கமில்லாமல் பூட்டிக் கிடந்த வீடு. உதைத் துடைச்சுத் துப்பரவாக்கிறதுக்கிடையிலை இடுப்பு முறிஞ்சு போடுமெணை. உதென்ன சருவச் சட்டிக்கை?"

"இதெணை கொஞ்சம் இராசவள்ளிக் கிழங்கு. புள்ளையளுக்குப் பிரியமா இருக்குமெண்டு கிண்டினனான். இது தானே மூத்த பொடிச்சி? உங்கை பாருங்கோவன், நல்ல வடிவா வளந்திருக்கிறாள். எக்கணம் என் கண்ணும் பட்டுப்போகும் எடுங்கோ புள்ளை. ஐயா நித்திரையே? அவருக்கும் கொஞ்சம் கொண்டு போய்க் குடு தங்கச்சி" சந்திரசேகரத்தார் தான் நித்திரையில் ஆழ்ந்து விட்டதாக நடிக்கிறார். "ஐயா, நித்திரையெண்டால் எழுப்பக் கூடாது" என்ற ஞாயிற்றுக்கிழமை பிற்காலத்தில் போயா தின மெட்னித் தூக்கங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பொதுவிதி அவரைக் காப்பாற்றுகிறது.

பழைய பூரணமே? பெருவிரல்களால் பத்து இடங்களில் குழிதோண்டி, இரண்டு வார்த்தைகள் பேசத் திக்குவாளே, அந்த மங்குளிப் பெண்ணா இவள்? இப்பொழுது கதை கண்டவுடன் சொர்க்கம் சந்திரசேகரத்தாரின் மனம் நினைவோடையைக் கிழித்துச் செல்கின்றது.

உத்தியோகமான புதிதில் கொழும்பிலே போர்டிங் சீவியம். அலாம் மணி, பிளேன் டீ, பேப்பர், முகச்சவரம், தந்த சுத்தி, குளிப்பு, முதலியன் பாண், விறுக்கு நடை, பஸ் ஓட்டம், கந்தோர் அலுவல்கள், டீயும் முசுப்பாத்தியும் அலுவல்கள், சோறு என்ற நினைப்பில் கல்லைக் கொறிக்கும் லன்ச் என்ற வித்தை, வம்பு மடம், அலுவல், டீ, நடை, பஸ், மெது நடை, அரட்டை, சாப்பாடு, இங்கிரமெண்டைக் காப்பாற்றப் படிப்பு, லைட் அவுட், தூக்கம்!

இராணுவ ஒழுங்கிலே நேரத்தின் ஆட்சிக்குள் உடலை வசக்கி எடுக்கும் இயந்திர இயக்கம். பின்னேர டீயுடன் ஒரு வடை. கடுதாசி விளையாட்டு வசுக்கோப்புப் படம் என்ற விதிவிலக்குகளுக்கு மேற்படி நேரசூசியில் மிகமிக ஒறுப்பாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மற்றும் பிரக்ஞை கூட ஸ்மரித்த இயக்கம். பக்கத்து வீட்டுப் பூரணத்தின் முகம் தலை நீட்டுவதுண்டு. நேரத்தின் இராக்கதம் அதனைப் பிடித்து விழுங்கும்.

சாம்பசிவத்தார் அனுபவசாலி, மகனை தனிக்க விடாது அடிக்கடி கொழும்புக்கு இஷ்டமான சோட்டைத் தீன்களுடன் வந்தார். எத்தனையோ குழையடி கோசுகளுக்குப் பிறகு, சரஸ்வதியை அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக்கி விட்டார். சரஸ்வதி ஆதனபாதங்களுடன் சீமாட்டியாக வந்து சேர்ந்தார். அப்பன் கீறிய கோட்டைத் தாண்டாத சற்புத்திரனாக நற்பெயரெடுத்து சந்திரசேகரம் இல்லற வாழ்க்கையில் இறங்கினான். மூன்று ஆண்டுகளாக மலடியோ என்று...

(17 ஆம் பக்கம் பார்க்க...)

# அலம்பல் ஆச்சி



○ செல்வி

சர்வதேசக் கொள்கை சர்வதேசக் கொள்ளை எண்ட பெயரிலை எங்கடை வீட்டின்ரை படலையள் திறந்து விட்டிருக்கிது. ஆரெண்டாலும் வரலாம், ஆரெண்டாலும் போகலாம். வேலிகள் பயிர்களை மேய்ஞ்சகாலம் போய், இப்ப பயிர்கள் வேலியை மேயிறகாலம். கொஞ்சம் கொஞ்சமா அரிச்சு அரிச்சு, வேலிசரிஞ்சு விழேக்கைதான், ஐயோ படலையை திறந்து விட்டிட்டமே எண்டு ஊர் கூடி ஒப்பாரி வைக்கப்போறம். சுத்துமதில் அடிச்சு விழுத்தினாப் பிறகு, இனிஎப்ப சுத்துமதில் கட்டுப்படும் எண்டு பாத்துக் கொண்டிருக்கிறதை விட்டுட்டு ஒரு அலம்பல் வேலியெண்டாலும் கட்டினாதான் கண்டது, கடியதுகள் எல்லாம் உள்ளை வராதுகள். இல்லாட்டி நாளைக்கு பெண்ணிய, சமய, சாதிச் சங்கங்கள் தான் எங்களை ஆளும். தமிழும் தேசியமும் வீட்டுக்கோடியுக்கை தற்கொலை செய்யும் முயற்சியிலை இருக்கும். இனி அலம்பல் வேலிகட்டுறதுக்கு கூட எத்தினை சில்லெடுப்புக்கள். ஆர் அலம்பல் காட்டுக்கு போறது எண்டதிலை இருந்து, நீகட்டுற வேலி பிழை எண்டு, கட்டின வேலியையும் சிரைக்கிறது. பிறகு உன்ரை வளவுக்கை என்ரை எல்லை கிடக்கு எண்டு வேலிச்சண்டை பிடிச்சுக் கொண்டிருக்க, உள்ளை நுழையிற சேனையளெல்லாம் சத்தமில்லாமை நுழைஞ்சுபோடும். என்னபெடியள், ஆச்சிக்கு முத்திப்போட்டுது போலை கிடக்கு வேலி சண்டை எண்டு அலம்புறா எண்டு நைக்கிறியளோ? என்ன செய்யிறது. புலம்ப வைச்சிட்டிங்கள்.

யாழ்ப்பாணத்தை இந்தியாவின்ரை இன்னொரு மாநிலமா மாத்தப் போறாங்கள் எண்டு வாயாலை வடைசுடுற அளவுக்கு செயலாலை என்ன செய்தனாங்கள் எண்டு கேட்டா, சொல்லத் தெரியேல்லை. ஒண்டுமே செய்யாமை.. வாறதெல்லாம் வாங்கோ எண்டு வரவேற்றுக் கொண்டிருக்கிறம். சொன்னா வெக்கக்கேடு வெளியிலை. முந்தியெண்டா ஆர் வந்தாலும் வாங்கோ.. உங்கடை பருப்பெல்லாம் எங்களிட்டை வேகாது எண்டு சொல்லக்கூடிய மாதிரி நிலைமையிலை இருந்தம். இப்ப? சில இலக்கியவாதிகளும் அரசியல்வாதிகளும் அந்த பருப்புகளை வேகவைக்கிறதுக்கு ஆயத்தமா நிக்கினம். இன்னும் சில அரசியல் இலக்கியவட்டுகள் "அடுப்பு எல்லாம் மூட்டி வைச்சிருக்கிறம் பருப்புகளைகொண்டு வாங்கோ" எண்டு கூவுதுகள். என்னவோ பெரிசா கிடைக்கப்போகுதெண்டு கனவுகண்டு கொண்டுதான் உதுகள் எல்லாத்தையும் உவங்கள் செய்யிறாங்கள். கடைசியிலை நாமம் தான் கிடைக்கும்.

பண்டிகைகள் எல்லாம் நல்லாதான் இருக்கும். அந்தந்த மண்ணிலை செய்யேக்கை. கந்தையற்றை பேத்தையும் நிறங்களைப் பூசிக் கொண்டு கோலிப் பண்டிகையும் கொண்டாடப் போகுதெண்டு அறிஞ்சன் டாப்பா. ஆத்தையின்ரையும் போச்சு, பாறாத்தையின்ரையும் போச்சு எண்ட கதையாதான் முடியப்போகுது போலை. எத்தினை வருசமா தமிழ்நாடு இந்தியான்ரை கட்டுப்பாட்டுக்குள்ளை இருக்கிது. ஆனா, உந்தப் பண்டிகைகளை புகுத்திறேக்கு முடியேல்லையே. ஏனெண்டா, அதுகள் போராட பிறந்த சமூகம். இரத்தத்திலை இனம் எண்டது ஊறிப்போய்க் கிடக்கு. ஆனா நாங்கள்? வந்த வெள்ளைக்காரர் முதல் இப்ப இருக்கிறஎதிரியள் வரை, காலை நக்கிக் கொண்டு கலாசார இடைவெட்டுக்கு இடமளிச்சுக் கொண்டிருக்கிறம். இப்ப தீபாவளி எங்கடையோ அவங்கடையோ எண்டு விவாதிச்சுக் கொண்டிருக்கிறது போலை, என்ரை பூட்டன், பூட்டியின்ரை பேரப்பிள்ளையள், கோலி எங்கடையோ அவங்களின்ரையோ எண்டு விவாதிக்க வைக்கிறதுக்குதான் நாங்கள் அடுக்கெடுக்கிறம். தலித்தியம், சாதியம், மதவாதம் எண்டு வரிசைகட்டிக் கொண்டு நடுச்சென்ரரிலை நிக்கினம் தேசியத்தை அழிக்கிக்கு. உண்ணானை கேக்கிறன். உந்த வில்லண்டமெல்லாம் இப்ப எங்களுக்கு தேவையோ? மதத்தின்ரை பேரைச் சொல்லி சனத்தை துண்டாக்கி, அந்தத் துண்டை சாதியாலை துண்டாக்கி, வெறும் பலமற்ற குழுக்களாக்கி அதாலை எங்களை அடக்கலாமெண்டு கனவு காணுகினம். உந்த நோஞ்சான் கோழி சிங்கள வனே தந்திரமா எங்களை அழிச்சுப்போட்டான். அரசியல் சாணக்கியன்கள் இருக்கிற இந்தியன் எங்களை சும்மா விடுவானோ? இந்திய பண்டிகைகளை நாங்களும் புளுகிப் புளுகி கொண்டாடப் போறம். இண்டைக்கு ராக்கி கட்டுவம். நாளைக்கு கோலி கொண்டாடுவம். நாளையிண்டைக்கு??? ஐயையோ நாடு போயிட்டுதே எண்டு கத்திக் குளறுவம். இருக்கிறதை காப்பாத்த காணேல்லை. பறக்கிறதுக்கு ஆசைப்படுறம்.

என்னவோ ஒரு கிடுகுவேலியோ.. அலம்பல் வேலியோ அடைக்காட்டி, மிச்சமிருக்கிறவீடும் களவுபோயிடும். அறுக்கையா இருக்கோணும். ஆர் அடைக்கிறதெண்டு சண்டைபிடிச்சு முடியுங்கோ.. நான் உதிலை ஒருக்கா போயிட்டுவாறன். ●

# அவள் வீடு
## ஓர் அனுபவப் பகிர்வு

அவள் வீட்டு வாசலில் ஏறியதும், என்னவோ? ஏனோ என் மனம் களைத்துப் போனது. வார்த்தைகள் வர மறுத்து, வாசலிலேயே அமர்ந்து விட்டேன்.

அவள் உணர்வுகள் நான்கு வரிகளுக்குள்ளேயே, எம் சமூகத்தின் போலித் தனங்களைக் கட்டிப் போட்டு விட்டன.

அவள் வரிகளிலே சொல்வதானால்

*..........வாசலில் நின்று வரவேற்க முடியாதவளாய், மலர் மாங்கல்யம் அணிய முடியாதவளாய்.... அலங்காரங்கள்*
*அத்தனையும் மறுக்கப் பட்டவளாய்,....... சுமைகளுக்குள் வலிந்து சுமத்தப்பட்டவளாய்...*

இப்படியே நீள்கின்றன அவள் வரிகள்.

சித்ரா பிரசன்னா ஓர் ஆசிரியை. கற்பனைகளின் வடிவம் கவிதைகள் என்பதற்காய் வெறும் ஒப்பனைகளால் அலங்கரிப்பவளல்ல. ஆழ் மன உணர்வின் மொழிகளால், உள்ளங்களுக்குள்ளேயே உட்கார்ந்து பேசும் ஆற்றல் மிக்க கவிதைகளுக்கு உரித்துடையவள்தான், இந்தப் பெண் சித்ரா.

கவிதைகளின் கனம் எப்படி என்று அளக்க அளவுகோல்களுடன் திரிபவர்கள், முதலில் அவளின் மனதின் கனம் உணர்தலே அவசியமாகிறது.

தன் நெஞ்சின் சிலுவைகளை இறக்கி வைக்க, ஒரு நெம்பு போன்று அவளுக்குக் கவிதை கை கொடுக்கிறது. அவ்வளவுக்கு கவிதையே அவளை ஆற்றுப்படுத்த...... ஆசிர்வதிக்க..... ஆமோதிக்க.... எல்லாமுமாய் நின்று உதவ, உற்ற துணைக்கரமாய் இருந்து வருகிறது என்றே நினைக்கிறேன்.

*நான்*
*புத்தனுக்குப் பக்கமுமில்லை.......*
*காந்திக்குச் சொந்தமுமில்லை*
*திரேசா அம்மாவின் தேசமும் இல்லை....*
*ரௌத்திரம் பழக*
*சொன்னவன் வர்க்கம்*

எனத் தன்னை ஓர் புரட்சித் தீயாக.... எழுச்சிப் பெண்ணாக.... தன் சுயத்தை சூட்சுமமாகச் சொல்லியிருக்கிறார் சித்ரா..

ஆக உச்சமாய்ப் பிடித்த சித்ராவின் கவிதைகளில் இதுவும் ஒன்று.

*மயிர் நீப்பின்*
*உயிர் வாழாக்*
*கவரிமான்கள்*
*மொட்டையடித்த பின்பும்*
*சுற்றித் தரிகின்றன.*

ஆகா.....இன்று எம் கூட எத்தனை பேர் இப்படி நகைப்புக்கிடமாகத் திரிகின்றார்கள்.. அன்று பேசியவை ஒன்று. இன்று பேசுபவை ஒன்று.

அன்றொரு முகம். இன்றோரு முகம்.. வேடிக்கை.

தன் கவிதைகளூடே, உணர்வுகள் மரத்துப்போன பல மனிதர்களைப் படம் போட்டுக் காட்டுகின்றார்.

விதவை என்ற கவிதையில்,

*அடுத்த சன்னம்*
*அவள் நெற்றியில்*
*வந்த இரத்தத்திற்குத்*
*தெரியாது.*
*முதல் சன்னம்*
*அவள் கணவனைக்*
*காவு கொண்டது*

சன்னங்கள் தின்று சப்பித் துப்பிய எத்தனை பேரின், வாழ்க்கையைத் தன் வார்த்தைகளால் தன் வலிகளின் ஊடாக உணர்த்தியுள்ளார்.




- வேலணை சுரேஷ்

இந்த உணர்வுகளையே தன் கவிதைகள் பலவற்றில் இமையோடவிட்டதன் ஊடாக ஒரு பெண்ணுக்கு இருக்கக் கூடிய வாழ்வின் ஏக்கங்கள், தவிப்புக்கள், எதிர்பார்ப்புக்கள் எண்ணப் பிரதி பலிப்புக்களாக வெளி வந்துள்ளன.

இங்கே ஒன்றை ஆணித்தரமாகக் குறிப்பிடவேண்டியள்ளது. கைம்பெண் விதவை என்கின்ற வார்த்தைகள் முதலில் தமிழில் இருந்து அகற்றப்பட வேண்டும். கணவனை இழந்தவள் பாவப்பட்டவளோ! சபிக்கப் பட்டவளோ! தீட்டுப் பெண்ணோ அல்ல. அவளும் வாழ வகை செய்ய இந்தச் சமூகம் தலைப்பட வேண்டும்.

நற்காரியங்களெல்லாம், நாணற் புற்களாய், கூனிக் குறுகி நிற்பதை விடுத்து, நடு நாயகிகளாய் நிற்பதில் என்ன அபசகுனம் நிகழப்போகிறது. எல்லாம் எம் நம்பிக்கையில் தான் இருக்கிறது.

இறுதியாக ஒரு கவிதை.

*நீ வருவாய் என.... என்கின்ற*
*கவிதையில்....*
*பேருந்தில் ஏறியதும்*
*யன்னலோரம்*
*அமர்ந்து கொள்கிறேன்.*
*வழியில்*
*எப்போதாவது*
*நீ*
*எதிர்ப்படலாம்*
*என்ற நம்பிக்கையில்.......*

காணாமற்போனவர்களின் பட்டியலில் இவள் கணவரும் .... என்கின்ற உண்மை ஒரு செய்தியாகப் படிப்பவர்களுக்கு இருக்கலாம். ஆனால் இந்தப் பெண்ணைப் பொறுத்தவரை, அது அவள் வாழ்க்கை. அவள் எதிர்காலம்.

கேள்விக் கணைகளுக்கு மத்தியில் ஓர் ஆச்சரியக் குறியாய் சித்ரா பிரசன்னா, அம் மண்ணில் கவிஞர்களுக்குள் துலாம்பிகமாகத் தென்படுகிறார்.

'அவள் வீடு' கவிதை நூல் அண்மையில் வெளிவந்த நூல்களுக்குள் உணர்வுத் தளத்தில் நின்று எம் மனங்களில் வித்தியாசமான புரிதல்களைப் புரிய வைக்கின்றது. கவனம் செலுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் சித்ராவுக்குக் கடமையாகின்றது. உச்சத்திற்கு வரவிருக்கும் - உதய நிலவு - பூரண நிலவாக மிளிரும் - ஒளிரும் என்பதற்கு இந்நூல் கட்டியம் கூறி நிற்கின்றது.


# நீங்களும் எழுதுங்கள்!

'புதுவிதி' வாரசஞ்சிகையில் உங்கள் படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? தயக்கம் வேண்டாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, நிகழ்வுக் குறிப்பு எதுவாயினும் எழுதி அனுப்புங்கள். தரமான படைப்புகளுக்கு புதுவிதியில் பிரசுரமாக களம் அமைத்துக் கொடுக்கப்படும். படைப்புகளை தபால்/மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com


வல்லிபுர தீர்த்தத்தின் போது

# வாரச்சக்கரம்
## வாரப்பலன்

**மேடம்**
நற் பண்பு. தேக மெலிவு. புதல்வர் சிந்தனை. காரியத் தடை. கல்விச் சிறப்பு.

**ரிஷபம்**
சிந்தனை. வேளாண்மை பலிதம். சொத்து கரிசனை. வேள்வி.

**மிதுனம்**
கர்வம். காலதாமதம். வேலைப் பளு. தூக்கமின்மை. நிலை மாற்றம். உறுதி.

**கடகம்**
மகிழ்சி. மனைச் சிறப்பு. வேளாண்மை பலிதம். பாவமறிதல். கல்வி சிறப்பு.

**சிம்மம்**
கடன் தொல்லை. தெய்வ சிந்தனை. தானிய சிறப்பு. சமூக நலன்.

**கன்னி**
எளிமை. எண்ணம் ஈடேறல். கால தாமதம். காரியத் தடை.போகச் சிறப்பு.

**துலாம்**
பணமுடை. ஈகைச் சிறப்பு. கல்வி முன்னேற்றம். தருமகாரிய சித்தி. உறவு.

**விருச்சிகம்**
வேலையாட்கள் சிறப்பு. மனைமாட்சி புதிய உறவு. சிந்தனை வலுப்படல்.

**தனுசு**
தனவரவு. ஊதிய உயர்வு. மனைச் சிறப்பு. ஏக்கம். எளிமை.

**மகரம்**
வீண் அலைச்சல். குறைகேட்டல். தர்மம் வலுப்படல். துறவு. ஞான மோகம் தியானம்.

**கும்பம்**
ஆன்ம சிந்தனை. அங்கீகாரம். சமூக பொறுப்பு. கல்வியில் ஆர்வம்.

**மீனம்**
இசைப்பிரியம். ஈகை மேம்படல். உறவு இணைதல். காதல் மேலிடும். கனவு பலிதம்.

## "தடை தகர்" குறுந்திரைப்பட வெளியீடு



யாழ்ப்பாணக் கல்லூரியின் சாரணர் குழுவின் நூற்றாண்டை முன்னிட்டு கல்லூரி சாரணர் குழுவினரால் கல்லூரி ஆசிரியர் யோசித்தன் அவர்களின் இயக்கத்தில் உருவான "தடை தகர்" எனும் குறுந்திரைப்படம் 14.10.2016 அன்று கல்லூரி அதிபர் வண கலாநிதி டி .எஸ் ,சொலமன் பிரதம விருந்தினர் சத்தியன், சிறப்பு விருந்தினர் திருமதி அருந்ததிதேவி சச்சிதானந்தம், திரு கணபதி சர்வானந்தா, சாரண பொறுப்பாசிரியர் திரு.சுதர்சன் ஆகியோர் வெளியிட, திரு இ. எஸ். பேரம்பலம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.





'மூகரம்' சிற்றிதழ் விமர்சனக் கூட்டம் ஒக்டோபர் 15 மாலை, யாழ்ப்பாணம், புதிய உயர் கல்லூரி மண்டபத்தில், தெ. மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது.

சி. ரமேஷ், தி. செல்வமனோகரன், கவிஞர் ந. சத்திய பாலன் ஆகியோர் விமர்சன உரையாற்றினர்.


மலையக தொழிலாளிகளின் சம்பள உயர்வுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழகம் திரண்ட போது (ஒக்டோபர் 14)



நடனக் கலைஞர் திருநங்கை நர்த்தகி நடராஜ் அவர்களுக்கு தஞ்சை பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் 'டொக்டர்' பட்டம் வழங்கி சிறப்பித்தது.

தமிழ்நாட்டில் 'டொக்டர்' பட்டம்பெறும் முதல் திருநங்கை நர்த்தகி நடராஜ் ஆவார்.

இந்திய அளவில் கலைத் துறை சிறப்புக்காக 'டொக்டர்' பட்டம் பெறும் முதல் திருநங்கையும் இவரே.

நாடக செயற்பாட்டாளரும் ஓய்வு பெற்ற பேராசிரியருமான சி.மௌனகுருவின் 'சார்வாகன்' குறுநாவல் அறிமுகக் கூட்டம் 14.10.2016 அன்று மாலை 4.30 மணிக்கு 49,சின்ன உப்போடை அல்மெய்டா கலை மண்டபத்தில் ( மட்டக்களப்பு) நடைபெற்றது.






## வலிகாமக் கல்வி வலயத்தில் வெற்றி பல காணும்


# யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை

வட மாகாணக் கல்வி வரலாற்றில் இடம் பெறக்கூடிய முதன்மைக் கல்விக் கூடங்களில் யாழ்ப்பாணம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரியும் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் சுன்னாகப் பிரதேசத்திலுள்ள கந்தரோடைக் கிராமத்தில், டாக்டர். சுப்பிரமணியம் வீதியில் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அமைந்துள்ளது. இக் கல்லூரியில் வட மாகாணத்தின் பல பிரிவுகளிலும் இருந்து மாணவர் தங்கி நின்று படித்ததான வரலாறும் உண்டு. அதற்கேற்றவாறு மாணவர் விடுதியும் அங்கு இருந்தது. பல போற்றத்தக்க புலமையாளர்களை உருவாக்கிய பெருமையுடன் இக் கல்வி நிறுவனம் நிமிர்ந்து நிற்கின்றது.

இத்தகைய போற்றத்தக்க வரலாறுடன் பயணித்த யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, 2010 ஆம் ஆண்டு 'இசுறு' திட்டத்தில் இணைந்து கொண்டது. இதன் பயனாக யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை உதயமானது. இந்தப் பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தில் 15.06.2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடசாலையின் தோற்ற மானது கந்தரோடைக் கிராமத்தையும் அது சார்ந்த பிரதேசத்தையும் அண்டி வாழும் ஆரம்பக் கல்வியைக் கற்கின்ற மாணவர்கள் மத்தியில் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது தற்போது புதிய கட்டடத் தொகுதியில் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது. கிடைக்கின்ற வளங்களை வைத்துப் பாடசாலையை வழி நடத்த ஆசிரியர்களும், பாடசாலை பழைய மாணவர்களும் பெரு முயற்சியெடுத்த வண்ணமிருப்பது பாராட்டுக்குரியது.

## சாதனைகள்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இம்முறையும் 7 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தி பெற மேலும் 30 மாணவர்கள் 100 புள்ளிக ளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றனர்.

2015 ஆம் ஆண்டு "சிறுவர் அரங்கு" நாடகப் போட்டியில் முதலாம் இடம் பெற்று வெற்றிச்சாதனை புரிந்தது. துரித கணிதச் செய்கைப் போட்டியில் இரண்டு மாணவர்கள் இவ் வருடம் மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். தமிழ்த்தினப் போட்டியிலும் ஆங்கில தினப்போட்டியிலும் தலா இரண்டு மாணவர்கள் இவ் வருடமும் கோட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றனர். "செயற்பட்டு மகிழ்வோம்" போட்டியில் கோட்ட மட்டத்தில் குறித்த பாடசாலை தரம் 5 அணி, இரண்டாம் இடம் பெற்றது. தமிழ்த்தினப் போட்டி 2016 இல் சா.பிரதீபன் வலய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், சி.ஆயிசா ஆங்கில தினப் போட்டியில் வலய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## சவால்கள்

புதிய அமைவிடத்தில் கல்வி கற்றலுக் குரிய பரிபூரணமான வளங்கள் பற்றாக் குறையானது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். புதிய கட்டடத்தொகுதி நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம். கட்ட டங்கள் பூரணமடைகின்ற பட்சத்தில் மாணவர்கள் விளையாடுவதற்குரிய இடப்பற்றாக்குறை ஏற்படும். அப்போது தற்போதுள்ள மைதானம் குறுகிவிடும். அப்படியான சந்தர்ப்பத்தில் மேலதிக இடக் கொள்வனவு அவசியமாகிறது. மாணவர்கள் விளையாடத் தேவைப்படும் விளையாட்டுப் பொருட்களின் கொள்வ னவும் அவசியமாகிறது. அத்துடன் தற்போதுள்ள பாடசாலையைச் சுற்றி மதில் அமைக்கின்ற பணி நிறைவெய்தாது இருக்கிறது. மாணவர்களுக்கு வாசிப்பின் அவசியம் பற்றிக் குறிப்பிடும் போது அவர்களுக்கு அதற்கேற்றாற்போல நூல்களையும் கிடைக்கச் செய்வதற்கு சிறுவர் நூல் நிலையத்தின்தேவை மிகவும் அவசியப்பட்டது. நூல் நிலைய நிர்மாணமும் அதற்கான நூல்களும் தேவைப்படுகின்றன. தற்போது தற்காலிக குடிநீர் வசதியுண்டு. எனவே நிரந்தரமான குடிநீர் தாங்கி பொருத்தப்பட்டு மாணவர் கள் இலகுவாகக் குடிநீரைப் பெறக் கூடிய சூழ்நிலையொன்றை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பாடசாலையின் மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிக ளைப் பெற்றுக் கொள்வதற்கு பழைய மாணவர்களினதும், பாடசாலையைச் சமூகத்தினதும் உதவி கிட்டுமாயின் இங்குள்ள மாணவர்களினது கல்வித் தரம் மென்மேலும் உயர வாய்பிருப்பதாக பாடசாலை நிர்வாகம் கருதுகிறது.








## சுவரில் கொய்தவை

**Kiruththikan Yogarajah**

ஸ்கொலர்ஸிப் எண்டும் சொல்லலாம் கொல(லை)சிப் எண்டும் சொல்லலாம் ஏதாவது நியூஸ் வந்திடுமோன்னு பயமா இருக்கு

**Sabee Naa**

ஒருவன் செய்த கெட்டதுகள் மட்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தால் நாம் அவனுக்கு துரோகம் செய்ய ஆயத்தமாகிவிட்டோமென அர்த்தம்!

**Vfx Charlas**

இன்றைய காதல் என்பது செல்போன் நம்பரை வாங்குவதில் தொடங்கி,
சிம்மை மாற்றுவதில் முடிந்துவிடுகிறது

**Aathi Parthipan**

புண்பட்ட இதயங்களுக்கு இசை மருந்து கொடுக்கவே யாழ்ப்பாணம் வந்தோம்
- SPB

பிறைவற் கொஸ்பிற்றல் ரீட்மன்ட் போல




ஆசிரியர் : நியூட்டன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கும்போது, அவர் தலையில் ஒரு ஆப்பிள் விழ, அவர் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது?

மாணவன் : இப்படி வகுப்பறையில உட்கார்ந்துக்கிட்டு சும்மா புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு இருந்தா ஒண்ணும் கண்டுபிடிக்க முடியாதுன்னு தெரியுது.







## கடி ஜோக்ஸ்

கடவுள்: மனிதா, உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?
மனிதன்: இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ரோடு போட்டுக் கொடு சாமி
கடவுள்: அது கஷ்டமாச்சே... கடல்ல எப்பிடிப்பா ரோடு போட முடியும் வேறு ஏதாவது கேள்
மனிதன்: அப்ப என் மனைவி பேச்சைக் குறைக்கனும், நான் சொல்றதை மட்டும்தான் கேட்கனும், எதிர்த்து பேசக்கூடாது.
கடவுள்: அமெரிக்காவுக்கு ரோடு சிங்கிளா, டபுளா...?

என்னைப்பொறுத்த வரைக்கும் மாற்றுத் திறனாளிகளையோ திரு நங்கையர்களையோ ஒதுக்கி வைத்தல் புறக்கணித்தல் என்பன மட்டுமில்ல...

அவர்களை நாங்கள் மதிக்கிறோம் என்ற பெயரில் செய்யும் முக்கியப்படுத்தலும் செயற்கையான மரியாதையும் கூட அவர்களை நம்மிடம் இருந்து தூரப்படுத்தும் ஒன்றுதான்.


ஆண்கள், பெண்கள், சாதாரணமானவர்கள் இவர்களை எல்லாம் எப்படி பார்க்கிறோமோ, நடத்துகிறோமோ, சாதாரணமாக கடந்து செல்கிறோமோ அதுபோலவே இத்தகையவர்களிடமும் நடந்து கொள்ளுதலே அவர்களுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய உபகாரமா இருக்கும். அவர்களை மதிக்கிறேன் பேர்வழியென்று நீங்கள் செய்யும் இந்த செயற்கையான அருவையான அக்கறையே அவர்களை நம்மிடமிருந்து பிரித்து வித்தியாசப்படுத்தி காட்டுவது போலத்தான்.

கபாலி படத்துல சொல்லுற மாதிரி நீங்க காட்டுற கருணையே அவர்களுக்கு மிகப்பெரிய வேதனையை அளிக்கும்.

துர்க்கா தரன்

## அப்பா எனக்கு பீப்பி வாங்கி தாங்க..

வேணாம் நீ எல்லாரையும் டிஸ்டர்ப் பண்ணுவ.



இல்லைப்பா, நான் எல்லோரும் தூங்குனதுக்கு அப்புறம் ஊதுறேன்..

## வைகைப்புயல் வடிவேலு

திரைப்படங்களில் பயன்படுத்திய வார்த்தைகளை கல்லூரியில் எவ்வாறு பயன்படுத்துவார்கள்?

Class Test : சொல்லவே இல்ல...

Teaching : முடியல ...

Exam : உக்காந்து யோசிப்பாயிங்களோ....

Arrears : ரிஸ்க் எடுக்கறதெல்லாம் எனக்கு ரஸ்க் சாப்பிற மாதிரி...

Bit : எதையும் பிளான் பண்ணி பண்ணனும்...

Result : மாப்பு.. வச்சிடாண்டா ஆப்பு..

Degree : வரும்... ஆனாவராது...

Assignment : ஹா .:. இது ரொம்ப புதுசா இருக்கே..

Class Attendance : அது போன மாசம்.. நான் சொன்னது இந்த மாசம்..

Professors : ஒரு குருப்பாதான் அலையுறாங்க...

Lecture : இப்பவே கண்ண கட்டுதே..

Student Fight : இந்த கோட்ட தாண்டி நானும் வரமாட்டன்.. நீயும் வரப்படாது.. பேச்சு பேச்சா இருக்கணும்.

## குடியை நிறுத்த ஒரு குட்டிக்கதை...

ஒரு குடிகாரன் ஞானி ஒருவரைத் தேடி அவர் இருக்குமிடத்துக்கு வந்தான்.
"நானொரு குடிகாரன். நான் திருந்துவதற்கு ஒரு வழி கூறுங்கள் ஐயா..." என்று கேட்டுக் கொண்டான்.
அதற்கு ஞானி, "நாளை மாலை என்னை வந்து பார் சொல்கிறேன்".
மறுநாள் மாலை குடிகாரன் ஞானியைத் தேடி வந்தான்.
அப்போது ஞானி ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றார்.
தூணைப் பார்த்து, "ஐயோ என்னை விட்டுவிடு... விட்டுவிடு..." என்று கத்திக் கொண்டிருந்தார்.
உடனே குடிகாரன், "நீங்கள் தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டுவிடுங்கள்" என்றான்.
உடனே ஞானி சிரித்துக் கொண்டே, "நான் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பது போல, நீ தான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே விட்டுவிடு" என்றார்.

## இந்தவார மீம்ஸ் (Meme)




இணையவாசிகளுக்கு
உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/



'இமைக்கா நொடிகள்' படத்தில் 'ருத்ரா' என்ற முக்கியமான வில்லன் கதாபாத்திரத்துக்கு அனுராக் காஷ்யப் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அனுராக் காஷ்யப் 'நான் தான் ருத்ரா' என்று தனது ட்விட்டர் பக்கத்தில் ட்வீட் செய்து உறுதிப்படுத்தினார். மேலும், " 'இமைக்கா நொடிகள்' என்ற தமிழ் த்ரில்லர் படத்தில் அதர்வா மற்றும் நயன்தாரா ஆகியோருக்கு வில்லனாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறேன்" என்று குறிப்பிட்டு இருக்கிறார் அனுராக் காஷ்யப்.

8.45 AM

குறும்பட வெளி

தாத்தா, கருவறைத்தோ

பிரான்ஸ், கனடா, லண்டன் ஆகிய நாடுக
கருவறைத்தோழன் ஆகிய குறும்படங்கள்
ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.
ஏற்பாட்டாளர்கள் தெ

தனுஷுக்கு ஜோடியாக நடிக்க ஆர்வமாக இருக்கிறார் ரித்திகா சிங். "தனுஷ்தான் எனக்கு பிடித்த நாயகன். அவருடன் நடிக்க ஆசையா இருக்கு" எனப் பேட்டி கொடுத்திருக்கிறார். "வாய்ப்புகள் நிறைய இருக்கு. எப்படியாவது நடிச்சிருவேன்" என உறுதியாக சொல்லியிருக்கிறார்.

ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யாவும் சரி, சௌந்தர்யாவும் சரி... சினிமாவில் அடுத்தடுத்த முயற்சிகளைத் தீவிரப்படுத்தி இருக்கிறார்கள். இருவருமே அடுத்த படத்தை இயக்க ரெடி. ஐஸ்வர்யா பெண்ணியத்தை முன்னிறுத்தி சீரியஸான படத்தையும், சௌந்தர்யா காமெடி கலந்த காதல் கதையையும் திரைக்கதை ஆக்கியிருக்கிறார்களாம்!

லிங்குசாமி தயாரிப்பில் 'நான்தான் சிவா' படத்தை இயக்கிக் கொண்டிருந்தார் 'ரேனிகுண்டா' பன்னீர்செல்வம். படம் போதிய பணம் இன்மையால் பிரச்சினையில் சிக்கி பாதியில் நின்றுவிட்டதால், வாய்ப்புகள் கிடைக்காமல் இருக்க, அவரை அழைத்து தன் அடுத்த படத்தை இயக்கச் சொல்லி விட்டார் விஜய் சேதுபதி. கதாநாயகியாக கீர்த்தி சுரேஷை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.



சுவேதா மோகன், பாமா, மேக்னா ர... உள்ளிட்ட பலர் நடிப்பில் மலையாள... '100 டிகிரி செல்சி...' தமிழ் மற்றும் தெலுங்கில் ரீமேக் செய்யப்படவுள்ளது. ... படேல் ஆகியோர் ஒப்பந்தமாகி இருக்கிறார்கள். இதர ... வருகிறது. அடுத்த மாதம் முதல் படப்பிடி... இப்படம் வங்கி ஊழியர், இல்லத்தரசி, ஐடி துறையில் ... மற்றும் கல்லூரிப் பெண் என ஐந்து பெண்களுக்... ரீமேக் படங்களை மட்டுமே இயக்கிவரும் ப... இயக்கவுள்ளா...




சமுத்திரக்கனி இயக்கத்தில் உருவாகிய 'அப்பா' திரைப்படம் மலையாளத்தில் ஜெயராம் நடிப்பில் உருவாகவுள்ளது. 'பாபநாசம்' படத்தில் கமல்ஹாசன் ஜோடியாக நடித்த ஆஷா சரத்தும் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார். இதனை சமுத்திரக்கனி தயாரித்து இயக்கவுள்ளார்.



சோட்டானிக்கரை பகவதி அம்மன் ஆலயத்தில் இடம் பெற்ற நவராத்திரிக் கொண்டாட்... இடம் பெறும் பஞ்சாரி மேளகச்சேரியினை ... வருடமாகவும் மலையாள நடிகர் ஜெயராம் தலை... நடத்தியுள்ளார். 150 தாளவாத்தியக் கலைஞர்... பற்றுதலுடன் மூன்று மணித்தியாலங்கள் ... இடம் பெற்றது.





...கிய நாடுகளில் பல விருதுகளைப் பெற்ற இயக்குநர் மதி சுதாவின் தாத்தா, ...படங்கள் முதல் வெளியீடாக செல்லா திரையரங்கில் எதிர்வரும் 23.10.2016 ...வுள்ளது. இதற்கான ரிக்கற்றுக்களை பெற தங்களை தொடர்பு கொள்ளுமாறு ...ளர்கள் தெரிவித்துள்ளனர். மதிசுதா - 0773481379

'சிங்கம் 2' படத்தின் அறிமுகப் பாடலில் சூர்யாவுடன் குத்தாட்டம் போட்டார் நடிகை அஞ்சலி. 'சிங்கம் 3' படத்திலும் அதேமாதிரி ஒரு குத்துப்பாட்டுக்கு நடனமாட ஒரு சில நடிகைகளிடம் பேசி வந்தார்கள். இறுதியாக 'கன்னித்தீவு பொண்ணா' பாட்டுக்கு ஆடிய நீது சந்திராவை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் செம்ம குத்தாட்டம் போட்டிருக்கிறாராம் சூர்யா.




ரஜினி நடிக்க, ஷங்கர் இயக்கிக்கொண்டிருக்கும் '2.0' படத்தில் ஒரு முக்கியமான வில்லன் கதாபாத்திரத்துக்கு மலையாளத்தின் பிரபல வில்லன் நடிகரான கலாபவன் சாஜனை அழைத்து நடிக்க வைத்திருக்கிறார் ஷங்கர். படத்தில் இவருடைய கேரக்டருக்கும் ரொம்ப முக்கியத்துவம் இருக்கிறதாம். "படம் வெளியாகும்போது பிரபலமாகி விடுவேன்!" எனச் சொல்லி பெருமிதப்படுகிறார் சாஜன்.

கங்கனா ரணாவத் சமீபத்தில் கலந்துகொண்ட இந்தி திரைப்பட விழாவில், "நான் தமன்னாவின் தீவிரமான ரசிகை. அவர் நடித்த எல்லா படங்களையும் பார்த்திருக்கிறேன். குறிப்பாக, அவரின் நடனம் என்னை ரொம்பவே கவர்ந்துள்ளது. என்னால் அவரைப் போல நடனமாட முடியாது!" என ஏகத்தும் புகழ்ந்துள்ளார்.



...கவேதா ...மேக்னா ராஜ், அனன்யா ...மலையாளத்தில் வெளியான படம் ...ரி செல்சியஸ்' ...வுள்ளது. இப்படத்தில் லட்சுமி ராய் மற்றும் நிகிஷா ...கள். இதர நடிகைகள் தேர்வு தற்போது நடைபெற்று ...ல் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. ...துறையில் பணியாற்றுபவர், தொலைக்காட்சி நிருபர் ...பெண்ணுக்கு இடையே நடக்கும் கதையாகும். ...கிவரும் மித்ரன் ஜவஹர் இப்படத்தையும் ...க்கவுள்ளார்.



'பிரேமம்' படத்தைச் சிதைத்த தெலுங்கு திரையுலகம், இந்தியில் சேட்டன் பகத் இன் 2ஸ்டேட்ஸ் நாவலை திரைக்கதையாக்கி சூப்பர் ஹிட் அடித்த '2 ஸ்டேட்ஸ்' படத்தைத் தெலுங்கில் ரீமேக் செய்கிறது. நாக சைதன்யாவையே இந்தப் படத்திலும் நடிக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன. இதே படத்தின் மூலம் பாலிவுட்டின் அழகுப் புயல் ஆலியா பட்டை தெலுங்கில் அறிமுகம் செய்யவிருக்கிறார்களாம்.

சுந்தர்.சி தயாரிப்பில் 'ஹிப் ஹாப்' தமிழா நாயகனாக நடித்து 'மீசைய முறுக்கு' என்ற படத்தை இயக்கியும் இருக்கிறார். 'மீசைய முறுக்கு' படத்துக்கு கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், இசை மற்றும் பாடல்கள் என முக்கிய பொறுப்புகளை ஏற்றியிருக்கிறார் 'ஹிப் ஹாப்' ஆதி. தற்போது அப் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீஸர் வெளியிட்டு இருக்கிறார்கள்.

...த்தில் ...ண்டாட்டத்தில் ...ரியினை மூன்றாவது ...யராம் தலைமையேற்று ...கலைஞர்களின் பங்கு ...லங்கள் இந் நிகழ்வு ...தி.

'மனசுக்குள் ஒரு மழைச்சாரல்' ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் ஒரு முறை திரையிடப்பட்வுள்ளது. ராஜா திரையரங்கில் எதிர்வரும் 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை 10.30, 2.30 காட்சிகளாக காண்பிக்கப்படவுள்ள காட்சிகளுக்கான ரிக்கற்றுக்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என படக்குழு தெரிவித்துள்ளது.
TP: +94 77 8082309, +94 77 5694389, +94 77 6610724





# பூதத்தீவுப் புதிர்கள்

சிறுவர் தொடர்

செங்கை ஆழியான்

19



பதில் சொல்லக் காத்திருந்த பன்னிருவரில் எண்மர் சத்திரத்து முற்றத்தில் சிலையாகினர். பத்தாவதாக வந்த சுரேஸ் சரியாகப் பதில் சொன்னான்.

"சரி இனி நீங்கள் எல்லோரும் சத்திரத்துள் செல்லலாம்" என்றது பத்தாவது சிலை ஏமாற்றத்துடன். அவர்கள் தப்பினோம் பிழைத்தோம் என்று எண்ணியபடி சத்திரத்துள் நுழைந்தனர். அங்கு அவர்களுக்காக விருந்து தயாராக இருந்தது. அறுசுவை உணவுகளின் வாசனை மூக்கைத் துளைத்தது. அவர்களுக்கு விருந்து படைக்கப் பலர் காத்திருந்தனர்.

வசந்தனுக்கு அருகில் கோபுரந்தாங்கி அமர்ந்து கொண்டது. இலையில் படைக்கப் படைக்க விழுங்கித் தள்ளியது.

"கோபுரந்தாங்கி.." என்று வசந்தன் அழைத்தான்.

"என்ன வசந்தன்" என்றது பூதம் ஒரு குவளைச் சோற்றை வாயில் திணித்தபடி.

"இந்தச் சிக்கல்களிலிருந்து விடுபட என்ன வழி? என் நண்பர்கள். ஆசிரியர்கள், படகோட்டி எல்லோரும் சிலையாகி விட்டனர். விடுபட வழியென்ன?"

"வழி சொல்கிறேன். அதற்கு முன் எனக்கு நீ இரண்டு கேள்விகளுக்கு சரியாக விடை தர வேண்டும். அவற்றிற்கு விடைகள் தெரியாததால் என்னால் இங்கு நல்லாகச் சாப்பிடவும் முடியவில்லை"

வசந்தன் பூதத்தைக் கோபத்துடன் பார்த்தான்.

"கேள்வி.. கேள்வி இதற்கு முடியவேயில்லையா?"

"இது நான் கேட்கும் வினாக்கள் அல்ல. என்னிடம் சின்னப்பு கேட்ட கேள்விகள். சத்திரத்தை விட்டு வெளியேறும்போதாவது வாசலில் நிற்கும் பெரியவர் சின்னப்புவிடம் அவர் கேட்ட கேள்விகளுக்குரிய பதில்களைச் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் இந்த மனிதன் என்னை முட்டாள் என்று எண்ணிவிடும்"

"சரி கேட்டுத்தொலை.." என்று எரிந்து விழுந்தான் வசந்தன்.

"சின்னப்புவிடம் உமது நிறை என்ன என்று கேட்டேன். அதற்கு அவர் தன்னுடைய நிறையையும் தன் பேரனின் நிறையையும் சேர்த்தால் 260 கிலோ கிராம் வரும் என்றும், தனது நிறை பேரனின் நிறையிலும் 200 கிலோகிராம் அதிகம் என்றார். அப்படியாயின் அவர் நிறை என்ன?"

"நீ எவ்வளவு என்று நினைக்கிறாய்?"

"அவருடைய நிறை 200 கிலோகிராம் தான்" என்றது பூதம்.

"இல்லை.. அவர் நிறை 230 கிலோகிராம். சரி மற்றைய கேள்வியைக் கேள்..."

"அவரிடம் அவரின் வயதென்ன என்று கேட்டேன். மூன்றாண்டுகளுக்குப் பின்னால் இருக்கும் என் பேரனின் வயதை மூன்றால் பெருக்கி, மூன்றாண்டுகளுக்கு முன்னால் இருக்கும் என பேரனின் வயதை மூன்றால் பெருக்கிக் கழித்தால் என் பேரனின் இன்றைய வயது வரும். ஆதைப் போல நான்கு மடங்கு என் வயது என்றார். அவர் வயது என்ன?"

"பேரனின் வயது 8. அவரின் வயது நான்கு மடங்கு என்றால் 72 ஆகும்" என்றான் வசந்தன். "அது சரி நீ எவ்வளவு கழுகு முட்டைகள் சாப்பிட்டாய்?"

"ஒரு முட்டையை பத்துத் தடவை இரட்டிப் பாக்கினேன். அவ்வளவு முட்டைகள்... என்று கோபுரந் தாங்கி சிரித்தது.

"பாவி.. 1024 முட்டைகளா விழுங்கினாய்?"

அவர்கள் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்தனர். மாணவர் எல்லோரும் திக்கிற்கொருவராகப் படுத்துவிட்டனர்.

"சத்திரத்தில் ஒரேயொரு பாயும் ஒரு தலையணியும் தான் இருக்கின்றன" என்றான் சத்திரக்காரன். கைகளைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு பிள்ளைகள் அயர்ந்து உறங்கினர்.

"அதைக் கொண்டுவா.." என்றது கோபுரந்தாங்கி. சத்திரக்காரன் பாயையும், தலையணையையும் எடுத்து வந்து அதன் முன் வைத்தான். பூதம் அவற்றினை இரட்டிப்பாக்கத் தொடங்கியது. சத்திரக்காரன் பாயை விரித்து தலையணை இட்டு ஒவ்வொருவரையும் அதில் பக்குவமாகத் தூக்கிக்கிடத்தினான்.

வசந்தன் தனக்கொரு படுக்கையை எடுத்துக் கொண்டான்.

"சத்திரக்காரா மொத்தமாக எத்தனை பிள்ளைகளைப் பாயில் இட்டாய்? மிகுதி எத்தனை இருக்கிறது?" என்று பூதம் அதட்டியது.

"வசந்தனையும் சேர்த்தால் இருபத்தொன்று மிகுதி 11.." என்றான் சத்திரக்காரன்.

"ஆகமொத்தம் 32. இல்லையா? அப்படியாயின் நான் எத்தனை தடவை இரட்டிப்பாக்கினேன். சரியாகப் பதில் சொல்லாவிட்டால் உன் தலை.." பூதம் சொல்வதற்கு முன் சத்திரக்காரன் பாய்ந்து ஓடி வந்து பூதத்தின் கால்களைப் பற்றிக்கொண்டான்.

"அப்படி ஏதாவது செய்துவிடாதீர்கள்..." என்று கெஞ்சினான்.

"உனக்குப் பதில் தெரியாதா?"

"தெரியும் சில வேளைகளில் பிழையாகிவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. அவ்வளவுதான்.."

"சரி நீ பதில் சொல்ல வேண்டாம். இந்தத் தீவின் மர்மத்தைச் சொல். கல்லாகிப் போனவர்கள் எப்படி மீளமுடியும் என்று வழிகாட்டு. உனக்குத் தெரியும். சரியாகச் சொல்லாவிட்டால் காலை ஆகாரமாக உன்னை நான் விழுங்க நேரிட்டுவிடும்" கோபுரந்தாங்கி பயமுறுத்தியது. வசந்தன் அவதானமாகக் கவனிக்கத் தொடங்கினான்.

சத்திரக்காரன் சொன்னான் "ஐயா அது மகா பயங்கரமானது. அந்த இலக்கினை அடைவது இலேசானதல்ல. மகா புத்திசாலிகளால் தான் அது சாத்தியமாகும்"

"எங்களை எல்லாம் என்னவென்று நினைத்திருக்கிறாய். நான் ஒருவனே போதும். என்னைவிட மகாபுத்திசாலி வேறுயார்? பயப்படாமல் சொல்" என்ன செய்ய வேண்டும்.

வசந்தன் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

"இங்கிருந்து வடக்காக பதின்மூன்று கிலோமீற்றர் தூரம் சென்றால் ஓரிடத்தில் புதிர்ப் பூதம் ஒன்றைச் சந்திக்க நேரிடும். அதனை வென்று அப்பால் இன்னும் பதின்மூன்று கிலோ மீற்றர் சென்றால் யுத்திப்பூதம் ஒன்றினைக் காணலாம். அதனையும் வென்று அதனிடம் கேட்டால் அது வழி சொல்லும். போகின்ற பாதையில் பயங்கர விலங்குகள் இருக்கும். பயங்கர மனிதர்கள் இருப்பார்கள். பாதை கரடுமுரடானது. தொல்லைகள் நிறைந்தது"


"அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நாளை காலை எங்களில் சிலர் இங்கிருந்து புறப்படப் போகிறோம். யார் யார் போவதென வசந்தன் முடிவெடுப்பார். மிகுதியானவர்களை நாங்கள் திரும்பி வரும்வரை நீ கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றது கோபுரந்தாங்கி.

சத்திரக்காரன் பயத்துடன் தலையை அசைத்தான்.

(புதிர்கள் நீளும்)

## ஆட்டுக்குட்டி

ஆட்டுக் குட்டி ஆட்டுக் குட்டி
அங்கும் இங்கும் ஓடுது
துள்ளித் துள்ளி எகிறியே
தாவித் தாவிக் குதிக்குது!
விளையாட்டித் தாயிடம்
பாலை முட்டிக் குடிக்குமே
ஓலைக் குருத்துக் கால்களால்
ஓடியாடி மகிழுமே!





## குட்டீஸ் பரிசுப் போட்டி – 15

★ வழுக்கியாறு இலங்கையில் எந்த மாவட்டத்தில் உள்ளது?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

குட்டீஸ் பரிசுப்போட்டி – 15

புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


முடிவுத்திகதி: 05.11.2016

## குட்டீஸ் பரிசுப் போட்டி – 13 முடிவுகள்

★ பானுராஜா யதுஷா
தரம் - 7C
யா/வடமராட்சி ம.மகளிர் கல்லூரி - கரவெட்டி

★ யோகராசா சுதர்சினி
தரம் - 06
மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்
மட்டுவில் சாவகச்சேரி

ர.பிரதுசா
ஊடகக் கற்கைநெறி



# சொந்த ஊருக்குப் போகமாட்டோம்

## கந்தரோடை பிள்ளையார் முகாம் மக்களின் குரல் இது

போரால் அலைவுற்று அகதி என்ற பெயரோடு அவலப்பட்ட மக்களில் சிலர், போர் முடிவுற்ற பின்னரும் கூட அதே அகதி வாழ்வுக்குள் தான் உழல வேண்டிய சூழல் நீடிக்கிறது. பெரும்பாலான முகாம் மக்கள் சொந்த ஊருக்குப் போக வேண்டும் என்று போராட, கந்தரோடை பிள்ளையார் நலன்புரி நிலைய மக்களில் பெரும்பாலானோர் சொந்த ஊருக்குப் போவதை விடவும், முகாம் இருந்த சூழலிலேயே தொடர்ந்தும் வாழ விரும்புகின்றனர். இந்த விசித்திர ஆசைக்கு என்ன காரணம் என்று அறியப் புறப்பட்டோம்.

1990 களில் ஏற்பட்ட போர் காரணமாக தையிட்டி, கீரிமலை, ஊறணி, வசாவிளான் போன்ற இடங்களில் வசித்த மக்கள் இடம் பெயர்ந்து, கந்தரோடை, பிள்ளையார் நலன்புரி முகாமில் குடியேறினர். ஆரம்ப காலத்தில் 45 குடும்பங்கள் இந்த முகாமில் வசித்தன. அன்றைய கால கட்டத்தில் இங்கு வசிக்கும் மக்களிற்கு தேவையான அடிப்படை வசதிகள் மிகக் குறைவாகவே இருந்தன. அனைத்துக் குடும்பங்களிற்கும் பொதுவாக ஒரு மலசலகூடமே காணப்பட்டது. குளிப்பதற்கான வசதிகள் எதுவும் இல்லாத நிலையில், அம்மக்கள் வீதியோரத்தில் காணப்பட்ட கிணறு ஒன்றினையே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அனைவரும் ஒரே நேரத்தில் அக் கிணற்றைப் பயன்படுத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்பட்டது. எனவே பாடசாலை செல்வோர், வேலைக்குச் செல்வோர், வீட்டில் வசிப்போர் என நேரப் பிரிப்புச் செய்து அதன்படியே அக்கிணற்றைப் பயன்படுத்திவந்தனர். இதனால் அந்த மக்களும, குறித்த வீதியைப் பயன்படுத்துகின்ற பயணிகளும் அசௌகரியமான சூழ்நிலையை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

இங்குள்ள மக்கள் 26 ஆண்டுகள் சென்றும். இன்னமும் மலசலகூடம், குடிநீர் பிரச்சினை என்பவற்றுடனே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்களுக்கென உடுவில் பிரதேச சபையினால் பத்து மலசலகூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனினும் இதிலும் ஐந்து மலசலகூடம் பாவனைக்கு ஏற்றவாறில்லாது பழுதடைந்துள்ளன. எனவே தற்போது இங்குள்ள 41 குடும்பத்தினரும் ஐந்து மலசலகூடம் மட்டுமே பாவிக்க கூடியநிலையில் இருப்பதால் சுகாதாரக் கேட்டையும் இவர்கள் அனுபவிக்க வேண்டி உள்ளது.

குடிநீர் கூட இவர்களுக்கென்று தனிப்பட்ட நீர்க் குழாய்கள் மூலம் கிடைப்பதில்லை. பொது இடங்களிலே நீரைப் பெற்றுக் கொண்ட இவர்களுக்கு அந்த இடங்களிலும் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதால் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். இவ்வாறு இவர்கள் தமது அடிப்படைத் தேவைகளான குடிநீர், மலசலகூடத் தேவைகள் என்பன பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே உள்ளனர்.

தற்போது இங்குள்ளவர்களில் எட்டு குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைத்துள்ளது. 25 குடும்பங்களுக்கு சொந்தமான காணி இல்லாததன் காரணத்தால் வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை. இதனைவிட தையிட்டி, பலாலி, ஊரணி, ஆகிய பிரதேசங்களில் இருந்து வந்து குடியேறிய எட்டுக் குடும்பங்கள் அவர்களது சொந்த இடத்திற்கு செல்ல அனுமதி கிடைக்கவில்லை. அவர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கவுள்ளதாக பிள்ளையார் நலன்புரி முகாமின் தலைவர் சிவஞானம் கூறினார்.

காணி இல்லாதவர்களும், சொந்த ஊரிற்கு செல்ல அனுமதிக்கப்படாத குடும்பங்களும் விரும்பிய இடத்தில் காணியைத் தெரிவு செய்துவிட்டு, யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அறிவித்தால், அவர்கள் குறித்த காணி உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு, ஒரு குடும்பத்திற்கு இரண்டு பரப்பு காணியும், எட்டு இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டத்தையும் தருவதாக யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள் உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

வழக்கமாக சொந்த ஊருக்குப் போகும் ஏக்கத்தோடு இருக்கும் நலன்புரி நிலைய மக்கள் மத்தியில், இந்த நலன்புரி நிலையத்தில் அதற்கு நேர்மாறான பலர் இருக்கிறார்கள்.

"நாங்கள் இங்க வாழ்ந்த அளவுக்கு அங்க (சொந்த ஊரில) வாழேலை. சொந்த ஊரை விட, இங்க தான் கனகாலம் இருந்தம். இதனால் எங்களுக்கு நாங்கள் இருக்கும் இந்தக் காணியையே வாங்கித்தரும்படி உரிய அதிகாரிகளிடம் கேட்டுள்ளோம். இது எங்களுக்குப் பழகிப்போன இடம். நாங்கள் தொழில் செய்யும் இடமும் இந்த ஊருக்கு பக்கத்திலேயே இருக்கு. எங்கட சொந்த இடத்திற்கு போனால் அங்க இருந்து இஞ்ச தொழிலுக்கு வருவது கஷ்டம். எனவே இந்த இடத்தில காணி வாங்கி தொடர்ந்தும் இஞ்ச இருக்கதான் விருப்பம்" என அதே முகாமில் வசிக்கும் லிங்கம் என்பவர் கூறினார்.

"எனக்கு இந்த ஊரில் வசிக்கதான் விருப்பம். எனது குடும்பத்தை நான் கூலித் தொழில் செய்துதான் பார்த்து வருகிறேன். நாங்கள் அதிக காலமாக சீவிச்ச இடம் இது. பழக்கப்பட்ட சூழல். இத்தனை வருடங்களிற்கு பிறகு புதிததாக எமது சொந்த ஊரில் போய் வசிப்பது என்பது எனக்கு கஷ்டமான விடயம். எங்களுக்கு ஆண் துணை இல்லை. அங்கே எங்களுக்குரிய பாது காப்புக் கிடைக்குமோ என்று எனக்கு தெரியாது. இதனால் நான் எனது குடும்பத்தோடு இங்க இருக்கவே விரும்புகின்றேன்" எனக் கூறினார் குடும்பத் தலைவி ஒருவர்.

"எனது அம்மா, அப்பாவிற்கு எங்களது சொந்த ஊரில் போய் இருக்கதான் விருப்பம். ஆனால் எனக்கு அங்குபோக விருப்பமில்லை. நான் பிறந்து வளர்ந்த இடம் இதுதான். அங்கு சென்றால் புதுப்பாடசாலை, புது ஆசிரியர்கள், புது நண்பர்களைச் சந்தித்து அவர்களுக்கு ஏற்ற மாதிரி பழகிக் கொள்ளவேண்டும். எனக்கு இங்குள்ள நண்பர்கள், எனது பழைய பாடசாலை என்பவற்றை விட்டிட்டு போக விருப்பமில்லை. என்னைப் பெற்றோர் கட்டாயப்படுத்திக் கூட்டி கொண்டு போனால், நான் படிப்பை கைவிட்டுவிடுவேன்" என தனது விருப்பத்தைக் கூறினான் இங்குள்ள பள்ளி செல்லும் மாணவன் ஒருவன்.

"எங்களுக்கு நிவாரண உதவி நிப்பாட்டி எட்டுவருடங்கள் ஆச்சு. அரசாங்கத்தால எந்த உதவியும் கிடைக்கிறேலை. நிறுவனங்களும் உதவி செய்யிறேலை. இதுக்கு முக்கிய காரணம் மகிந்தராஜபக்ச காலத்தில் உலகநாடுகளிற்கு முகாம் ஒண்டுமில்லை எண்டு அறிவிச்சதுதான். நிவாரணம் கொடுத்தால் அவர்களுக்கு முகாம் இருப்பது தெரியவரும். அரசாங்கம் தனியாக நிவாரணத்தை கொடுக்க முடியாது. அவர்களிடம் போதிய நிதி இல்லை. இதனால் ஐக்கியநாடுகள் சபையுடன் இணைந்துதான் தாங்களும் ஒரு நிதியை போட்டு நிவாராணம் கொடுக்கமுடியும். இது தொடர்பாக கொழும்பில நடந்த கூட்டத்திற்கு எங்கட முகாம் தலைவர் சென்று கதைத்தவர்.ஆனால் எந்தத்தீர்வும் கிடைக்கேலை" என முகாம்வாசி ஒருவர் கூறினார்.

கங்கேசன் சீமெந்துதொழிற்சாலைக்கு அருகில் 500 வீடுகள் கட்டித்தருவதாகவும், எங்களை அங்கு குடியமருமாறும் இராணுவம் கேட்டுள்ளது. காணி சொந்தமாக தந்தாலும் 500 குடும்பங்கள் ஒரே இடத்தில் இருப்பது என்பது சாத்தியமற்றது. இதனால் குடும்பங்களுக்கிடையில் பிரச்சினைகள்தான் வரும். அங்கு வசிப்பதும் முகாமை விட கேவலமான ஒரு வாழ்க்கையாகத்தான் இருக்கும். இதனால் நாங்கள் அங்கு செல்ல மறுத்து விட்டோம்.

இந்த முகாமில் வசிப்பவர்களில் பெரும்பாலான குடும்பங்கள் தமது பிள்ளைகளது கல்விச் செயற்பாடு, வேலைவாய்ப்பு, பழக்கப்பட்ட சூழல் என்பன காரணமாக இங்கேயே காணியினை சொந்தமாக வாங்கித் தொடர்ந்தும் இங்கேயே வசிக்க விரும்புகின்றனர். ஆனால் இந்தக் காணியின் உரிமையாளர்கள் இதனை எங்களிற்கு தர மறுத்துவிட்டார்கள். இதன் காரணத்தால் காணியை வாங்கித் தருமாறு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனுக்கு கடிதம் அனுப்பி அவர் மூலமாக ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பபட்டுள்ளது. அவர்களின் முடிவிற்காக காத்திருக்கின்றோம்" எனக்கூறினார் இந்த நலன்புரி நிலையத் தலைவர் சி.சிவஞானம்.

அவர்களின் கோரிக்கையிலும் நியாயம் இருக்கவே செய்கிறது. அவர்கள் 25 வருடங்களுக்கு மேலாக இங்கேயே வேர்கொண்டு விட்டார்கள். இனிமேல் சொந்த ஊர் கூட அவர்களுக்கு அந்நியம் தான். எனவே இவர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து அரசு நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம்.





# நாவலும் ஆவலும்

த.அஜந்தகுமார்

அ)

எனக்குப் பள்ளிக்கூடத்திலயும் கொஞ்சம்தான் நாவல்பழம் தாறவங்கள். சிலவேளை கிடைக்கிறேலை. எனக்கு நிறையச் சாப்பிடத்தான் விருப்பம் 'நாவல்' கலரத்தான் கனவு கூட வாறது. அதால எப்ப வீட்டுப் பூசை வருமெண்டு காவல் இருப்பன். அண்டைக்கு அத்தைய வைதான் கடலை, அவல், மோதகம் எல்லாம் செய்து தந்தவை. அம்மா தொட மாட்டவாம். அப்பாவும், நானும், தங்கச்சி யாக்களும் சேர்ந்து படையல் வேலையத் தொடங்கினம். அம்மா வீட்டுக்கு வெளி யில நிண்டு எவிக்கொண்டு நிண்டா. நாவல் பழம், விளாம்பழம் கூடப் படைச் சிருந்தம். உண்மையைச் சொன்னா வாயூறி வாயூறிப் படைச்சம். விளக்குக் கொளுத்தி, கற்பூரத்தையும் கொளுத்தி, சாம்பிராணி புகையைக் காட்டினம். புகை அழகழகாக நெளிஞ்சு மூக்கைத் தொடேக்கதான் அந்தச் செய்தியை அத்தை படலையடியில நிண்டு கொண்டு சத்தமாச் சொன்னா. "இயக்கம் எல்லாரையும் உடனடியா இங்க இருந்து போகட்டாம்" அம்மா கத்திக்கொண்டு உள்ள வந்தா. பத்திர காளியம்மன் பூசையறைக்கை வந்தது மாதிரிக் கிடந்தது. பெட்டிக்க இருந்த இரண்டு மூன்று நகைகளையும், (தாலிக் கொடி அப்பேக்கை அடைவு) எல்லாற்றை உடுப்புகளையும், முக்கியமான சாமான் களையும் இழுத்து மூன்று பெட்டிக்கை அடுக்கினா. சிலதுகளை உரப்பையுக்கை அடுக்கினா. தென்மராட்சியில இருக்கிற மந்துவில் அம்மம்மா வீட்டை போறது தான் திட்டம் என்பது அம்மாவின் சொற்பொழிவில் இருந்து புலனாகியது. அப்பாவையும் துரிதப்படுத்தினா. சைக் கிள்ள பெட்டியளைக் கட்டிப்போட்டு, கடைசித் தங்கச்சியை அப்பா சைக்கிளில முன்னுக்கு ஏத்தினார். "படைச்சது எல்லாத் தையும் ஒரு பையுக்கை எடுத்துக் கொண்டுவாவன்" எண்டு அம்மா பேசினா. நாவல் பழத்தை மட்டும் இரண்டு பொக் கற்றுக்கையும் அடைஞ்சுகொண்டு பையை நீட்டினன். அம்மா ஓடிப்போய் ஆடு, மாடுகளுக்குப் புல்லுகளைக் கொட்டிப் போட்டு ஓடி வந்தா. அவவுக்கு எப்படி யும் இரண்டுநாளுக்க வந்திடுவம் எண்டு நம்பிக்கை. அழுது ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு வெளியில போனா. நாங்கள் ஒரு திகைப்பிலதான் இருந்தம். றோட் டெல்லாம் சனமும், சத்தமும், இருட்டும். அப்பா சைக்கிள உருட்டிக்கொண்டு வர நாங்கள் பின்னால போனம். அம்மான்ரை தலையில உரப்பை, முள்ளிவெளி எண்டு சொல்லிச்சினம். அந்த வெளியும், இருட் டும், சனமும், கதையும் தலையைச் சுத்திற மாதிரி இருந்திச்சு. பத்தையளுக்கு மேலே ஏதோ பூச்சியள் மினுங்கிக்கொண்டு இருந்திச்சு. பாத்துக்கொண்டிருக்க சில நட்சத்திரங்கள் மண்ணை நோக்கி விழுந்து கொண்டு இருந்திச்சு. இதுதான் எரி நட்சத் திரமோ எண்டு நினைச்சுக் கொண்டு பொக்கற்றுக்க கையை விட்டு நாவல் பழத்தை எடுத்துச் சாப்பிடத் தொடங்கி னன். அந்த இருட்டுக்க நாக்கை இழுத் துக் கவலைப் பாக்கேலாத கவலையை யாரிட்டைச் சொல்லிறது. நடந்து கொண்டிருந்தம்.

ஆ)

இன்னும் கொப்பி முடிய நாலு பக்கம் தான் இருக்கு எண்டிறது பெரிய புளுகமாக இருந்தது. கொஞ்சம் பெரிய எழுத்தாக எழுதத் தொடங்கினன். அப்பிடியிருந்தும் இண்டைக்குக் கொப்பி முடியேலை. கவலையாப் போட்டுது. இண்டைக்கு அந்தக் கிழவியைக் காணேக்கை எனக் குக் கவலை வரப்போகுது. இந்த ரீச்சருக் குக் கணக்க எழுதத்தரத் தெரியாது. எண்ணத்தைப் படிப்பிக்கினம். என்னை விட்டா 'அ'னாவையே ஒரு பக்கத்தில எழுதுவன். அப்படி எழுதிறதுதான் நல்லது எண்டு இந்த ரீச்சருக்குத் தெரியாது. கோட்டுக்க எழுதோணும் எண்டு பேசிக்கொண்டும், காதைப் பிடிச்சுக்கொண்டும் நிற்பா. எண்டாலும் நாளைக்குக் கொப்பி முடியும் தானே? என்ற நினைப்பு சுகமாத்தான் இருந்தது. கொப்பி முடிஞ்சிருந்தது. பள்ளிக்கூடம் விட்டோண்ண வெளியில ஓடினன். கிழவியட்ட ஆரோ இரண்டு பெடியள் காசைக் கொடுத்து வாங்கிக்கொண்டு நிண்டினம். கிழவி கொப்பிக்கு எனக்குத் தரும் எண்டு நினைச்சுக்கொண்டே நீட்டினன். "இந்தாடாப்பா" எண்டு ஒரு சுரை நாவல்பழத்தைச் சுற்றித் தந்தா. அதைப் பிரிச்சுச் சாப்பிட்டுக்கொண்டு நடக்கத் தொடங்கினன். "நாளைக்கு எழுதத் தொடங்கிற கொப்பி வேளைக்கு முடியோணும் கனக்க எழுதத் தாற ரீச்சர் எங்களுக்கு வரவேணும்"

இ)

எனக்குள் அது ஒரு பெருங்கனவைப் போல் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்றது. ஒரு சுடரைப்போல என்னுடன் அலைந்து கொண்டே இருக்கிறது. அப்பாவின் கதையை ஒரு நாவலாக்கவேண்டும் என்பதுதான் அது. அப்பா பிறக்கப் போற நேரத்தில அப்பப்பா ஓடிப்போய் வைரவர் கோயில்ல ஒரு சுடரை ஏற்றினவராம் "நல்ல பிள்ளையாப் பிறக்கோணும்" எண்டு. அப்பா செத்த அண்டைக்கு அவற்ற தலைமாட்டில ஒரு சுடரை ஏத்தி நாங்க வைச்சனாங்கள். அந்தச் சுடரில் இருந்து இந்தச் சுடர் வரைக்குமான அப்பான்ரை வாழ்க்கையை அந்த இருளை வெளிச்சத்தை வெளியில கொண்டுவர எத்தனையோ நாளாக நானும் முயல்கிறேன்.

தூண்டிற் புழுவினைப் போல
வெளியே சுடரினைப் போல்
நீண்ட பொழுதாக என்
நெஞ்சம் துடித்ததடி....

என்று பாரதி காதலில் பாடியது என் நாவலுக்கும் பொருந்துவதாய் உள்ளது. ஒரு கொப்பியை இதற்கென்றே எடுத்து வைத்தேன். எழுதத் தொடங்கினேன் தான். ஆனால் அது சில நேரம் கட்டுரை போல மாறிவிடும். சிலநேரம் முயலாகும். சிலநேரம் ஆமையாகும். ஆமை வருவது வீட்டுக்குத்தானே கூடாது, நாவலுக்கு நல்லதுதானே என்று சில நேரம் ஊறட்டும் என்று காவல் இருப்பேன். ஆனால் எழுதியவை திருப்திதராமல் போகக் கிழித்து எறியத் தொடங்கினேன். வாங்கி வைத்த கொப்பியில் இன்னும் நாலுபக்கம் தான் இருக்கிறது. புதுக்கொப்பி வாங்கத் தான் வேணும்.

ஈ)

இரண்டு நாவல்களுமே நினைவைத் தருகின்றன. நாவல் பழம் ஒரு காலத் திற்குரியது. நாவலும் ஒரு காலத்திற் குரியதுதான். பொக்கற்றுக்க வைச்சு நான் நாவல்பழம் சாப்பிட்டதாலேயோ என்னவோ நாவலிலும் பொக்கற் நாவல் இருக்குது பாருங்கோ. எங்கன்ரை பக்கத்து வீட்டில முன்னுக்கு ஒரு நாவல் நிண்டது. அதை ஒரு அளவோடு வெட்டி அந்த நாவல்ல ஜம்புமரத்தை ஒட்டுக்கன் றாக்கி இப்ப நல்லாக் காய்ச்சுக் கொட்டுது. நானும் நாவலை ஒட்டுக்கன்றாக்கி சிறுகதை, கவிதையாவது எழுதுவம் எண்டு பாக்கிறன்.

## தலையுதிர் காலம்

இதயம் வலியெடுக்க
நெற்றிப் பொட்டில்
இரத்தம் சொட்ட
தலையுதிர் காலத்து
கிழிக்கப்பட்ட சவத்துணி
சரணாலயம் சென்றது

உயிர் அறுவடை செய்ய
சூடு போட்டு பீறுண்டு போன
சகுனப் பார்ப்புக்கள்
எறக்கட்டி விட
எந்திர மூக்குடன்
விஸ்வரூபம் எடுத்த
விநோத உணர்வு
தளர்ந்து போய்
நொறுங்கிப் போய்
ஆற்றல் களஞ்சியம்
மரணாலயம் சென்றது

ஆழமாக வேரோடிய
அதி பயங்கர
அதிர்வலைகளுடன்
இன்றும் நான்.

கீர்த்தனா . சி
அம்பன் .



## இன்னுமொரு ஹிரோஷிமா


ஈழத்தின் தலையிலே - சில
முடிகளை விலக்குகிறேன்
ஈரம் காயவில்லை - என்
விழிகளை துடைக்கிறேன்

இலையுதிர் இலைகளாய்
மரித்தன கணங்கள்
இளவேனில் இலைகளாய்
தெறித்தன கன்னங்கள்

இமை வெட்டும் நேரத்தில்
இழந்தவை ஆயிரம்
இனியும் வேண்டாம்
இரை கவ்வும் ஆயுதம்

எதையுமே மறக்கவில்லை
எம்மனம் தெரியுமா ?
ஈழமே வரலாற்றில்
இன்னுமொரு ஹிரோஷிமா

-நீலாவணை இந்திரா -



(07 ஆம் பக்க தொடர்ச்சி...)

# ஆண்மை

பூச்சாண்டி காட்டிய சரஸ்வதி, தொட்ட சொச்சம், விட்ட மிச்சம் ஐந்து பெண்களையும், ஒரு கடுவனையும் அடுக்கடுக்காகப் பெற்றுவிட்டாள். அத்துடன் கணவருக்கு ஆர் விகுதியையும் சேர்த்து சந்திரசேகரத்தாராக மகிமைப்படுத்தி விட்டாள். அவள் தாயில்லாதவள். நல்லதுக்கும், கெட்டதுக்கும் மாமியார் வீடுதான். மூன்றாம் பிள்ளையின் பிரசவ வீட்டில் சாம்பசிவத்தார் கண்களை மூடினார். பேத்தி பிறந்த ஜாதக பலன் என்று அந்த நிகழ்ச்சிக்கு விவரணம் கூறிய ஊர்ச்சனம், நெய்ப்பந்தம் பிடிப்பதற்கு ஒரு பேரன் இல்லையே என்று ஒறுவாயையும் சுட்டிக் காட்டியது.

சாம்பசிவத்தாரின் மனைவி வலுத்த சீவன். ஆறாம் பிள்ளைப் பேறுக்காக பழக்க தோசத்திலேதான் வீட்டுக்கு சரஸ்வதியைக் கூட்டி வந்தார். அவளுடைய தாயாருக்கு இயலாத நிலை. பொடியன் பிறந்தான். அவனைத் தடுக்கிலே கண்டு களித்த நிலையிலே பெத்தாச்சிக் கிழவி மோசம் போனாள். ஆண்டு திவசத்திற்குப் பிறகு இந்த வீட்டை அவர் சரியாகப் பராமரிக்கவில்லை. பொடியனுக்கு இப்பொழுது வயது நாலு. ஊமை என்ற பட்டத்தைச் சுமக்கிறான். டாக்டர்கள் அவன் பெரிய பேச்சாளனாக விளங்குவான் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அவன் பற்றி வளர்ந்து வரும் விசாரமும் ஒரேயடியாக வீட்டோடு வந்து குடியேறுவதற்குக் காரணமாக அமைந்தது.

"மூத்தவன் இந்த கோர்சுதான் யூனிவேஸிடி என்றன்ஸ் எடுத்தவன். கூப்பிட்டிருக்கிறாங்களாம். எடுபடுவன் எண்டு தானெணை சொல்லுறான்" பூரணம் இன்னும் போகவில்லை. எல்லோரும் பேச்சிலே குந்திவிட்டார்கள்.

"என்னை எடுத்தவர்? என்ஜினியாரிங்கோ?" சரஸ்வதி மூத்த பெண் திலகம் கேட்கிறாள். அவள் யாருடனும் சட்டென்று பழக்கம் பிடித்துக் கொள்ளுவாள்.

"இல்லை, புள்ளை டாக்குத்தர் படிப்புக்கும் போக வேணும், எண்டு இஞ்சினை சொல்லித் திரிஞ்சான். பூரணத்தின் குரலிலேய எவ்விதப் பெருமையும் மண்டவில்லை. புதிதாகச் சேர்ந்துள்ள பணத்தின் செருக்கு துளி கூட இல்லை.

சந்திரசேகரத்தார் மறுபக்கம் திரும்பிப் படுப்பதான அபிநயத்துடன் புரளுகின்றார். மனம் பூரணத்தைப் பற்றிய நினைவுகளிலே மொய்த்துச் சுவிக்கின்றது.

கடையப்பக்காரியள் என்று சாம்பசிவத்தார் சிந்திய சுடுசொற்கள் பூரணத்தின் தாயாரை வெகுவாகத் துன்புறுத்தியது. அன்று தொடக்கம் அவள் நாயாக அலைந்து, தன் மகளுக்குக் குடும்ப வாழ்க்கை ஒன்று குதரிச் செய்து விட்டாள். சின்ன வயது தொடக்கம் வல்வெட்டித் துறையாருடைய கடையிலே வேலை செய்த அநாதைப் பையன் சோமசுந்தரத்தைக் கைப்பிடித்த ராசி, அள்ளிக் கொடுத்தது. திருச்சி பீடிக் கொம்பனிக்கு ஏஜன்சி எடுத்து ஆரம்பமானது அவனுடைய தனி வியாபாரம். இன்று இங்கு ஒரு கடை, குருநாகலில் இரண்டு கடைகள், கொழும்பில் பீடி பக்டரி, கிளிநொச்சியில் வெள்ளாண்மைப் பூமி, ஐந்து லொறிகள் என்று செல்வம் பொங்கி வழிகின்றது. புளியுருண்டை வியாபாரமும் உண்டு என்று பேசிக் கொள்கிறார்கள். காகம் குந்தியே மாடு சாகப் போகுது? சென்ற ஆண்டு அவருக்கே ஜே.பி. பட்டமும் கிடைத்திருக்கிறது!

"ஓமெணை, அவர் யாவார விஷயமாத்தான் கொழும்புக்குப் போயிருக்கிறார். என்னதான் அள்ளிக் குவிச்சாலும் வீட்டுச் சோறுக்கும் தண்ணிக்கும் பொசிப்பில்லை. அந்தர்ச்சை சீவியமெணை.."

"பூரணம் உண்மையிலை சீதேவிதான். இல்லாட்டில் என்னைக் கட்டிக் கொண்டுதானே கஷ்டப்பட்டிருப்பாள்? அவளுக்கு நாலும் கடுவன்கள். ஆசைக்குக் கூட ஒரு பெட்டையில்லை. அவளுக்கு எல்லாம் பெண்களாகப் பிறந்திருந்தாலும் கவலையில்லை. தெறிச்சிப் பார்த்து நல்ல மாப்பிள்ளை எடுக்கிறதுக்கு வேண்டிய காசு இருக்கு. எனக்கு எல்லாம் பொடியன்களாகப் பிறந்தாலும் என்ன புண்ணியம்? சீனியரோடை நில், என்னைப் போலக் கிளாக்கராகு என்று தானே சொல்லியிருப்பன்? இந்த வீடும் வளவும்! காடலைந்த முயலாட்டம் இந்த வளையை நாடி வந்திருக்கிறேன். சரஸ்வதி கொண்டு வந்ததுகள் சில ஈட்டிலை கிடக்கு. அதுகளை மீட்டாலும் கோமணத் துண்டளவிலை ஒரு வளவும். பேரளவுக்கு ஒரு வீடும் கட்டிக் குடுக்கத்தான் தேறும்

பத்து வருஷ சேர்விஸோட ஸ்பெஷல் கிரேடிற்குப் போகேக்கிள்ளை எல்லாத்தையும் வெட்டிப் புளக்கலாம் எண்டு தான் நினைச்சன். நான் கிளறிக்கல் சேர்விஸிலை சேர்ந்து கொட்டப்பெட்டிச் சம்பளத்தோடை சமாளித்தது போலேதான் நடக்குது. சரசுவுக்கு என்ன தெரியும்? பிள்ளையளுக்கு என்ன விளங்கப் போகுது? பாவம், அதுகளும் ஏதோ அந்தஸ்தைப் பற்றிப் பெரிசா நினைச்சுக் கொண்டிருக்குதுகள்"

காதலின் மெல்லிய உணர்ச்சிகள் என்ற பழைய நினைவுகளை அசைபோட்ட சந்திரசேகரத்தார் புத்திபூர்வமான லோகாயுத விசாரணையில் இறங்கி மனத்தைப் புண்ணாக்கி அப்படியே தூங்கி விட்டார்.

விழித்த பொழுது, வள்ளிசாக ஒரு மணி நேரமாவது தாம் தூங்கி விட்டதை அவர் உணர்ந்தார். கை கால்களை அலம்பிக் கொண்டு தேநீர் குடிக்க வந்தமர்ந்தார். சரஸ்வதி ராசவெள்ளிக் கிழங்கைக் கொடுத்தாள். "யார் தந்தது?" என்று கேட்காமலேயே சாப்பிடத் தொடங்கினார்.

பூரணத்தின் சுபாவத்தைப் போலவே கிழங்கும் இனிக்கிறது "கேட்டியளேய்யா! இண்டைக்கும் நாளைக்கும் உலை வைக்கக் கூடாதாம். நாளையண்டைக்குத்தான் நல்ல நாளாம். கொழும்பிலை இருந்த உமக்குமெணை உந்தப் பஞ்சாங்களங்களைப் பாக்க நல்லாத் தெரியுது போல, பூரணக்காதான் சொன்னவா. இண்டைக்கும் நாளைக்கும் தானே சமைச்சு அனுப்பப் போறது எண்டும் சொன்னாவு. நான் வேண்டாமெண்டு சொல்லவும் அவ கேக்கிறாவு இல்லை ஓமணை உனக்கும் இஞ்சை துடைச்சுக் கழுவத்தானே ரெண்டு நாளும் சரியாப் போகும் பூரணமக்கா தங்கமான மனுஷி.. பொடியளும் அப்பிடித்தான்"

"நான் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளுறத்துக்குள்ளை நீர் ஊருலகமெல்லாம் அறிஞ்சிட்டீர்", என்று சிரித்தபடி தேநீரைக் குடித்து முடித்தார்.

"நான் ஒருக்கா வேலி அடைக்கிற நாகப்பனைப் பார்த்திட்டுவாறன்" பூரணம் முற்றத்தில் நின்று சிரிக்கிறாள். அவரும் பதிலுக்குச் சிரித்தார்.

மனசார இவள் ஒரு மனுஷியுந்தான், ஒரு வடிவுந்தான் நாகப்பனும் சின்னவனும் வேலியடைக்கிறார்கள். கொல்லை வேலி சின்னன். விடியற்புறம் வந்தவர் கள் அதனை அடைத்து முடித்த பிறகு தான் சாப்பாட்டைப் பார்த்தார்கள்.

வெயில் ஏறத் தொடங்கியது. பூரணத்தின் வளவுப் பக்கத்து வேலி பிரிக்கப்பட்டது. அடைப்பு வேலல் ஆரம்பமாகியது. சந்திரசேகரத்தார் கூட மாட நின்று வேலை செய்கிறார். கட்டுக்கோத்துக் கொடுக்கக் கூட ஓர் ஆண் பிள்ளை இல்லையே.

சோட்டைக்குப் பிறந்த பொடியன் பூரணத்தின் இடுப்பிலே குந்தியிருக்கிறான்.

"நடுவாலை ஒரு பொட்டு வைச்சு அடையுங்கோ. புள்ளை குட்டியள் போய் வரட்டும்" என்று பூரணம் சொல்லுகிறாள்.

அந்தப் பொட்டினை அடைத்து தன் மகனின் வாழ்வைக் காப்பாற்றுவதாக சாம்பசிவத்தார் நினைத்தார்.

பொட்டுகள் உறவுக்கான வாசல்கள். உறவுகளே அன்று பூரணத்தின் அழகிலே அவர் மனம் அலைந்தது. இன்று அவருடைய ஆளுமையிலே ஒரு கனவும் சுகமும் இருப்பதை உணர்கிறார். அந்தச் சுகத்தில் நெஞ்சிலை தைத்துச் சீழ் வைத்து விட்ட சிறாம்பை சந்திரசேகரத்தார் மெதுவாக இழுக்கிறார்.

இருபது வருடங்களுக்குப் பின்னர் பொட்டு ஒன்று விடப்பட்டு வேலி அடைக்கப்படுகின்றது.

நன்றி - ஆண்மை (சிறுகதைத் தொகுதி)



# 'சத்தமாகக் கேட்காதே'

## மாயாவின் டயரி

பௌர்ணமி நிலவின் ஒளி நிலமெங்கும் குளிர்ந்து கொண்டிருக்கின்றது. அலைக்கழிப்புக்களும் அவமானங்களும் என்னைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றன. நிலவிற்கும் பெண்ணிற்கும், பூவிற்கும் பெண்ணிற்கும் காலம் தோறும் ஒரு உவமைத் தொடர்பு இருந்து வருகின்றது. நிலவைக் கூடத் தொட்டு விட முடிந்த மனிதனால், பெண்ணின் அடிமன உணர்ச்சிகளின் ஓரங்குலத்தைத் தன்னும், சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதாகவே தோன்றுகின்றது.

கடந்த நாளொன்றில் பெண் குழந்தைகளுக்கான தினம் என்று ஒன்று கொண்டாடப்பட்டது. அந்த நாளில் என்னிடம் ஓய்வு நேரங்களில் பாடம் பயிலும் மாணவி ஒருத்தி ஒரு அழைப்பிதழை நீட்டினாள். அது அவளுடைய மஞ்சள் நீராட்டு விழாவிற்கான அழைப்பிதழ். இந்தச் சடங்கு "பூப் புனிதத் சடங்கு" என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. அதாவது பூவொன்றைப் புனிதமாக்கும் சடங்கு. பெண்குழந்தையொருத்தி பருவமடையும் நிலையை தீட்டாகக் கருதி அவளை புனிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சடங்கு என்பதே அதன் பொருள். பருவநிலை மாற்றத்தை தீட்டாக எவ்வாறு கருத முடியும்?

அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்தேன். இன்னும் குழந்தைத்தனம் மாறாத முகம். சில தினங்களுக்கு முன்பு, அவள் பருவமடைந்து பள்ளிக்குச் செல்லும் ஆரம்ப தினமொன்றில் நண்பகல் பொழுதில், வெள்ளைச் சீருடையின் பின் புறங்களில், சிவப்பு உதிரம் சிதறியிருக்க, கால்களை மெதுவாக நகர்த்திக் கொண்டே கண்ணீருடன் எங்கள் வீட்டைக் கடந்து செல்வதை நான் கண்டிருந்தேன். அதே சிறுமிதான் எந்த விபரமும் அறியாமல் தனக்கான விழா ஒன்று நிகழப்போவதையிட்ட அலாதி ஆசையுடன் அழைப்பிதழை நீட்டினாள்.

சடங்கு முறைகளை பின்பற்றுவதையோ, வழக்கங்களை அனுசரித்துப் போவதையோ குறை கூறுவது எனது நோக்கமல்ல. ஆனால் அந்தச் சடங்கை விட அவசியமானது அந்தப் பெண்ணிற்கு பருவமடைதலின் உண்மை விளக்கத்தைப் போதிப்பது. அந்தப் பெண்ணிற்கு தன்னுடலிலிருந்து "மாதத்தில் மூன்று தினங்கள் என் உதிரம் வெளியேறுகின்றது" என்பதை அறியாமலேயே வளர்க்கப்படுகின்றாள். அதை அறியாமலேயே வாழ்க்கையின் துக்கங்களை ஏற்றுக் கொள்கின்றாள். தன் உடல் பற்றிய சரியான விளக்கம் இன்மையுடனேயே அவள் உலகத்தில் உயிர்களை உருவாக்கவும் முற்படுகின்றாள். உண்மையில் ஒரு பெண் சிசு, கருவில் இருக்கும்போதே அவளுக்கு இரண்டு சினைப்பைகள் வளரும்.அவளுக்கு 9 தொடக்கம் 13 வயதுகளில் estrogen, progesterone என்ற இரண்டு ஹோர்மோன்கள் சுரக்கத்தொடங்கும். அப்படி முதன் முதலில் சுரப்பதைத்தான் பூப்படைதல் என்று கூறுகின்றோம்.

பருவமடைந்த பின் உதிரப்போக்கு எதனால் ஏற்படுகிறது என்பதையும் உடல் பற்றிய புரிதலையும் விளக்க வேண்டியது அவசியம். அதை விடுத்து சடங்குகளை நிகழ்த்தி அந்தப் பெண் தெரிந்துகொள்ளவேண்டிய விடயங்களை கடைசிவரை அறியாமல் போவதற்கு வீட்டில் உள்ளவர்களே வழிவகுத்துவிடக் கூடாது.

பெண் குழந்தைகள் பாடசாலைக் காலங்களில் படிக்கின்ற காலப் பகுதியிலேயே அவர்கள் பருவமடைகின்றனர். இருப்பினும் பள்ளிகளில் பாடத்திட்டங்களில் உடலியல் சார்ந்த, பாலியல் சார்ந்த விடயங்களை சரியான முறையில் கற்பிப்பது என்பது சங்கடத்திற்குரிய ஒரு விடயமாகக் கருதப்படுவது மிகவும் வருத்தத்திற்குரியது.

அண்மையில் கடையொன்றில், சுகாதார அணையாடை (Sanitary Napkin) வாங்குவதற்காகச் சென்றிருந்தேன். கடையில் சில இளைஞர்கள் நின்றிருந்தனர். நான் அதைக் கேட்டதும் அவர்கள் தங்களுக்குள் சிரித்துக் கொண்டே மேலும் கீழும் என்னை பார்த்தனர். அவர்கள் போனதும் கடைக்கார அக்கா "இதையெல்லாம் சத்தமாகவா கேட்பீர்கள்?" என்று சிரித்துக் கொண்டே ஒரு பழைய பேப்பரில் கவனமாகச் சுத்தி "பாண் என்று கேளுங்கள் புரியும்" என்றபடி தந்தார். உண்மையில் அவர் அவ்வாறு அதை மறைத்துக் கொடுக்குமளவுக்கு அதில் என்ன ரகசியம் இருக்கின்றது என்பதுதான் புரியவில்லை.

இதையெல்லாம் விட பல பெண்களுக்குச் சுகாதார அணையாடை என்று அழைப்பது அவர்கள் 'கோட்டெக்ஸ்' என்று ரகசியமாய் கேட்டு வாங்குவதும் பொருளைத்தான் என்பது கூட தெரிவதில்லை. மதுபானக் கடைகளில் குடிவகைகளைச் சத்தமாகக் கேட்டு வாங்கும் சிகரெட்டை மிகுந்த கதாநாயகத்துவத்தோடு வாங்கும் அதே ஆண்கள் தான் அணையாடையை அவர்கள் முன்னே உரக்கக் கேட்டு வாங்குவதை அநாகரீகமாகக் கருதுகின்றனர்.

தவறான கற்பிதங்கள் பெண் தன் உடல் பற்றிய நிலையை, சரியான விளக்கத்தைக் கடைசிவரை அறிந்து கொள்ளவிடாமல் மாதவிடாய் போன்ற விடயங்களை 'தீட்டு', 'மாதவிலக்கு' என்னும் பொருள்படும்படியாக நினைத்து ஒதுங்கியே இருக்கின்ற நிலை இன்னும் நீடிக்கின்றது. இதைப் பற்றிய பேச்சுக்கள் எழும்போதெல்லாம், பலரும் கூறுவது பெண்கள் இந்த நிலையை எல்லாம் கடந்து விட்டனர் என்று தான். மேலோட்டமாகப் பார்த்தால் நூறில் ஒரு பெண்ணே அந்த நிலையைக் கடந்தவளாகவும், மீதி உள்ளவர்கள் அந்தத் தளைகளுக்குள்ளேயே அமிழ்ந்து கிடப்பவர்களாயுமே உள்ளனர்.

பெண் உடல் பற்றிய சரியான புரிந்துணர்வு அனைவருக்கும் வேண்டும். பெண்ணைப் பூவென்று ஒப்பிட்டு புனிதப்படுத்திய நிலை இனிமேலும் தொடர வேண்டாம். ஏனெனில் இனப்பெருக்கத்துக்கெனச் சிறுத்தலடைந்த தாவர பகுதிதான் பூ. பூத்தலின் மகிமையறியாமலேயே மகரந்தச் சேர்க்கை அடைந்து பின் உதிர்ந்து போகும் பூவென நாமும் மடிந்து போய்விடக் கூடாது.

**பெண் என்னும் ரகசியம்**
**அவள் பொய்களின் புனைவுகளால் திரிவுபடுத்தப்பட்ட ரகசியம்!**

புதுவிதி

(04 ஆம் பக்கதொடர்ச்சி...)

# செல்போன்: சில்மிஷமும் சீரழிவும்



படங்களும் நேரடியாக அவர்களைச் சென்றடைகின்றதென்று எண்ணுவீர்களானால், உங்களைப் போல மடையர்கள் உலகில் வேறுயாரும் இல்லையென்றுதான் நான் சொல்லுவேன். நீங்கள் அனுப்புகின்ற அனைத்தும் கன்ரோல்ரவர் ஒன்றிற்குப் போய்தான் உரியவரை அடைகிறது. அங்கு போனால் தகவல் சேமிப்புப் பகுதியில் கிஸ்றி (History) என்றும் குக்கீஸ் (Cookies) என்றும் பல பிரிவுகள் உண்டு. அங்கே அனைத்தும் பாதுகாப்பாகச் சேமிப்பாகிவிடும். பூனை கண்ணைமூடிக் கொண்டு பால் குடிப்பதைப் போல, உங்கள் போனில் அவற்றை அழித்தாலும், எத்தனை வருடம் கழித்தும் அவற்றை பார்வையிடலாம். அவற்றை பார்வையிட சட்ட ரீதியாகக் நீதிமன்ற அனுமதியை பெற வேண்டும். அவ்வளவுதான்.

நீங்கள் அனுப்பிய செய்திகள், படங்கள், நீங்கள் படித்த பக்கங்கள், பார்த்த பக்கங்கள் என்று எதனையும் உங்கள் போனில் மட்டும்தான் அழிக்கலாம். கம்பனியின் சேவர் என்று சொல்லப்படுகின்ற சேமிப்புப் பகுதியில் அழிக்க முடியாது. தொலைபேசியினூடாக உங்களைத் தொந்தரவு செய்கின்றவரை சட்டத்தின் முன் நிறுத்த இதுபோன்ற வசதிகள் உங்களுக்கு உதவுவதைப் போல, உங்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடர இது உதவுகிறது.

## எங்கும் போன், எதிலும் போன்

முன்னைய காலங்களில் ஆபாசப் புத்தகங்கள் வந்தன. எல்லாராலும் அவற்றை படிக்க முடியாதவாறு சூழல் காணப்பட்டது. தியேட்டரிலே ஆபாசத் திரைப்படங்கள் வரும். "வயது வந்தவர்களுக்கு மட்டும்" என்று போட்டிருப்பார்கள். போனால் மாட்டிக் கொள்ளுவார்கள். வீடியோக் கடைகளில் ஆபாச வீடியோக்கள் கிடைக்கும். அதுவும் மிகவும் நெருக்கமானவர்களுக்கும் நன்றாக அறிந்தவர்களுக்கும் மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் இத்தகைய அசிங்கங்களெல்லாவற்றையும் எந்த நேரத்திலும், எந்த வித தடையுமின்றி, நுனி விரலால் தட்டித் தட்டி, மேலும் கீழும் அசைத்து, சூம் பண்ணி எதை வேண்டுமானாலும் பார்க்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது 'ஸ்மாட் போன்'. இத்தகைய அசிங்கம் நிறைந்ததைத்தான் நாகரீகமாக கையிடுக்குக்குள் கொண்டு செல்கிறார்கள் உங்கள் அன்புச் செல்வங்கள். பொது இடங்கள், வழிபாட்டுத் தலங்கள், வகுப்புகள் என்று எல்லா இடங்களிலும் ஸ்மாட் போனை வைத்து நோண்டிக் கொண்டிருப்பது சர்வ சாதாரண விடயமாகப் போய் விட்டது. 'நேரத்தை வீணாக்கக்கூடாது' என்பதை இளசுகள் ஸ்மாட் போனில்தான் நடை முறைப்படுத்துகிறார்கள்.

இத்தகைய சக்திவாய்ந்த ஸ்மாட்போனில் எதைப் பதிந்து வைத்திருக்கலாம், என்னத்தைப் பதிந்து வைத்திருக்கக் கூடாது என்ற விளக்கத்தைப் பெற்ற பின் அதை உபயோகிக்கத் தொடங்கினீர்கள் என்றால் ஸ்மாட் போன் உங்கள் நண்பனாகக் கூட உங்களை வழிநடத்தும்.

## போனும் பாதுகாப்பான பாவனையும்

உங்கள் சுய விபரங்களை போனில் பதிந்து வைத்திருக்கக் கூடாது. அதற்கு பாதுகாப்பான வேறு வழிகள் உண்டு. வங்கிக் கணக்குகளோடு சம்பந்தப்பட்ட, ஈ பாங்க், ரெலி பாங்க் தொடர்பான பாஸ் வேட் மற்றும் இதர விபரங்களை தொலைபேசியில் பரிமாறிக் கொள்ளக் கூடவே கூடாது.

அந்தரங்க விடயங்கள் என்று கருதுவது எதனையும் பதிவு பண்ணி வைத்திருக்கக் கூடாது. குறிப்பாக நேருக்கு நேராகப்பார்க்க, பார்த்துப்பேசக் கூச்சப்படுகின்ற விடயங்கள் எதனையும் பதியவோ அல்லது அத்தகையவற்றைத் தொலை பேசியினூடாக அனுப்பவோ, பெறவோ கூடாது. இலவசம் என்று நீங்கள் கேட்காமல் தானாகவே வந்து, ஸ்கிறீனில் சொல்லிக் கொண்டிருக்கும் அப்ஸ் (Apps) எதனையும் தரவிறக்கம் செய்யாதீர்கள். அதனூடாக அவர்கள் அனுப்பும் மென்பொருள் ஒன்று உங்கள் ஸ்மாட் போனை தனது கட்டுப்பாட்டுக்கள் கொண்டுவரலாம். அது தரவிறக்கம் செய்யப்பட்ட அந்தக் கணத்திலிருந்து அந்த மென்பொருளை அனுப்பியவன் உங்கள் அத்தனை நடவடிக்கைகளையும் அதனூடாகப் பார்க்கலாம். உங்கள் முகநூல் மற்றும் மின்னஞ்சல் போன்ற உங்களால் மட்டும் இயக்கக் கூடிய, உங்களுக்குச் சொந்தமானவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம்.

தொலைத் தொடர்பில் தரவுத் திருட்டை சாதாரண கொள்ளையர்களால் செய்ய முடியாது. அதனைச் செய்பவர்கள் இந்தத் துறையில், மிகவும் படித்துப் பட்டம் பெற்றவர்களும், அதீத மூளை உள்ளவர்களுமேயெனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இத்தகைய தரவுத் திருட்டால் பல லட்சங்களைச் சம்பாதிப்பவர்களும் உண்டு. சிலர் பல வருடங்களாகக் கஸ்டப்பட்டு உருவாக்குகின்ற படைப்புகளைத் திருடி சிறு சிறு மாற்றங்களை உட்புகுத்திவிட்டுத் தன்னுடைய உருவாக்கம் என்று சொல்பவர்கள் நிறைய உண்டு. அவர்களும் பல லட்ச முதலீடுகளோடு கோட் மற்றும் சூட்டோடு பெறுமதி மிக்க கார்களில் பவனி வருபவர்கள் என்றால் நம்பவா போகிறீர்கள்.

## பரகசியமாகும் அந்தரங்கம்

தன்னை நிர்வாணமாகப் பார்க்க விரும்பிய ஈழத்து நடிகையொருத்தி தனது ஸ்மாட் போன் மூலம் பல கோணங்களில் தன்னைப் படமாக்கிப் பார்த்து இரசித்த பின் அழித்தாரா? அல்லது அப்படியே சேமித்து வைத்தாரா? தெரியவில்லை. பழுது பார்க்கக் கொடுத்த இடத்தினூடாக உலக வலைத் தளங்களிலெல்லாம் பரவி அவர் பார்த்ததைப், பலரும் பார்த்து இரசித்தது அனைவரும் அறிந்த செய்தி. நான் உப கதை சொல்லவில்லை. நடந்த விடயங்களை கொஞ்சம் விரிவாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். உங்கள் போன் சரியான முறையில் (Security setting) பாதுகாப்புச் செய்யப்படவில்லை என்றால் நீங்கள் உங்கள் வீட்டு மூலையில், ஓரிடத்தில் இருட்டுக்குள் இருந்து கொண்டு ஸ்மாட் போனில் பார்ப்பதைத் தரவுத் திருட்டு மூலம், பல ஆயிரக் கணக்கான கண்கள் பார்க்கலாம். அதே போல நீங்கள் கேட்பதையும் பலர் கேட்கலாம்.

ஒரு ஸ்மாட் போனை கண் கண்ட இடங்களில் வாங்காதீர்கள். அதனை வாங்க முன்னர் அது பற்றி சிறிதாகிலும் அறிந்து கொள்ளுங்கள். அல்லது கேட்டு அந்த அறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது தான் அதில் உங்களுக்குத் தேவையற்றவைகளை அழித்துவிட்டு அல்லது இடைநிறுத்தி விட்டுத். தொலைபேசியை உபயோகிக்கலாம். அதற்குரிய அத்தனை பாதுகாப்பு வசதியும் ஸ்மாட் தொலைபேசியில் உண்டு. தரமான இடங்களில் பொருளை வாங்கு வீர்களானால் அவர்களிடம் உரிய கஸ்டமர் சேவிஸ் அதாவது வாடிக்கையாளர் சேவைப்பகுதி உண்டு. அவர்கள் நிச்சயம் உதவுவார்கள். எனவே இத்தகைய தொலைபேசிகளை உங்கள் கட்டுப்பாட்டுக்கள் வைத்து உபயோகித்தால் அது உங்கள் நண்பன். அதன் கட்டுப்பாடுகள் அடுத்தவன் கைகளில் செல்லுமாயின் அதுவே உங்கள் வாழ்க்கையை நாசமாக்கி விட்டுச் செல்லுகின்ற துரோகியாகக் கூட மாறலாம்.

(05 ஆம் பக்க தொடர்ச்சி...)

# கரையத் தொடங்கும்...



இவை எல்லாவற்றையும் விட பிரதமர் ரணில் ஒருபடி மேல் போய் "இலங்கையின் அரசியலமைப்புக்கு எந்த வகையிலும் ஒத்துவராத, அதே நேரம், சமநிலையும், தலையீடும் கொண்ட, தென்னமெரிக்கா நாடான பொலிவியா போன்ற நாடுகளில் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட, நிலைமாறு கால நீதிக்கட்டமைப்பு இலங்கையில் உருவாக்கப்படும்" என்று கூறினார். பிரதமரின் தலைமையில் ஒரு செயலணி நிறுவப்பட்டு, மக்களிடம் கருத்தும் அறியப்பட்டது. இதன் மூலம் உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக் கூறலுக்கான உந்துதல், இழப்பீடு வழங்கும் கட்டமைப்பு, அலுவலக அமைப்பு என்பவற்றை உருவாக்க பாடுபடுகின்றோம் என ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஆயினும் நல்லாட்சி அரசின் உண்மையான முகம் இப்போது ஜனாதிபதியின் உரையின் மூலம் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி உண்மையில் ஜன நாயகம் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்த பாடுபடுவராக இருந்தால், முதலில் அரசியல் அமைப்பில் வழக்குத் தொடுநராக இருக்கின்ற பொலிசார் மற்றும் விசாரணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அளவுக்கதிகமான அதிகாரங்கள் குறைக்கப்படுதல் பற்றி கதைத்திருக்க வேண்டும். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாது என்ன காரணம் என்று தெரியாமலே பல வருடங்களாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வாடும் அரசியல் கைதிகளைப் பற்றித்தான் முதலில் கதைத்திருக்க வேண்டும். இப்படி ஆண்டுக்கணக்காக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுவிப்புக்கு வசதியாக, சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டுப்பாட்டில் உள்ள திணைக்களங்களின் அதிகாரங்களைக் குறைக்க மைத்திரி நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

பல தசாப்தங்களாக என்ன குற்றம் செய்தோம் எனத் தெரியாமலே சிறைப் பறவைகளாக இருக்கும் அரசியல் கைதிகளைப் பற்றிக் கதைக்காமல், 16 மாதங்களாக சிறையில் வாடுவதாக கூறும் படையினரின் நலன் பற்றி மட்டும் நினைத்து நல்லாட்சி நாயகன் மைத்திரி கொதிப்படைந்ததற்கான காரணம் உள்ளூராட்சி தேர்தலில் தென்னிலங்கை வாக்குகளை அள்ளுவதற்கே.

எல்லோரும் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும், சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என மைத்திரி நினைத்திருப்பாராக இருந்தால், சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பனவற்றுக்கு இடையில் தலையீட்டை ஏற்படுத்தும் அரசியல் அமைப்பையே மாற்றி, அனைவருக்கும் சமமாக நீதி கிடைக்க வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதை விடுத்து, வெறும் 16 மாதங்கள் சிறையில் இருக்கும் ஒரு சில இராணுவ அதிகாரிகளுக்காக மட்டும் ஒப்பாரி வைப்பது, அவரின் நல்லாட்சித் திரைக்குள் மறைந்திருக்கும் தெரியாத ஓநாயின் முகத்தையே அப்பட்டமாக்கி உள்ளது.



# மீண்டும் வெட்டுக்கொத்து

அரவான்

## திகிலில் யாழ்ப்பாணம்

மாலை மயங்கும் நேரம், யாழ் நகர் தன் பரபரப்பை மெல்ல மெல்ல இழந்துகொண்டிருந்தது. ஒரு வீட்டின் முன்னால், அலுவலகப் பணியாளர்கள் சிலர் அளவளாவிக்கொண்டு நின்றார்கள். வீதியில் சனப்புழக்கம் மெல்லமெல்லக் குறைந்துகொண்டிருந்தது. திடீரென உறுமல் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. சிரித்துக்கதைத்துக்கொண்டிருந்த அலுவலர்கள், என்னவோ ஏதோ என்று திடுக்கிட்டுத் திரும்பினார்கள். முகப்பு வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி, நாலைந்து மோட்டார் சைக்கிள்கள் பாய்ந்துவந்துகொண்டிருந்தன. ஒவ்வொன்றிலும் தலா இருவர் வீதம் இருந்தனர். பின்னால் இருந்த ஒவ்வொருவரும் புராணக்கதைகளில் வருவதைப்போல கைகளில் பளபளக்கும் வாள்களை ஏந்தியிருந்தார்கள். போர்க்களத்துக்குப் போவதைப்போல முகத்தில் ஆவேசம் கொப்புளிக்க, வாய்நிறையத் தூஷண வார்த்தைகளை வீதியெங்கும் உரத்த தொனியில் பரவவிட்டார்கள். வெள்ளைக் காகிதத்தால் இலக்கத்தகடுகள் மறைக்கப்பட்டிருந்தன. தங்கள் வீரத்தைக் காட்டுவதற்காகக் கையில் இருந்த வாள்களை இருபுறமும் காற்றில் விசுக்கிக்கொண்டே போனார்கள். இந்தக் கும்பலைக் கண்டவுடன் அனைவரும் வீதியின் மருங்காக ஒதுங்கிக்கொண்டதால் தப்பித்துக்கொண்டார்கள். இல்லாவிட்டால் கண்டமேனிக்கு விசுக்கப்பட்ட வாள்களில் அவர்கள் சிக்கியிருப்பார்கள்.

யாழ் நகரின் இலுப்பையடிச்சந்தியில் இருந்து, நாவலர் வீதியூடாகக் காங்கேசன்துறை வீதிக்குச் சென்று, அங்கிருந்து கொக்குவில் பக்கமாக இந்தக் கும்பல் விசுக்கியவாள்களோடு சென்று மறைந்தது. கிட்டத்தட்ட ஏழு எட்டுக் கிலோமீற்றர்கள் எந்தவித பயமுமற்றுப் பகிரங்கமாக இந்தக் கொலைகாரக் கும்பல் தன் அராஜகப்பவனியைக் கடந்த வாரம் நிகழ்த்தியிருந்தது. எவரும் எதுவும் செய்யமுடியவில்லை. ஏங்கிப்போய் நிற்கத்தான் முடிந்தது. வாள்களோடு சென்றவர்களை பொலிஸார் காணவுமில்லை. செல்லும் வழியில் எங்கும் பொலிஸாரும் இல்லை. வாள்களோடு செல்பவர்களைப் பிடிப்பதைவிட ஆவணங்கள் இல்லாமல் பயணிக்கும் வாகனச் சாரதிகளிடம் பணம் பிடுங்குவது தானே பொலிஸாருக்கு முக்கியமான வேலை. இப்படித்தான் இருக்கிறது இன்றைய யாழ்ப்பாணத்தின் நாட்கள்.

★ ★ ★

மீண்டும் திகிலுக்குள் மூழ்கத் தொடங்கியுள்ளது குடாநாடு. போருக்குப் பின்னர் சமூகக்கட்டமைப்பில் நிகழ்ந்த சடுதியான மாற்றம் காரணமாக, எங்கள் வாழ்வியல் கோலம் வேறாகிப் போனது. விடுதலை வேட்கையும், வாழ்வின் இருப்புப் பற்றிய ஏக்கமும் கொண்ட நாட்கள் தொலைந்துபோக, களியாட்டம், வன்முறை, சமூகச் சீரழிவு நவீன யுகத்தொடர்பாடல் என்ற வட்டத்துக்குள் நுழையத்தொடங்கினோம். விளைவு, மனித உயிர்களை மதிக்காத சமூகமொன்று முளைவிட்டது.

கொலையும், கொள்ளைகளும், போதைப் பொருள் பாவனையும், வன்புணர்வுகளும்*சர்வசாதாரணமான விடயங்களாகப் போயின. தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, தறிகெட்டு பாழ்பட்ட இனமாக மாறிக் கொண்டிருந்தோம். மின்னல்குழு, ஆவாக்குழு என்று இளைஞர்கள் தங்களுக்குத் தாங்களே பெயரிட்டு கத்திகொண்டு அலைந்தார்கள். தென்னிந்தியச் சினிமாப்படங்களில் வருவதைப் போன்று மிக மோசமான சீரழிவை நாம் சந்தித்தோம். இந்த இனம்தான் 30 வருடங்களுக்கு மேலாக வல்லாதிக்க அரசுகளை ஓர்மத்தோடு எதிர்த்து நின்றது என்பதை எவரும் நம்ப முடியாத அளவுக்கு நாசமாகிக் கொண்டிருந்தோம்.

### திசை மாறிப்போனோம்

இப்படித் தமிழினம் திசைகெட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு அரச இயந்திரம் எந்தவித எத்தனிப்புக்களையும் செய்யவில்லை. மாறாக ஒட்டுக் குழுக்கள் மூலமும், இராணுவப் புலனாய்வாளர்கள் மூலமும் இத்தகைய வன்முறைச் சிந்தனை கொண்ட இளைஞர்களை வளர்த்தெடுப்பதில் அரசு அக்கறை காட்டியது. நீலப்பட விநியோகம், போதைப்பொருள் விநியோகம் என இளைஞர்களைத் தூண்டில் போட்டுத் திட்டமிட்டுத் திசை திருப்பியது. சில சந்தர்ப்பங்களில் ஆயுதங்களைக் கூடக் கொடுத்து வன்முறைக்குத் தூபமிட்டது அரசு. குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டிய பொலிஸார், அவர்களுக்கு மதுவும் போதைப் பொருளும் வழங்கி தட்டிக் கொடுத்தனர் என்று மக்கள் குற்றஞ் சாட்டும் அளவுக்கு நிலமை கைமீறிப் போனது.

### வித்தியாவுக்குப் பின்னான எழுச்சி

மகிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனநாயகத்தின் பேரால் மைத்திரி நல்லாட்சிக்குத் தலைமை தாங்கிய பிறகு இந்த நிலையில் மாறுதல் ஏற்படத் தொடங்கியது. அதிலும் குறிப்பாக புங்குடுதீவில் வித்தியா என்ற பாடசாலை மாணவி மிகக்கோரமான முறையில் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்ட பின்னர், வன்முறைக் கலாசாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற உந்தல் மக்களிடையே இயல்பாக எழுந்தது. இந்த எழுச்சி, போராட்ட வடிவம் பெற்று ஹர்த்தால்களும் டயர் எரிப்புகளும் கடையடைப்புகளும் என குடா நாடே ஸ்தம்பித்துப் போகும் அளவுக்கு வீரியம் பெற்றது. அதற்குப் பிறகு வடக்கில் தலையெடுத்துள்ள வன்முறைக் கலாசாரத்துக்கு முடிவுகட்ட நல்லாட்சி அரசு சில நடவடிக்கைகளை எடுக்கவே செய்தது. வடமாகாண பொலிஸ் கட்டமைப்பில் பெரும் மாற்றம் கொண்டு வரப்பட்டது. கரையோரப் பகுதி எங்கும் கண்காணிப்பு இறுக்கப்பட்டது. கிலோக் கணக்கில் கஞ்சாவும், ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன.

### நீதிபதி இளஞ்செழியன் தந்த நம்பிக்கை

இவற்றையெல்லாம் விட மக்களுக்கு நம்பிக்கை அளித்த இன்னொரு விடயம் நீதிபதி இளஞ்செழியன் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட்டமைதான். எந்த விடயத்தையும் இழுத்தடிக்காமல் உடனுக்குடன் தீர்ப்பை வழங்கி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இளஞ்செழியன் பெயர் பெற்றிருந்தார். அதிகாரத்துக்கோ அல்லது வேறெந்த அழுத்தங்களுக்கோ அடிபணியாமல், எது நீதியோ? அதை நிலைநாட்ட வேண்டும் என்பதில் பிடிவாதம் கொண்டவர் இளஞ்செழியன். அவர் வந்தபின்னர் வடக்கின் வன்முறைக்கலாசாரம் ஆட்டம் காணவே செய்தது. அடுத்தடுத்து அதிரடியான உத்தரவுகளைப் பிறப்பித்து வாளோடும், மதுப்போத்தல்களோடும் அலைந்துகொண்டிருந்தவர்களை எல்லாம் சிறைகளுக்குள் முடங்கச் செய்தார். முன்னரெல்லாம் எந்தக் குற்றம் செய்துவிட்டு சிறைக்குச் சென்றாலும் அடுத்தவாரமே பிணையில் வெளியே வரலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் இளஞ்செழியன் வந்தபின்னர், உள்ளே போனால் வெளியே வருவதென்பது மலையைக்கெல்லி எலியைப் பிடிக்கின்ற வேலையாகப் போனது.

சமூக விரோதிகளின் நடமாட்டங்கள் வெகுவாகக் குறைந்து போயின. முன்னரெல்லாம் பகிரங்கமாகத் தடிகள், பொல்லுகள், வாள்கள் என்பவற்றோடு நடமாடிய கும்பல்கள் அவற்றை எப்படி மறைத்துவைக்கலாம் என்பதில்தான் குறியாக இருந்தன. அந்தளவுக்கு நீதிபதி இளஞ்செழியனின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. தனியே சமூக விரோதிகளை மாத்திரமல்லாது அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்த சில பொலிஸ் அதிகாரிகளையும் நீதிமன்றத்துக்கு அழைத்து இளஞ்செழியன் கண்டிக்கத் தவறவில்லை. இதனால் சமூக விரோதிகளுக்கு ஒத்துழைப்பதை விரும்பியோ விரும்பாமலோ பொலிஸார் கைவிட வேண்டியிருந்தது.

### மீண்டும் தொடங்கிய வெட்டுக் கொத்துகள்

ஆனால் இப்போது பலருக்கும் குளிர்விட்டுப் போய்விட்டது. மீண்டும் மெல்லமெல்ல பலருக்கு வால்(ள்)கள் முளைக்கத் தொடங்கி விட்டன. கொஞ்சக்காலம் ஓய்ந்திருந்த வெட்டுக் கொத்துக் கொலைகள் மீண்டும் பழைய வீச்சோடு நடக்கத் தொடங்கி விட்டன. மானிப்பாய், கைதடி, யாழ்நகர் போன்ற பிரதேசங்களில் வாள்வெட்டுக் கொலைகள் அரங்கேறியுள்ளன. தனியே ஒரு நீதிபதியோ அல்லது பொலிஸ் கட்டமைப்போ மாத்திரம் இத்தகைய சமூக விரோதிகளை அடக்குவதற்குப் போதாது.

### எப்படி மாற்றுவது?

இன்று கைகளில் வாள்களோடுதிரியும் இளைஞர்கள் யாவருமே ஏதோ ஒரு வீட்டின் குழந்தைகளாக இருந்தவர்கள்தான். தங்கள் பிள்ளைகள் மீதான அன்பையும், அக்கறையையும், கட்டுப்பாடுகளையும் கைவிட்ட பெற்றோரே இப்படி சமூக விரோதிகளின் உற்பத்திக்கு உறுதுணையாகி விடுகிறார்கள். பெற்றோரை மதிக்காத சமூகமொன்று நம்மையறியாமலே உருவாகிவிட்டது. முதலில் பெற்றோரை மதிக்காதவர்கள் பின்னர் தாம் சார்ந்த சமூகத்தையும் இனத்தையும் மதிக்கத் தவறத் தொடங்குகின்றனர். வீட்டில் கிடைக்காத அன்பு அக்கறை என்பவற்றின் மீதான ஏக்கத்தை வன்முறை மூலம் சமப்படுத்த முனைகின்றனர். தங்கள் பெற்றோரைப் பழிவாங்குவதாக நினைத்து அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாக எண்ணிக் கொண்டு சமூக விரோத காரியங்களில் ஈடுபடுகின்றனர். போதைப்பொருள் பாவனைகளில் இறங்குகின்றனர்.

இவற்றுக்குப் பின்னணி வளமாக புலம்பெயர் உறவுகள் அனுப்பும் பணமும் இருக்கின்றது. வெளிநாட்டில் இருக்கும் நண்பர்கள் அல்லது உறவினர்கள் ஊரில் இருப்பவர்களுக்கு அள்ளிக்கொடுக்கும் காசுகள் இப்படி கைபேசிகளுக்கும், போதைப்பொருள்களுக்கும், மோட்டார் சைக்கிள்களுக்கும் எனக் கரியாகிப் போகின்றன. ஆரம்பத்தில் பொழுது போக்கிற்காக சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் காலப்போக்கில் அந்தப் போதைக்கும் மூழ்கி, மீளமுடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலையை வளரவிட்டோமானால் கல்தோன்றி முன்தோன்றாக்காலத்து முன்தோன்றிய மூத்தகுடி என்ற பெருமையெல்லாம் தொலைந்தே போய்விடும். ஒவ்வொரு வீட்டில் இருந்தும் இத்தகைய நிலையைத் தடுப்பதற்கான முனைப்புக்கள் நிகழவேண்டும். தொலைக்காட்சிக்குள்ளும் தொலைபேசிக்குள்ளும் வாழ்வைக் கரையக் கொடுத்துவிட்டு தன்னுடைய பிள்ளைகள் எப்படிப் போகிறார்கள் என்பதை கவனிக்காமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

வரப்புயர நீர் உயரும் என்று ஔவை சொன்னது போல ஒவ்வொரு வீட்டுப் பிள்ளையும் நல்ல பிரஜையாக உருவானால், நல்ல சமூகம் உருவாகும். வாள்கள் தொலைந்து மீண்டும் மனிதராகலாம்.

# புதினப் பூங்கா

ராஜேஷ் மணாளன்



## பச்சிளம் குழந்தைக்கு ஏனிந்தத் தண்டனை?

வயதாளிகளாக வந்ததும் நமக்கு குழந்தைத்தனமும் வந்துவிடுவதாக அறிந்திருக்கின்றோம். ஆனால் இங்கேயோ பிறந்த அடுத்த கணமே குழந்தை வயதாளியாக மாறியிருக்கின்றது.

ஒரு பொல்லாத வியாதி (Progeria) இந்தக் குழந்தையைப் பீடித்ததால் வந்த வினைதான் இது.

பங்களாதேஷ் நாட்டின் 'மகுறா' என்ற இடத்தில் பிறந்த இக் குழந்தை முகத்தில் சுருக்கங்களுடனும்,குழி விழுந்த கண்களுடனும், சுருங்கிய உடலுடனும், முதுகில் கத்தை கத்தையாக உரோமங்களுடனும், 80 வயது முதியவரின் தோற்றத்தில் இருக்கின்றதாம். என்ன கொடுமை பார்த்தீர்களா?

இப்படியொரு தாக்கம் பிறக்கும் 4 மில்லியன் குழந்தைகளில் ஒரு குழந்தைக்குத் தான் ஏற்படுமாம். குழந்தையைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ந்து போயிருக்கின்றார்கள். பிறந்த குழந்தை அசுர வேகத்தில் வளர்ச்சி கண்டிருப்பதால்தான், இப்படி ஒரு வயதாளியாக மாறியிருக்கின்றது. ஆனால் பெற்றோர்களின் மனநிலை வேறாக இருக்கின்றது.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பது போல "இப்படி ஒரு புதுமையான குழந்தையைக் கடவுள் எமக்குக் கொடுத்ததற்கு நன்றி கூறுகின்றோம்" என்று அகமகிழ்வோடு இவர்கள் கூறுகின்றார்கள். "கடவுள் தந்தபடியே நாம் குழந்தையை ஏற்றுக் கொள்கின்றோம்.ஏற்கனவே எங்களுக்கு ஒரு பெண் பிள்ளை இருக்கிறாள். இப்பொழுது ஆண்குழந்தை. மகிழ வேண்டிய விடயந்தானே" என்கிறார்கள் இவர்கள்.

பொதுவாக இப்படிப் பிறக்கும் குழந்தைகள் 13 வயதுக்கு மேல் வாழ்வதில்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.

பாவம் இந்தப் பெற்றோர்கள். இதை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகின்றார்கள்?



## பணம் என்ன பாவம் செய்தது?

அப்பிள் கைபேசிகள் பலரையும் மயக்குபவை. விற்பனையாகும் முதல் நாளன்று மணிக்கணக்காகக் காத்துநின்று பாவனையாளர்களை வாங்க வைப்பவை.

அந்த ஐபோன்கள் வரிசையில் புதிதாக அறிமுகமாகியதுதான் ஐபோன் 7. நமது ஊர் விலையில் ஒன்று வாங்குவதாயின் சுளையாக ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை வேண்டும்.

புதிய ஐபோன் சீனாவில் விற்பனைக்கு வந்தபோது அதே காத்திருப்புகள்.ஹொங் ஹொங் வழியாக கள்ளக் கடத்தல் மூலம் கொண்டு வரவும் பலர் முயன்றுள்ளார்கள்.

இது இப்படியிருக்க ஒரு சீனக் கோடீஸ்வரச் சீமானின் மகன் எட்டு புதிய ஐபோன்களை வாங்கி தன் செல்ல நாய்க்கு முன்பு அபிஷேகம் செய்துள்ளார். பின்பு இதைப் படமெடுத்து சமூகவலைத் தளமொன்றிலும் பதிவுசெய்திருக்கின்றார்.

இதை எப்படி விபரிப்பது? பணக்கொழுப்பு என்ற பதத்தை உபயோகிக்கலாமோ?


இந்த அல்ஷேஸன் இன நாயின் பெயர் கொக்கோ. சீனாவின் கொழுத்த பணக்காரர் (இவரது சொத்து மதிப்பு 30 பில்லியன் டொலர்களாம்) ஒருவரின் மகன்தான் இப்படிச் செய்திருக்கின்றார்.

சீனாவில் ஐபோன் 7 பிளஸ் 7988 யுவான் (1047 டொலர்கள்) பெறுமதியானது.

வாங் என்ற பெயர் கொண்ட இந்த இளைஞர் முன்பொரு தடவை நாயை இரண்டு அப்பிள் கடிகாரங்களை அணிய வைத்து மேலும் 37000 டொலர் பெறுமதியான ஆடம்பரப் பொருட்களையும் நாய்க்கு அருகே வைத்து ஒரு படமெடுத்து அதை சமூகவலைப் பக்கமொன்றில் பதிவேற்றி பலரின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டார்.

இவர் அப்பிள் நிறுவனத்தின் உற்பத்திகளை இழிவுபடுத்த முயல்கின்றாரா அல்லது மிதமிஞ்சிக் கிடக்கும் பணத்தை எப்படி ஊதாரித்தனமாக செலவிடுவது என்று பாடஞ் சொல்லிக் கொடுக்கின்றாரா?

## பரிசளிக்கும் நேரம் இது




நோபல் பரிசு பற்றித் தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். வருடாவருடம் கொடுக்கப்படும் இந்த உலகப் புகழ்பெற்ற உன்னதமான பரிசுக்குரியவர்களை இந்த மாதத்தில்தான் தெரிவு செய்கின்றார்கள்.

இரசாயனம், இலக்கியம், பௌதீகம், மருத்துவம் அல்லது உளவியல், சமாதானம்- இந்த- ஐந்து துறைகளுக்குந்தான் நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2016 இன் சமாதானத்திற்கான நோபல் பரிசு கொலம்பிய ஜனாதிபதி மனுவல் சன்ரோஸ் என்பவருக்கு கொடுக்கப்பட்டிருப்பதுமுழு உலகையும் வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.

50 வருட உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்த ஜனாதிபதியை விட இந்தப் பரிசுக்கு பொருத்தமான வேறொருவர் இருக்க முடியாது என்கிறது பரிசுத் தேர்வுக்குழு.

சுவீடன் நாட்டு இரசாயனவியலாளரும், பொறியியலாளரும், டைனமைட் உட்பட 355 கண்டுபிடிப்புகளுக்கும் சொந்தக்காரருமான அல்பிரெட் நோபலின் பெருஞ் சொத்தே வருடா வருடம் பரிசுகளாக பங்கிடப்படுகின்றது. தன் கண்டுபிடிப்பான டைனமைட் அழிவுப் பொருளாகப் பலரை அதிருப்திப்படுத்தியதால் மனம் நொந்து, தனது கடைசி உயிலில் தன் சொத்தை, சமுதாயத்திற்கு பெரும் சேவை செய்பவர்களுக்கு வருடாவருடம் பிரித்துக் கொடுக்கும்படி எழுதியிருந்தார்.

தன் முழுச் சொத்தின் ( 2008 இல் 186 மில்லியன் டாலர்) 94 வீதமான பகுதியை பரிசுகளுக்காகவே ஒதுக்கிய உன்னத புருஷர் இவர். 1901இலிருந்து 2015 வரையிலான காலகட்டத்தில் 900 தனிப்பட்டவர்களுக்கும், அமைப்புகளுக்கும் 573 தடவைகள் பரிசளிக்கப்பட்டுள்ளன. 1980 வரையில் கொடுக்கப்பட்ட பதக்கங்கள் 23 கரட் தங்கத்திலானவை. அதன் பின்பு 18 கரட்டில் பதக்கம் செய்து அதற்கு மேல் 24 கரட் பூச்சோடு பதக்கத்தை பரிசளிக்கிறார்கள்.

## குழந்தைகள் இல்லாத விமான வலயம்




கொஞ்சம் ஆறுதலாகக் கண்ணை மூடுவோம் என்றால் குழந்தையின் வீரிட்ட கத்தல். இந்த அனுபவம் உங்களில் எத்தனை பேருக்கு வந்துள்ளது? பலருக்கு விமானப் பயணங்களில் இதுகாலவரை இது ஒரு பிரச்சினையாகவே இருந்துள்ளது.

இதைத் தீர்க்க வந்துள்ளது புதிய நடைமுறை. இந்தியாவின் பட்ஜெட் விமான நிறுவனமொன்று பிள்ளைகள் அற்ற பகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது. 12 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு அனுமதியில்லாத அமைதியான பிராந்தியம் இது.

ஒரு சாராருக்கு இது மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் இன்னொரு சாராருக்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. பக்கத்தில் ஒரு குழந்தை வீரிட்டலற, ஆசனத்தின்பின்னாலிருந்து ஒரு பிள்ளை காலால் உதைக்க இம்சையோடு உட்கார்ந்திருந்த பிரம்மச்சாரிகளுக்கு இது பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கும் மாற்றமாக இருக்கும் என்பது நிச்சயம்.

இந்த ஏற்பாட்டை மேலும் பல விமான நிறுவனங்கள் தொடர இருக்கின்றன.

## கூடு மாறாத குஞ்சுகள்

பொதுவாகவே ஐரோப்பிய இளைஞர்கள் யுவதிகள் 18 வயதைத் தாண்டியதும் படிப்பை முடித்துக் கொண்டு, ஒரு வேலையையும் தேடிக் கொண்டு, தனி வாழ்க்கைக்குத் தயாராகி விடுவார்கள். ஒரு சினேகிதனோ, சினேகிதியோ அதற்குள் தேடி விடுவார்கள். (அவர்கள் காலத்திற்குக் காலம் மாற்றப்படுவார்கள் என்பது தனிக் கதை)ஆனால் சமீபத்தில் எடுத்த ஆய்வொன்று நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் பிறந்த பெருந்தொகையான இளைஞர்களும் யுவதிகளும் வீடே கதி என்று வாழ்ந்து வருகின்றார்களாம். இதில் முன்னணியில் நிற்பது இத்தாலி.

15 க்கும், 29 க்கும் இடைப்பட்ட வயதுடைய இளவட்டங்கள் இங்கே வீட்டோடுதான். வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவு அதிகரித்து, சம்பளத் தொகைகள் கீழிறங்கி, பிட்ஸா விலை மும்மடங்காக எகிறிக்குதித்து, வருமானத்தை விடக் கடன் சுமை அதிகமாக அழுத்தும் மோசமான பொருளாதார நிலையில் இருக்கின்றது இத்தாலி. 26.9 வீதமானவர்களுக்கு இங்கே வேலை வாய்ப்புகள் இல்லையாம்.

சரி வேறு எந்த நாடுகளில் இந்த நிலைமை?



போர்த்துக்கல், ஸ்பெயின், கிரேக்க நாடு, சொல்வேனியா, ஹங்கேரி, செக் குடியரசு - இத்தனை நாடுகளிலும் 70 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் இன்னமும் தாய்வீட்டில்தானாம்.

கனடாவில்தான் மிகக் குறைந்த அளவில் அதாவது 30.9 வீதமானவர்கள் மாத்திரமே பெற்றோருடன் வாழ்கின்றார்கள்.

கனடாவை விட டென்மார்க், சுவீடன், நோர்வே, பின்லாந்து ஆகிய நாடுகளிலும் 40 வீதத்திற்கு குறைவானவர்களே இன்னும் வீட்டுப் பிள்ளைகளாக வாழ்ந்து வருகின்றார்கள்.

நலிந்து விட்ட பொருளாதாரம் நாட்டையே மாற்றிவிட்டதே.



## முதலாம் சிவாலயம்

தமிழ் மன்னர்களான சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றி பொலநறுவையை தலைநகராமாக்கி "ஜனநாதமங் கலம்" என்று பெயரிட்டு, இலங்கையில் நல்லாட்சி செலுத்திய காலத்தில் பொலநறுவையில் கட்டப்பட்ட கோயிலாக முதலாம் சிவாலயம் காணப்படுகின்றது. இதனைப்போல, ஏனைய சிவாலயங்களும் இனம் காணப்பட்டுள்ளன, சோழர்கால கட்டடக்கலை நுட்பங்களையும், பாணியையும் கொண்டு கருங்கல்லினால் கட்டப்பட்ட சிவாலயம் இதுவாகும். காலத்தினால் அழிந்தாலும், சிவலிங்கம் உள்ளிட்ட கட்டட அமைப்புகளுடன், ஆயிரம் வருடங்களாக நிலைத்து நிற்கின்றது. வரலாற்றையும் தமிழர் கலை மரபையும் பறைசாற்றும் முக்கிய ஆதாரமாகவும் பொலநறுவையில் தமிழ் இந்துக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரமாகவும் இதனைக் கொள்ளலாம்.

இன்று பேரினவாத அரச நிர்வாகம், தொல்லியல் சின்னமான இதைப் போதிய பராமரிப்பு இன்றி அசமந்தமாய் விட்டுள்ளது. ஒட்டுமொத்த ஈழத்தின் வரலாற்றை வாசிக்கும் போது தவிர்க்க முடியாத இடத்தில் இச்சிவாலயம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## ஊர்காவற்றுறை கோட்டை



போர்த்துக்கேயரால், தமது பாதுகாப்பின் நிமித்தம், இயற்கை துறைமுகமாக காணப்பட்ட ஊர்காவற்றுறை கரையிலிருந்து, 2km தூரத்திற்கு கடலின் உட்பரப்பில் காணப்பட்ட மண்திட்டை உயர்த்திச் சிறந்த கடற் கோட்டையாக இவ் ஊர்காவற்துறை கோட்டை அமைக்கப்பட்டது.

பின்னர் போர்த்துக்கேயருக்கு அடுத்து வந்த ஒல்லாந்தரால் இக்கோட்டை சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டது. சிறந்த பீரங்கி தளங்களுடன், நடுவில் ஓட்டினால் வேயப்பட்ட கூரை அமைப்புடன் இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. இது பன்றியின் கால் வடிவில் அமைக்கப்பட்டுள்ளமையினால் "ஹீமன்கில்" என்ற பெயரில் ஒல்லாந்தரால் அழைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் எவ்வித மாற்றமும் செய்யாத போதும் நிர்வாக மையமாக இதனை வைத்திருந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர், இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து சிறைச்சாலையாக காணப்பட்டது. இன்று சுற்றுலாத் தலமாகத் மாற்றப்பட்டுள்ளது.



## கும்மி

யாழ்ப்பாணத்து அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கூறுகளையும், வரலாற்றுச் செய்திகளையும், கும்மிப் பாடல்கள் தருகின்றன. இந்த வகையிலே இன்று எமக்கு கிடைத்துள்ள "பண்ணைப் பாலக்கும்மி", "உத்தியோகர் லக்ஷணக் கும்மி" ஆகிய இரண்டும் அரசியல் விடயங்களைக் கூறுகின்றன. உத்தியோகர் லக்ஷணக் கும்மி போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால ஆட்சி முறைகளைத் தெளிவாக சுட்டுவதோடு, பிரபல நீதிமன்ற வழக்குகளையும், அக்கால பெரிய மனுஷர்களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. உதாரணமாக

**பட்டமும் பெற்று, ஒரு பாரியையுங் கொண்டு,**
**பரிசுடன் முத்துக் கிட்டினரும் வந்தார்.**
**இட்டமாய் யாவரும் போய் மரியாதையோ(டு)**
**இன்பு கொண்டாடினர் ஞானப் பெண்ணே**

இத்தகைய மரபார்ந்த ஆற்றுகைகளே, எமது பண்பாட்டின் உண்மையான வேர்களாகவும், ஆதாரங்களாகவும் இருக்கின்றன.

## புழுக்கொடியல்

புழுக்கொடியல் என்பது, பனங்கிழங்கில் இருந்து செய்யப்படும் ஒரு உணவுப் பண்டம். பனங்கிழங்கு குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே கிடைக்கக் கூடியது. அதனைப் பச்சையாக நீண்டகாலம் வைத்திருக்க முடியாது. இதனை வெயிலில் காயவைப்பதன் மூலம் பதப்படுத்தி நீண்டகாலம் பயன்படுத்த முடியும். பனங்கிழங்கைப் பச்சையாகவோ அல்லது அவித்தோ வெயிலில் உலர்த்துவர். பச்சையாக உலர்த்திப் பெறப்படும் பொருள் ஒடியல். அவித்தபின் உலர்த்திப் பெறப்படுவதே புழுக்கொடியல் ஆகும்.

பனங்கிழங்குகளை மூழ் மற்றும் பின் பகுதிகளை வெட்டிவிட்டு அடிப்பக்கம் கீழேயும், நுனிப்பக்கம் மேலேயும் இருக்கும் படியாக பானைக்குள் குத்தெனக் குத்தென வைத்து, நீர் விட்டு அவிப்பர். பின்னர் நெடுக்கு வாட்டில் இரண்டாகக் கிழிப்பர். நடுவில் காணப்படும் முளை நீக்கப்படும். இவ்வாறு கிழித்துப் பெறப்படும் துண்டுகளைப் பாய்களில் பரவியோ அல்லது நூல்களில் கோர்த்து கொடிகளில் தொங்க விட்டோ வெயிலில் காய விடுவர். நன்றாகக் காய்ந்தபின் இவற்றை ஓலைப் பெட்டிகளில் அல்லது சாடிகளில் இட்டுப் பாதுகாப்பர்.



# மரவள்ளிப் பொரியல் அம்மம்மா...!

உரையாடல் - அ. நி. சர்மி
(நான்காம் வருட மாணவி,
ஊடகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)



யாழ்ப்பாணத்து மரவள்ளிக் கிழங்கும் சம்பலும் என்றால் நாவில் உமிழ் நீர் சுரக்கும். ஏனோ இப்போதெல்லாம் மரவள்ளிக்கிழங்கின் சுவையை எங்கள் மண் மறந்துவிட்டதோ என்ற எண்ணம் இடையிடையே தோன்றும். பழமையில் பசி தீர்த்த இந்த மரவள்ளிக் கிழங்கு இன்று சுவை தீர்க்க மட்டும் பயன்படுகின்றது. சரி அப்படி என்றாலும் மாச்சத்து கிடைக்கட்டுமே.

மரவள்ளிக்கிழங்கு பற்றிய நீண்ட நாள் சிந்தனையை நண்பர்கள் வட்டத்தில் கல்லாசனம் ஒன்றில் பகிர்ந்து கொண்டேன். அப்போது நண்பி சொல்லிச் சென்ற செய்திதான் இந்த நேர்காணலின் ஆரம்பப் புள்ளி. தாவடியில் சிறிய பரப்பைக் கொண்ட ஒரு கடை. பெயர்ப் பலகை இல்லை. பெயர்ப்பலகை என்பது அடையாளம் மட்டுமே. அந்த கடைக்கு வாடிக்கையாளர் கூட்டம் தான் பெரிய அடையாளம். நண்பி சொன்ன மரவள்ளிக் கிழங்குப் பொரியலின் சிலாகிப்பு அப்படி என்ன தான் சுவை என்பதை கண்டறியும் ஆவலைத் தூண்டியிருந்தது. அது தான் அந்தக் கடையின் முன் என் மோட்டார் சைக்கிளை நிறுத்தக் காரணமும்.

கடையில் இளம் வயதினர், பள்ளிக் கூடம் விட்டு வீடு செல்லும் மாணவர், மாலை நேர நொறுக்குத் தீனி தேவைப்படும் வயதானவர், எனப் பல ரகங்களில் வாடிக்கையாளர்களைக் காண முடிந்தது. எல்லோரும் வாய் நிறைய 'அம்மம்மா!' என்று உரிமையோடு கூப்பிட்டு, தங்களுக்கு தேவையான மரவள்ளிப் பொரியலை வாங்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களின் பின் நின்ற நானும் ஒரு வழியாக "அம்மம்மா! எனக்கு 50 ரூபாக்கு மரவள்ளிக்கிழங்குப் பொரியல்" என்று கேட்டு வாங்கி வந்துவிட்டேன். உண்மையில் அந்த மரவள்ளிக் கிழங்கில் ஏதோ ஒரு பழமையின் சுவையும் புதுமையின் உத்தியும் புகுத்தப்பட்டிருப்பதனை உணர்ந்தேன். சரி என்னதான் ரகசியம் இருக்கிறது இந்த பொரியலில் எனக் கேட்டுவிடலாம் எனது தோன்றியது. அடுத்த நாளும் அதே கடைக்கு நண்பியுடன் சென்றேன். பெரிதாக கூட்டம் இல்லாத மத்தியான வேளை, அம்மம்மா அன்றைய வியாபாரத்துக்கான ஏற்பாடுகளில் இருந்தார். [illegible]தான தயக்கத்தோடு உரையாடத் தொடங்கினோம்.



**அம்மம்மா** :- (மலர்ந்த முகத்துடன்) சொல்லம்மா! எவ்வளவுக்கு வேணும்

**நான்** :- (முதல் நாள் போல 50 ரூபாவை நீட்டி, என்னை பல்கலை ஊடகத் துறை மாணவி என்பதனை அறிமுகப்படுத்திக் கொண்டேன்) அம்மம்மா மரவள்ளிக்கிழங்குப் பொரியல் அந்த மாதிரி இருக்கு. அப்பிடி உங்கட பொரியல்ல என்ன ரகசியம்? கொஞ்சம் சொல்லுங்கோ நாங்களும் தெரிஞ்சு கொள்ளுவம்.

**அம்மம்மா** :- (சிரித்துக் கொண்டு) இதைத் தான் வாறவை எல்லாரும் கேக்கினம். நான் ஒரு ரகசியமும் மறைக்கேல ஆச்சி. நாங்கள் எந்த வேலை செய்தாலும் நியாயத்தோட சரியாய்த் தரத்தோட செய்த எல்லாம் நல்ல தான் வரும்.

**நான்** :- அம்மம்மா, பொரியலுக்கு மரவள்ளிக்கிழங்கு எப்படி தெரிவு செய்யிறீங்கள்.?

**அம்மம்மா** :- எனக்கு தெரிஞ்சவர் ஒருத்தர் -ஜெகன் எண்டு பேர் -மரவள்ளிக்கிழங்கு தோட்டம் வைச்சிருக்கிறார். நான் எப்போவும் அவரிட்டத்தான் மரவள்ளிக்கிழங்கு வாங்கிறனான். எனக்கு போய் வாங்க எல்லாம் ஏலாது. அவரே கடைக்குக் கொண்டு வந்து தருவார். மரவள்ளிக் கிழங்குத் தட்டுப்பாடான நேரம் எண்டாலும் மலிவான நேரம் எண்டாலும் அவரிட்டையே வாங்கிறனான். ஜெகன்ர தோட்டத்து மரவள்ளிக்கிழங்கில தான் ஏதோ மாயம் போல.

**நான்** :- இந்த கடை எவ்வளவு காலமா நடத்துறீங்கள்?

**அம்மம்மா** :- ஆறு வருஷமா, தாவடில கடை வைச்சிருக்கிறன். முதல் இதுல இருந்து ரெண்டாவது கடையில தான் (கையை வலது பக்கம் நோக்கி அடையாளம் காட்டுகிறார்) "சண்முகாஸ்" என்ற பேரில பேர்ப் பலகை வைச்சு நடத்தினம். ரோட்டு பெருப்பிக்கேக்க கடை உடைச்சாச்சு. பிறகு இதுல கடை எடுத்து நடத்திறன்.

**நான்** :- அம்மம்மா உங்கட பேர் என்ன? வீட்டு நிலைமை எப்படி, நீங்க கடை நடத்துறதுக்கு?

**அம்மம்மா** :- என்ர பேர் பத்மநாதன் ரஞ்சினிதேவி. எனக்கு 3 பிள்ளைகள். எல்லாரும் நல்ல இருக்கினம். இந்த கடை என்ர மகள் தான் முதல் நடத்தினவர். பிறகு அவருக்கு வெளிநாட்டுக்கு போற ஆசை வந்திட்டு. அவர் வெளிநாட்டுக்கு போயிட்டார். பிறகு நான் இந்தக் கடையை எடுத்து நடத்திறன்

(கடைக்கு வாடிக்கையாளர்கள் வந்த வண்ணம் இருந்தனர். நாங்கள் அம்மம்மாவின் வியாபாரத்தைக் குழப்ப வேண்டாம் என்று கொஞ்சம் விலகி நின்று, வாங்கிய மரவள்ளிப் பொரியலை சாப்பிட்டுக் கொண்டு நின்றோம். ஆட்கள் போக மீண்டும் தொடர்ந்தார்)

என்ர வீட்ல நல்ல ஒத்துழைப்பு கடை நடத்திறத்துக்கு. ஆனா ஒரு நாள் வருத்தம் எண்டு வீட்ல சொன்னா உடனே கடையைத் தான் சொல்லு வாங்கள். ஏலாத நேரத்தில எதுக்கு இப்பிடி கஷ்டப்படோணும் எண்டு.

**நான்** :- நீங்கள் மட்டும் தனியா கடை வேலையளைச் செய்யிறீங்களோ?

**அம்மம்மா** :- இல்லை, என்னோட ஒராள் வேலைக்கு இருக்கிறா. (அந்த பெண்மணியை அழைத்து அறிமுகப்படுத்தினார்) இவா கருணதாஸ் தயாநிதி. இந்தக் கடை திறந்து 6 வருஷமா என்னோடையே இருக்கிறா. நான் வருத்தம் எண்டு இருந்தாக் கூட, அவா வேற எங்கையும் வேலைக்கு போனதில்லை என்னோடையே இஞ்சை இருக்கிறா. (இப்போ வரைக்கும் கடையில) மற்றது ஜெகன். நல்ல உதவி. கடையிலையே கொண்டு வந்து மரவள்ளிகிழங்கைத் தருவார். வீட்டில பிள்ளைகளும் எனக்குத் துணையா இருக்கினம்.

**நான்** :- சின்னக் கடையா இருக்கே. நிறைய வாடிக்கையாளர்கள் வருகினம். கடையைப் பெரிசாக்கும் எண்ணம் இருக்கோ?

**அம்மம்மா** :- என்ர வயசுக்கு இனிக் கஷ்டப்பட்டு உழைக்கோணும் எண்டு இல்லையம்மா, பொழுது போக்கா செய்திட்டு இருக்கிறன். இந்தக் கடை தான் எனக்கு சரி. பெரிய கடையாய்ப் போட்டு தேவையில்லாம உலைச்சலும், களைப்பும் தான் வரும். இந்தக் கடையில எனக்கு நல்ல திருப்தி. இதுவே போதும்.



**நான்** :- மரவள்ளிக்கிழங்கு பொரியலுக்கு என்ன சுவையூட்டி போடுறனீங்கள்?

**அம்மம்மா** :- நானே வறுத்து இடிக்கிற மிளகாய்த்தூளும், தேவையான உப்பும் தான் போடுறது. வேற ஒண்டும் இல்லை.

**நான்** :- யாழ்ப்பாணத்தில் நொறுக்குத்தீனிப் பண்டங்கள் செய்ய நிறையக் கடைகள் இருக்கு. பெரிய அளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யிற கடைகளும் இருக்கு. அதுகளை போட்டியா நினைக்கிறீங்களா?

**அம்மம்மா** :- போட்டி எண்டுறது எதை வைச்சுச் சொல்றது . நான் அப்பிடி யாரையுமே நினைக்கேல்ல. அதெல்லாம் பெரிய கடைகள். என்னட்ட வாற வாடிக்கையாளர்கள் தொடர்ந்து என்னட்டத்தான் வருகினம். அவர்களுக்கு பிடிச்ச மாதிரி என்ர கடை மரவள்ளிக்கிழங்குப் பொரியல் இருக்கு. அதால எனக்கு வியாபாரம் நடக்குது. வெளிநாடுகளில இருந்து நிறையப் பேர் வருவினம் வந்து உங்களை பற்றி "பேஸ்புக்கில" பாத்தனாங்கள். நல்லாச் செய்யிறீங்கள். நல்லா இருக்கோணும் எண்டெல்லாம் வாழ்த்தி விட்டுப் போவினம். அதுவே எனக்குப் போதும்.



**நான்** :- எத்தின மணி வரை கடை திறந்திருக்கும் ? எவ்வளவு நேரம் இந்த கடைக்காக உழைக்கிறீர்கள்?

**அம்மம்மா** :- மதியம் 11 மணிக்கு திறப்பன். இரவு 9 மணி வரை ஒரே ஆக்கள் வந்தபடிதான். தயாநிதி பொரிக்கிற வேலைய பாக்க, நான் உப்பு; தூள் அளவாய்ப் போட்டு கொடுக்கிறதால வேலை உடனே, உடனே நடக்கும். மிஷின்ல தான் பொரிக்கிறது, அளவாத்தான் வெட்டுறது. அதால வேலையும் கெதியா முடியும்.

**நான்** :- ஒரு நாளைக்கு எத்தனை கிலோ மரவள்ளிக்கிழங்கு விற்பனையாகும்? செலவுகள் போக வருமானம் போதுமாக உள்ளதா?

**அம்மம்மா** :- ஒரு நாளைக்கு 40-60 கிலோ மரவள்ளிக்கிழங்கு பொரிப்பம். அவ்வளவும் வித்திடுவம். சிலவேளை ஆக்கள் கூடினா 60 கிலோவை விடக் கூடும். இந்த கடைக்கு 2000 ரூபா வாடகை அம்மாச்சி. விக்கிற காசில செலவு போக கொஞ்சம் மிஞ்சும். பெரிய இலாபம் வராது. ஆனா நட்டம் இல்லை.

**நான்** :- இரவு நேரம் ஒரு பெண் மணியாய் கடை நடத்துவதில் உங்களுக்கு இருக்கிற சவால்கள் என்ன?

**அம்மம்மா** :- குடிக்கிற ஆக்கள் நிறையப் பேர் வந்து மரவள்ளிக்கிழங்கு பொரியல் வாங்குவினம். ஆனா என்னட்ட 'அம்மம்மா' எண்டு மரியாதையோட கேட்டு வாங்குவினமே தவிர வேற எந்த பிரச்சினைக்கும் வாறதில்லை. நானும் அவங்களிட்ட இருக்கிற காசுக்கு அளவா கொடுத்து விட்டிடுறது. மற்றபடி நல்ல மரியாதையா தான் எல்லாரும் நடந்து கொள்வார்கள்.

**நான்** :- இந்த வியாபாரத்தில் நீங்கள் இவ்வளவு காலம் நிலைத்திருப்பதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

**அம்மம்மா** :- 'பொறுமை'. பொறுமை தான் எல்லாம் அம்மா. பொறுமையாச் செய்ய வேண்டிய வேலை இது. அப்பிடி செய்றதால தான் இண்டைக்கு என்னட்ட இவ்வளவு வாடிக்கையாளர்கள் வருகினம்.

(தொடர்ந்தும் வாடிக்கையாளர்கள் வந்த வண்ணம் இருந்தனர். அந்த நாளை நாம் முழுவதும் எடுத்துக் கொள்ள விரும்பாமல், அம்மம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டோம். நல்லாசிகள் நாவில் உதிர்த்து அதே மலர்ந்த முகத்துடன் வழியனுப்பி வைத்தார் தாவடி மரவள்ளிப் பொரியல் அம்மம்மா..)

முனைவர் ஜெ.அரங்கராஜ்

வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
திருமுருகாற்றுப்படை 120)

பயிர்வளை யரவமொடு வயிரெடுத்தூதி

பெருங்கதை 1/38: 4

எனும் சான்றோர் செய்யுள் அடிகளில் 'வளை' எனும் சொல் 'சங்கு' எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம். மேலும், குற்றமற்ற சங்குடன் தலைமைத் தன்மையை ஒப்பிட்டமையை,

இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்

வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி

பெரும்பாண். 34-35

எனும் அடிகளின்வழி அறியலாம். வண்ணன் எனும் சொல், புணர்ச்சியில் இடைக்குறையாகி வணன் என முடிவுறும். அவ்வகையில் இரவு (இரா) + வண்ணன் = இராவணன் (இராக்கால நிறத்தினையுடையவன்) எனவமையும். அது போல் வளை + வண்ணன் = வளைவணன் (சங்கின் நிறத்தையுடையவன்) என்பதாயிற்று.

நாகர் தலைவனான வளை வணனின் மனைவியின் பெயர் வாசமயிலை எனச் சுட்டப்பட்டுள்ளன. இப்பெயரும் தமிழ்ப் பெயரே. மயிலை எனும் சொல் இன்று அழகிய பெண்களைக் குறிக்கக் கொங்கு நாட்டிலே வழங்குகின்றது. மயிலை எனும் சொல் மணம் பொருந்திய இருவாட்சி (மல்லிகையில் ஒருவகை) மலரின் பெயராகப் பண்டைக் காலத்தில் வழங்கியமையை,

மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள் புறநானூறு 34 / 2

எனும் அடிகளில் காணலாம். மயிற் பீலியின் வளைவுகளை ஒத்த சுழற்சியையுடைய, சங்கினைப் போன்ற, இளமடந்தையைப் பீலிவளை எனச் சுட்டியுள்ளமையைக் காணலாம். பீலியின் வளைந்த கண்ணினைச் சான்று காட்டினமையினை,

பீலி யொன்பொறிக் கருவிளை யாட்டி

குறுந். 110/4

எனும் குறுந் தொகையடிகளால் அறியலாம். மேற்கண்டவற்றால் மணி பல்லவத்தில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களே என்பதினை அறிந்தோம். அந் நாகர்கள் பௌத்தர்கள் என்பதினையும், மணிமேகலையின் வழி அறியலாம். பீலிவளை சோழ மன்னனின் குழந்தையைக் கையிலேந்தி மணி பல்லவத்திலுள்ள புத்தபீடிகையை வலம் வந்து வணங்கிப் பின் அக்குழவியைச் சோழனிடம் ஒப்படைக்கக் கம்பலச் செட்டியிடம் கொடுத்தமையைப் பின்வரும் அடிகளின் வழி அறியலாம்.

நாக நன்னா டாள்வோன் றன்மகள்

பீலிவளை யென்பாள் பெண்டிரின் பிக்கோள்

பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய

புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தியித்

தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட

மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழிக்

கம்பளச் செட்டி கலம்வந் திறுப்ப

அங்கவன் பாற்சென் றவன்றிற மறிந்து

கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடுத்தலும்

பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்

மணிமேகலை- 25/179-188

மேற்கண்டவற்றின் வழி பண்டு மணிபல்லவத்திலும் நாகநாட்டிலும் வாழ்ந்த தமிழர்கள் பௌத்த மதத்தினைப் பின்பற்றினமையை அறியலாம். அத்தோடு அதே நாகநாட்டுப் பீலிவளைக்குச் சோழன் வழியுதித்த அக்குழவி கம்பலச் செட்டியின் கலம் கடலில் அழிய (மணிமேகலை-29/3-15) திரையினால் கரைசேர்ந்து சோழனிடம் ஒப்படைக்கப் பட்டமையால் திரையன் எனப்பட்டான். இவனே பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பெரும்பாணாற்றுப் படையின் தலைவனாகப் பாடப் பெற்ற தொண்டைமானி ளந்திரையன். இதனைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம்.

முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்

திரைதரு மரபி னுரவோ னும்பன்

பெரும்பாணாற்றுப்படை 30-31

இவ்வடிகளுக்கு உரைகூறும் நச்சினார்க்கினியர் நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வே னென்ற பொழுது தொண்டையை அடையாளமாகக்கட்டி கடலிலேவிட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்வித்து நாட்டாட்சி கொடுப்பவென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின் திரைய னென்று பெயர் பெற்ற கதை கூறினார் என்பனவாக விளக்குகிறார். இதற்கான மற்றொரு சான்று பெரும்பாணாற்றுப் படையின் இறுதி வெண்பாவிலும் காணக்கிடைக்கின்றது.

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல் பிற்றாய்

மங்குல்சூழ் மாக்கட வார்ப்பதூஉம் வெஞ்சினவேற்

கான் பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை

யான்பயந்தே னென்னுஞ் செருக்கு

பெரும்பாணாற்றுப்படை இறுதி வெண்பா

இதன்வழி மணிமேகலைக் காப்பியத்திற்குப் பல நூற்றாண்டுகள் முந்திய பத்துப் பாட்டில் பீலிவளையின் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றமை கொண்டு பௌத்தம் தமிழகத்திலும் ஈழத்திலும் பரவத்தலைப்பட்ட காலத்தில் நடந்த நிகழ்வுகளாக இவற்றைக் கொள்ளலாம்.

மேலும் பீலிளையின் மகனான இளந்திரையன் ஆண்ட தொண்டை நாட்டுப் பகுதி பண்டு மாவிலங்கை எனப் பட்டது. இவ் மாவிலங்கையை ஓவியர் எனும் நாகமரபினர் ஆண்டனர். அதே ஓவியர் மரபினர் ஈழத்து வடபாலினையும் ஆண்டதாக வி.கனகசபைபிள்ளை குறிப்பிடுவார். அந்நாகமரபினரே பௌத்தத்தைக் கைக்கொண்ட தமிழராவர் எனலாம்.

மேற்கண்டவற்றின் வழி அசோகர் காலத்தில் தமிழகம் போந்த பௌத்தம் பின் மணிபல்லவம் வழியாக ஈழம் பெயர்ந்து அங்குள்ள தமிழர்களிடம் பரவி, பிறகே சிங்கள மக்களிடமும் பரவிற்றெனலாம். இதனை மேலும் சில சான்றுகள் வழியிலும் அறியலாம்.

தொண்டை நாட்டில் முதன்முதலில் பௌத்தம் தலைப்பட்ட இடம் காஞ்சிபுரம் இதனால் இதனைப் பௌத்த காஞ்சி எனத் தொண்டை நாட்டினர் கொண்டாடினர். இதற்கான எச்சங்களை இன்றைய காஞ்சியிலும் காணவியலும். அறப்பனஞ்சேரி, அறவணஞ்சேரி, புத்தேரித்தெரு என்பனவான இடப்பெயர் வழக்குகள் இன்றும் அங்கு உண்டு. மேலும், காஞ்சியில் முதன்முதல் தோன்றிய விகாரை மூலசோமவிகாரை எனப்பட்டது (மூலம்-முதல்) இது குறித்து மயிலை சீனி வேங்கடசாமியின் கூற்றுகளைக் காண்போம்.

கி.பி.5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த புத்தகோச ஆசாரியார், பீடக நூல்களுக்கு உரைகள் எழுதியவர். இவர் தமது நண்பர்களான சுமதி, ஜோதிபாலர் என்னும் பௌத்த பிக்குகளுடன் காஞ்சிபுரத்தில் வசித்திருந்ததாகவும் அவர்களின் வேண்டுகோளின் படி இலங்கைக்குச் சென்றதாகவும் தமது மனோரதபூரணீ என்னும் உரையில் குறிப்பிடுகிறார். புத்தகோசர் காஞ்சியில் இருந்தபோது அவருக்கு "அண்டாத்தகதா" என்னும் நூல் கிடைத்தாகவும் அந்நூல், தாம் திரிபிடகங்களுக்கு உரை எழுதுவதற்குத் துணையாக இருந்தது என்றும் "சாமந்தபாசாதிகா" என்னும் உரையில் இவர் கூறுகிறார்.

ஆசாரிய தர்மபாலரும், அபிதம்மாத்த சங்கிரதம் முதலிய நூல்களை இயற்றிய அநுருத்தரும் காஞ்சியில் பிறந்தவர்கள் என்பனவாகக் கூறிச்செல்கின்றார்.

இவை போன்றதே காவிரிப்பூம் பட்டினத்திலும் மதுரையிலும் பல விகாரைகள் இருந்தன. இதனை மயிலையாரின் நூலில் விரிவாகக் காணலாம்.

தமிழகத்தில் உள்ள தலை நகரங்களில் பௌத்தப் பள்ளிகள் பெரும்புகழ் பெற்றதைப் போலவே ஈழத்திலும் பல பள்ளிகள் பெரும் பேறுபெற்றன.

ஈழத்தின் வாயிலாக அமைந்த மணிபல்லவத்தில் புத்தர் முதன் முதலாக வந்தார் எனப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. புத்தர் வந்தார் என்பது மகிந்தர் முதலான தேரர்களின் வருகையைக் குறிப்பதாகும். தமிழ்நாகர்களின் அரசில் மணிபல்லவம் முதல்நிலை பௌத்த புனிதத்தலமாயிற்று. நாக அரசைக்கடந்து அநுராதபுரம் சென்ற மகிந்தன் அங்கு சமயப்பரப்புரை செய்ய எடுப்பித்த விகாரை பிற்காலத்தில் மகிந்தலை (மகிந்தனின் தலைமையிடம்) என அழைக்கப்படுவதாயிற்று. தமிழ் பௌத்தருக்கு மணிபல்லவம் தலைஇடம் ஆயினமை போல் சிங்களபௌத்தருக்கு மகிந்தலை தலையிடமாயிற்று. ஆனால், இலங்கைக்கு முதலில் புத்தர் வந்ததாகக் கூறப்படும் இடம் மணிபல்லவமே. நாக நாட்டு மக்களும் அநுராதபுர அரசு மக்களும் தத்தம் இடங்களைத் தலையிடமாகக் (முதல்) கொண்டு போற்றினர். இந்நிலையில் எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு நாகநாட்டில் அரசரும் மக்களும் பௌத்தத்தைத் துறந்து சைவசமயத்தின்பால் சென்றமையால், பௌத்தம் அந்தச் சூழ்நிலையில் நாகநாட்டில் வீழத் தொடங்கியது. பௌத்தத் திருப்பதிகள் போற்றுவார் இன்மையால் தமிழகப் பௌத்தப் பள்ளிகள் அழிந்தமை போலவே பெரிதும் சிதைவுற்றன. ஆயினும் நாக நாட்டிற்குப் புறத்தே மகிந்தலையைச் சிங்களவர்கள் தங்களது முதல் புனிதத்தலமாகவும் மணிபல்லவத்தை இரண்டாவது புனிதத்தலமாகவும் குறிப்பிடத்தொடங்கினர். ஆனால், முதலில் பௌத்தம் வந்தது மணிபல்லவத்திற்கே என்பதனை அவர்களால் மறுக்க இயலவில்லை. ஆயினும் தமிழர் விட்டொழித்த தலத்தைத் தங்களுடைய இரண்டாம் நிலைத்தலமாகவே வைக்க எண்ணினர். இதுவே மணிபல்லவம் தமிழ்ப் பௌத்தத்தலம் என்பதற்கு ஒரு சான்றாகும். ஏனெனில் அது சிங்களத் தலமாக இருப்பின் இலங்கையில் முதல் புனிதத்தலமாகவல்லவா இருந்திருக்க வேண்டும். தமிழ்ப் பௌத்தத் தலமாக இருந்ததால் இரண்டாம் தலமாயிற்று. காலனிய ஆட்சிச் சூழலில் இடித்த இத்தலங்களை எல்லாம் டச்சுக்காரர் ஆட்சியில் புதுப்பித்துக் கொண்டார்கள்.

( அடுத்த வாரமும்...)



BUDAPEST
CANDIDATE CITY
OLYMPIC GAMES 2024

LOS ANGELES
CANDIDATE CITY
OLYMPIC GAMES 2024

PARIS
Candidate City
Olympic Games 2024

ROMA
CANDIDATE CITY
OLYMPIC GAMES 2024

# 2024?

# வெற்றிகரமான பின்வாங்கலா?

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நாடுகளின் பட்டியலில் பிரான்ஸ் (பாரிஸ்), அமெரிக்கா (லொஸ்ஏஞ்சல்ஸ்), இத்தாலி (றோம்), ஹங்கேரி (புடபெஸ்ற்), ஜேர்மனி (ஹம்பேர்க்) ஆகியவற்றிடையே போட்டி நிலவினாலும் சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பட்டியலில் இருந்து ஜேர்மனி உத்தியோக பூர்வமாக விலகுவதாக அறிவித்திருந் தது. அதேபோல தற்போது இதிலிருந்து இத்தாலியும் விலகுவதாக இத்தாலிய ஒலிம்பிக் செயற்குழு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

றோம் நகரின் மேயராகப் புதிதாகப் பதவியேற்ற வேர்ஜினியா றக்கி நிதி நெருக்கடி காரணமாக றோம் நகர் பல்வேறு சவால்களைச் சந்தித்து வருவதனால் அதனைச் தீர்த்த பின்னரே போட்டிகளை நடத்து வது குறித்து சிந்திக்க முடியும் என்று கூறியுள்ளார். இதற்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை றோம் நகரசபையும் வழங்கி உள்ளது.

அதேவேளை இத்தாலி ஒலிம்பிக் செயற் குழுவின் தலைவர் ஜியோவன்னி மாலகோ மூன்று ஆண்டுகளாகத் திட்டமிட்டு உழைத்த செயற் திட்டத்தை கைவிடுவது கவலையையும் சர்வதேச ஒலிம்பிக் குழு போட்டிகளை நடத்துவதற்காகத் தரவிருந்த 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் பணத்தையும் அதனால் ஏற்படக் கூடிய ஒரு லட்சத் திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்களையும் இழப்பதென்பது பொறுப்பற்ற செயல் எனக் கூறி மேயரின் முடிவின் மீது தனக்கிருந்த விசனத் தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒருவகையில் இத்தாலியின் இத்தகைய முடிவு பொருளாதார நலன் சார்ந்த சில நன்மைகளையும் மீறி மக்கள் நலனைப் பெரிதும் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்ட முடிவு என்ற வகையில் வரவேற் கத்தக்கதே. ஏனென்றால் இம்முறை நடந்த ஒலிம்பிக் போட்டிகளை பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து பிறேசில் நடத்தியதையும், அரசுக்கு எதிராக எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன என்பதையும் வைத்துப் பார்க்கும் பொழுது இந்த உண்மை புரியும்.

ஆனாலும் இன்னும் இறுதி முடிவு தெரியாத பட்சத்திலும் இத்தாலி முதலில் போட்டியை நடத்துவதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டு இறுதி நேரத்தில் விலகுவது இது தொடர்ச்சியாக இரண்டாவது சந்தர்ப்பமாகும். முன்னதாக 2020 ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடத்தை தெரிவு செய்வதற்கான பட்டியலில் இருந்தும் இறுதி நேரத்தில் இத்தாலி விலகி இருந்தமை தூர நோக்கில் சிந்தித்து செயற்படாததன் விளைவையே எடுத்துக் காட்டியது.

இத்தாலி விலகியதில் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் ஒரு கவலை உள்ளது. இதுவரை ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் சேர்க்கப்படவில்லை. போட்டியை நடத்தும் நாட்டுக்கு புதிதாக 5 விளையாட்டுக்களைச் சேர்க்கும் உரிமை உள்ளது. அந்த வகையில் 2024 ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் இத்தாலி வெற்றி பெற்றால் கிரிக் கெட்டை அதில் சேர்ப்பதற்கு இத்தாலி ஒலிம்பிக் செயற்குழுவின் தலைவர் முன்வந்திருந்தார். கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் வாக்கைப் பெற்றுக் கொள்வதற்கான தந்திரோபாயமும் அதில் அடங்கி இருந்தது.

எது எப்படியோ தற்போது 2024 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான இறுதிப் பட்டியலில் அமெரிக்கா, பிரான்ஸ், ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே களத்தில் உள்ளன. 2017 செப்ரெம்பர் மாதம் பெரு நாட்டில் நடைபெறவுள்ள 130 ஆவது சர்வதேச ஒலிம்பிக் குழுக் கூட்டத்தி லேயே இதன் இறுதி முடிவு தெரிய வரும்.

# போரும் அமைதியும்


மறுபடியும் சர்ச்சையில் சிக்கி உள்ளார் ஆர்ஜென்ரீனாவின் உதைபந்தாட்ட ஜாம்பவான் மரடோனா. விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவ்வப்போது ஏதாவது கருத்துக்கூறியும் ஏதாவதொரு பிரச்சினையிலும் சம்பந்தப்பட்டு ஊடகங்களின் கவனத்தை அடிக்கடி ஈர்த்துக் கொண்டிருப்பவர் மரடோனா.

இத்தாலியின் றோம் நகரில் அண்மையில் போப் பிரான்சிஸ் ஏற்பாட்டில் "அமைதிக்கான ஐக்கியம்" என்ற பெயரில் நட்பு உதைபந்தாட்டப் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் மரடோனா, றொனால் டின்கோ, ரொட்டி போன்ற முன்னாள் உதை பந்தாட்ட வீரர்கள் பலரும் பங்கு பற்றி இருந்தனர். இப்போட்டியில் வெள்ளை, நீலம் என இரு அணிகள் விளையாடி இருந்தன. இதில் 55 வயதான மரடோனா நீல அணியில் விளையாடி இருந்தார். வழமையாகப் பீலேயுடன் வார்த்தை மோதலில் ஈடுபடும் மரடோனா இம்முறை சொந்த நாட்டைச் சேர்ந்த முன்னாள் வீரரான வெள்ளை அணியைச் சேர்ந்த ஜூவான் செபாஸ்டியன் உடன் கைகலப்பில் ஈடுபட்டுள்ளார்.

முதல்பாதி ஆட்டம் முடிவடைந்து வீரர்கள் ஓய்வு அறைக்குச் செல்லும் போது மரடோனா வலிந்து வந்து எதனையோ ஜூவான் செபாஸ்டியனிடம் கூற முற்பட அதனை அவர் கருத்திலெடுக்காது சென்ற போதே வாக்குவாதம் நடந்து இறுதியில் கைகலப்பில் முடிவடைந்துள்ளது. ஆனாலும் கைகலப்பு எல்லை மீறிச் செல்வதற்குள் சகவீரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மரடோனாவைச் சமாதானப்படுத்தி அங்கிருந்து அழைத் துச் சென்றுள்ளனர்.



மரடோனா, ஜூவான் செபாஸ்டியனை கெட்ட வார்த்தையில் திட்டியதாலேயே மேற்படி கைகலப்பு ஏற்பட்டதாக இத்தாலி பத்திரிகைகள் எழுதியுள்ளன. அமைதிக்காக நடைபெற்ற போட்டியிலேயே கைகலப்பு ஏற்பட்டமையானது போட்டி ஏற்பாட்டாளர் களை அதிருப்தியடைய வைத்துள்ளது. இப்போட்டியின் மூலம் கிடைத்த பணம் முழுவதும் இத்தாலியில் அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.




# பார்த்த ஞாபகம் இல்லையோ?



பங்களாதேஸ்க்குச் சுற்றுலாப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணியில் இடம்பெற்ற சுழற்பந்து வீச்சாளரான கரேத் பட்டிக்கு இத்தொடர் தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்று. 39 வயதான கரேத் பட்டி 11 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளார். 2003 ஆம் ஆண்டு பங்களாதேஸ் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான கரேத் பட்டி இறுதியாக 2004 ஆம் ஆண்டு அண்டிகுவாவில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியிலேயே விளையாடி இருந்தார்.

அந்தப் போட்டியில் தான் பிறைன்லாறா தனது வரலாற்றுச் சாதனையான 400 ஓட்டங்களை ஆட்ட மிழக்காமல் பெற்றிருந்தார். அந்தப்போட்டியில் 52 ஓவர்கள் பந்து வீசிய கரேத் பட்டி இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றி 185 ஓட் டங்களைக் கொடுத்திருந்தார். அதன் பின்னர் அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

தற்போது இங்கிலாந்தில் நடைபெற்ற கவுண்டி சம்பியன்ஷிப் போட்டிகளில் சர்ரே அணிக்காக விளையாடித் தனது திறமையை நிரூபித்ததன் மூலம் இங்கிலாந்து அணியில் அவருக்கு இடம் கிடைத்துள்ளது. ஆனாலும் தற்போது நடைபெறவுள்ள பங்களாதேஸ் அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் அடில் ரஷீட், மொயின் அலி போன்ற சுழற் பந்து வீச்சாளர்களுக்கு மத்தியில் ஆடும் 11 பேர் அணியில் இவருக்கு இடம் கிடைக்குமா என்பது சந்தேகமே.

கரேத் பட்டி, இங்கிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள தன்னிலும் 20 வயது குறைந்த 19 வயதுச் சுழற்பந்து வீச்சாளரான ஹசீப் ஹமீட்டுடன் இணைந்து விளையாடுவதில் தனக்கொரு பிரச்சினையும் இல்லை என்கிறார். அத்தோடு ஆசிய நாடுகளின் ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமானவை என்பதால் விளையாடும் 11 பேரில் ஆடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயம் தனது திறமையை வெளிப்படுத்துவேன் என்று கூறியுள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 22.10.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.